அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

மலர்	யுவஷு வைகாசிமீ 2உ	இதழ்
6	1935ஷு மேமீ 15உ	5

பொருள் அடக்கம்

ரியர் குறிப்புகள்	... 322	பெரிய வீட்டுப் பேச்சு வாய் விட்டால் போச்சு	... 364
தல் நாடக மேடை	... 329	மனைவியே காதலி!	... 372
திர்பார்க்கும் காட்சி	... 330	பொய்சொல்லி வாழ்ந்தாரில்லை	376
ள்ளுவர் திருநாள்	... 337	வெளி விகடம்	... 384
பட்டபாடு	... 339	'நான் பாவியினும் கொடும் பாவி	... 387
ா	... 346		
ாள்ளை	... 358		

றிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை ன் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாக மாட்டார்.



நீடூழி வாழ்க!

இம்மாதம் முதல் வாரத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எங்கும்,
ஏன் உலகமெங்குமே, மாட்சிமை பொருந்திய ஐந்தாம் ஜார்ஜ்
சக்கரவர்த்தி சிம்மாசனம் ஏறி இருபத்தைந்தாண்டுகள் பூர்த்தி
யானதை கொண்டாடப்பட்டது. ஜார்ஜ் சக்கரவர்த்தியை பாராட்
டாத தேசமே கிடையாது எனலாம். அவர் சமாதானத்தி
தனது குடிகளின் க்ஷேமத்திலும் அதிக நாட்டமுள்ளவர். அவரு
டைய இந்நன்னோக்கத்தினாலேதான் இன்று ஐரோப்பாவில் சமா
தான முயற்சியும் ஆயுதக் குறைப்பு மகாநாடுகளும் நடைபெறுகின்
றன. அவர் தனது குடிகளிடத்தில் கொண்டுள்ள அன்பினால், அவர்
ஏகாதிபத்திய நாடுகளின் பிரதிநிதிகளுடன் எல்லாம் தாராளமாய்
கலந்து அளவளாவுகின்றார். தனது ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் நன்
மைக்கான காரியங்களில் ஊக்கங்காட்டி தானே நேரில் அதில் கலந்து
கொள்ளுகிறார். இன்று ஏகாதிபத்திய நாடுகள் பிரிந்து போகாது
ஐக்கியப்பட்டிருப்பதற்கு அவர் காட்டும் அன்பும் அநுதாபமுமே
முக்கியகாரணமாகும். அவர் காலத்தில் ஐரோப்பாவில் பெரும் சங்கட
மான காரியங்கள் நிகழ்ந்தன. அவைகளில் எல்லாம் மகாயுத்த
மிகப்பெரியது. நியாயத்திற்குப் போரிடுவதில் வெற்றி பெறவேண்
என்பதில் அவருக்கு மிகுந்த அவா இருந்தது என்றே கூறவே
யுத்தத்தின் போது அவர் பிரான்சுக்குச் சென்று கடற்பை
முதலியவைகளை மேற்பார்வை யிட்டதினாலே அது
வருகிறது. மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் 1865 ம் ஆ
பிறந்தார். அவர் காலஞ்சென்ற ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்
இரண்டாம் குமாரராவர். அவர் 1877-ல் கடற்படையில்
அதில் இரண்டு வருஷம் பயிற்சி பெற்றார். பின்னர்
மூன்றாண்டுகள் உலகத்தைச் சுற்றிப் பிரயாணம் செய்தார். 1
ஆண்டில் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். ஏழாம் எட்
சக்ரவர்த்தியின் மூத்த குமாரர் இறந்த பின் 1892-ல் பட்ட
இளவரசரானார். 1910-ம் ஆண்டு மே மாதம் 9-ந் தேதி அரச
1911 ம் ஆண்டில் ஜூன் மாதம் 22-ந் தேதி முடிசூட்டப்பட்ட
இந்தியாவினிடத்தில் அவருக்கு அதிக அனுதாபமுண்டு. அ
காட்டிக் கொள்ளுவதற்காக அவர் 1911-ம் ஆண்டில் டிச
மாதத்தில் இந்தியாவுக்கு வந்து 11-ந் தேதி டெல்லியில் தா

நடத்தினர். இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்குவதைப் பற்றி ஆராயக் கூடிய முதல் வட்டமேஜை மகாநாட்டையும் அவரே திறந்து வைத்தார். அவருடைய ஆட்சியில் இந்திய வியாபார மந்தத்தினலும் பணமுட்டடையினலும் எவ்வளவோ சங்கடப்பட்டும், அவர் காட்டிவந்த அனுதாபத்தினல், இந்தியா அவைகளை எல்லாம் கடந்து க்ஷேமமுற்று வருகிறது. மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியும் ராணி மேரியும் இன்னும் பல்லாண்டு அரசாண்டு தங்கள் குடிகளின் நன்மையைப் பாதுகாப்பார்களாக. அவர்கள் நீடூழி வாழ்க!

எதேச்சாதிகாரம் கடும் விரோதி

இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்குவதைப்பற்றி ஆராய நியமிக்கப்பட்ட கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியாரின் அறிக்கை சென்ற வருஷம் நவம்பர் மாதம் 22-ந் தேதி வெளியிடப்பட்டது. அப்பொழுது அவ்வறிக்கையில் குறைபாடுகள் அதிகமாயிருப்பதாயும், அது இந்தியாவுக்குக் கிஞ்சிற்றும் நியாயம் வழங்கவில்லை என்றும் அதை இந்தியாவில் எல்லா கட்சியினரும் கூட்டத்தினரும் பலமாகக் கண்டித்தனர். அதிலும் முக்கியமாய் மாகாண கவர்னர்களுக்கும் அரசப் பிரதிநிதிக்கும் விசேஷமான எதேச்சாதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும், அதனல் கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி அறிக்கை வகுத்திருக்கும் அரசியல் சீர்திருத்தம் இப்பொழுதிருக்கும் இரட்டை யாட்சியையும்விட மிக மோசமானதாகி விடுகின்றதென்றும் ஏகமனதாய் நாடெங்கும் கண்டிக்கப்பட்டது. இவ்விதம் ஏகமனதாகக் கண்டிப்பதைப் பார்த்த பின் அரசாங்கத்தால் சும்மா இருக்கமுடியவில்லை. எனவே கவர்னர்களும் வைசிராயும் அந்த அதிகாரத்திற்கு வியாக்கியானம் கூற முன் வந்தனர். சென்னை கவர்னர் லார்டு எர்ஸ்கின் ஒரு சமயம் 'விசேஷ அதிகாரங்கள் எல்லாநாட்டிலும் எல்லா அரசியல் சட்டத்திலும் இருக்கத்தான் செய்கின்றன. அவ்விதம் சட்டத்தில் அதிகாரமிருப்பதால் அவைகளை எப்பொழுதும் அனுஷ்டிக்கப்படும் என்பதில்லை. பொதுஜன அமைதிக்குப் பங்கமேற்படும்போதும் நெருக்கடியான நிலை ஏற்படும் போதும் நிர்வாகம் ஸ்தம்பிக்கக் கூடிய நிலைமை உண்டாகும்போதுந்தான் மிக அபூர்வமாய் அவ்வதிகாரங்களை உபயோகிக்கப்படும். அதனல் அவ்வதிகாரங்களைப்பற்றி கவலையோ பயமோ கொள்ள வேண்டியதில்லை' என்று கூறினர். வைஸ்ராய் வில்லிங்டன் பிரபுவும் ஒரு சமயம் இவ்விதமே கூறியுள்ளார். ஆனல் இந்தியர்கள் இந்த வியாக்கியானங்களில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஏனென்றல் எப்பொழுதும் அரசாங்கத்தார் சட்டங்கட்கு கூறும் வியாக்கியானத்துக்கும் அனுஷ்டானத்துக்கும் கொஞ்சமேனும் பொருத்தமே இருப்பதில்லை. 'படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்' என்ற பொருத்தந்தான் அந்த வியாக்கியானத்துக்கும்

அனுஷ்டானத்துக்கும் இருப்பதை தவிர வேறு எவ்விதமான பொருத்தத்தையும் காணமுடியாது. இப்பொழுது இந்தியச் சட்ட சபையில் நடந்த காரியங்கள் சம்பந்தமாய் இந்திய அரசாங்கத்தார் நடந்து கொண்ட மாதிரி இதற்கு சரியான இலக்காக விளங்குகின்றது. வைஸ்ராய் சட்டசபையின் செய்கைகளேயும் அபிப்பிராயங்களேயும் பொருட்படுத்தாமல் தனக்குள்ள விசேஷ அதிகாரங்களினுல் காரியங்களை செய்து விட்டார். எனவே இவ்விதம் செய்யும் இவர்கள், பாதுகாப்பு விதிகளுக்கும் விசேஷ அதிகாரங்கட்கும் கூறும் பொருள்களில் யார் நம்பிக்கை வைப்பார்கள்? சர்வ சாதாரணமான காரியங்களுக்கும் எதேச்சாதிகாரங்களை உபயோகிக்கும் இவர்கள் கூற்றில் எப்படி நம்பிக்கை பிறக்கும்? அதிலும் இவ்விதமான அதிகாரங்களை கவர்னர்களுக்கும் வைஸ்ராய்க்கும் கொடுப்பதைப் பற்றி நாடு மிகுந்த அதிருப்தி அடைந்திருக்கும்போது இவ்வதிகாரங்களை பிரயோகிப்பது, ஏற்கனவே பாதை கொடுத்துக்கொண்டிருக்கும் புண்ணில் கோல்கொண்டு துலாவுவதுபோ லல்லவோ இருக்கிறது? நிற்க, வைஸ்ராய் தனக்குள்ள விசேஷ அதிகாரத்தை உபயோகிக்கக் கூடிய நிலை ஏதாவது ஏற்பட்டுள்ளதா அல்லது அவ்வதிகாரத்தை உபயோகிக்க பொதுஜன அமைதிக்கு ஏதாவது ஆபத்தேற்பட்டுள்ளதா, நிர்வாகம் ஸ்தம்பித்து போகக் கூடிய நிலை ஏதாவது ஏற்பட்டுள்ளதா அல்லது பொருளாதாரத்தில் ஏதாவது சீர்குலைவு ஏற்பட்டுள்ளதா என்பதை ஒரு சிறிது ஆராய்வோம். இந்தியச் சட்டசபை வரவு செலவு மசோதாவுக்கு கீழ்காணும் ஐந்து திருத்தத் தீர்மானங்களை நிறைவேற்றியது, அதாவது வரிக் குறைவைச் செய்தது:—

1. உப்புவரி மணங்குக்கு ரூ 1—4—0 என்றிருப்பதை 12 அணுவாகக் குறைக்க வேண்டும்.

2. ஒரு தோலா எடைக்கு அதிகப்படாத கடிதங்கட்கு ஒரு அணுவும்; $2\frac{1}{2}$-தோலா எடைக்கு அதிகப்படாத கடிதங்கட்கு ஒன்றே காலணுவும் தபால் கட்டணம் வசூலிக்க வேண்டும்.

3. தபால் கார்டு விலையை அரையணு வாக்கவேண்டும். ரிப்ளை கார்டு விலையை ஒரு அணு ஆக்கவேண்டும்.

4. மாதிரி பாக்கட்டுகட்கு கீழ்கண்ட கட்டணம் விதிக்க வேண்டும்:—$2\frac{1}{2}$ தோலாக்கள் எடைக்கு மேற்படாதவைகட்கு அரையணு. $2\frac{1}{2}$-தோலாவுக்கு மேல் 5 தோலாக்கள் எடைக்கு மேற்படாதவைகட்கு முக்காலணு. அதற்குமேல் அதிகப்படியாகும் 5 தோலாக்கள் எடைக்கு அரையணு அதிகம் வசூலிக்கவேண்டும். (அதாவது 5-க்குமேல் பத்து தோலாக்கள் எடைவரை $1\frac{1}{4}$ அணு, 10-க்கு மேல் 15 தோலாக்கள்வரை $1\frac{3}{4}$ அணு)

5. வருஷத்தில் 2000-க்கு குறைந்த வருமானங்கட்கு வருமான வரி விதிக்கக்கூடாது.

இந்திய சர்க்கார் இத்தீர்மானங்களில் ஒன்றைக்கூட அங்கீகரிக்கவில்லை. பொருளாதார மசோதாவை சபையில் தாக்கல் செய்யப்பட்டபடியே நிறைவேற்றும்படி சிபார்சு செய்து அதை திரும்ப வைஸ்ராய் இந்தியச் சட்டசபைக்கு அனுப்பினர். தாங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களில் ஒன்றையேனும் அங்கீகரிக்காததைப் பார்த்ததும் சபை அங்கத்தினர்களுக்கு ரோஷம் உண்டாயிற்று. இவ்விதம் உண்டாவது இயல்பேயன்றோ! வைஸ்ராயின் இச்செய்கை இந்திய மெம்பர்களுக்கு மட்டுல்லாமல் ஐரோப்பிய மெம்பர்களுக்கு மன வருத்தத்தை உண்டுபண்ணியது. எனவே ஐரோப்பியர் சார்பில் பேசிய சர். லெஸ்லிஹட்சன் 'சர்க்கார் அத்திருத்தத் தீர்மானங்களில் சிலவற்றையேனும், குறைந்தது நாங்களும் ஆதரித்ததையேனும் ஒப்புக்கொள்ளாததைப் பற்றி ஏமாற்றமடைந்துள்ளோம். மற்றும் இவ்விதம் செய்வதற்கு காரணம் என்ன என்பதைப் பற்றியும் பொக்கிஷ மெம்பர் ஒன்றும் கூறவில்லை.........எனவே சர்க்கார் நாங்கள் கூறியதை பொருட்படுத்தாதபோது, நாங்கள் எங்களுக்குள்ள பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு அவர்களுடன் கலந்து கொள்ளுவோம் என்று எதிர்பார்க்க முடியாது. இன்னோரன்ன சந்தர்ப்பத்திலும் எங்களுடைய ஏமாற்றத்தை தெரிவித்துக் கொள்ளுவதற்காகவும், நாங்கள் இம் மசோதாவுக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ ஓட்டுச்செய்யாது நடுநிலைமை வகித்திருக்கத் தீர்மானித்துள்ளோம். அத் தீர்மானங்களில் சிலவற்றை ஒப்புக்கொள்ளுவதால் பொருளாதாரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிடாது. சர்க்கார் அவ்விதம் செய்திருந்தால் அது நாட்டுக்கு நன்மை பயக்கும்.' ஐரோப்பியர்களே இவ்விதமான அபிப்பிராயம் கொள்ள வேண்டுமானால் சர்க்காரின் செய்கை எவ்வளவு படுமோசமானதாயிருக்கவேண்டும் என்பதை நாம் அதிகம் விரித்துச் சொல்லவும் வேண்டுமோ? ஐரோப்பிய மெம்பர் கூறியபடி அத்தீர்மானங்களில் ஒன்றிரண்டை ஒப்புக்கொள்ளுவதால் சர்க்கார் பொருளாதார நிலை சீர்குலைந்து விடாது. முதல் தீர்மானத்தை ஒப்புக்கொண்டால் மூன்றுகோடி வருவாய் குறையும். இரண்டாவது தீர்மானத்தை ஒப்புக்கொண்டால் 20 லட்சமே குறையும். மூன்றாவது தீர்மானத்தை ஒப்புக்கொண்டால் 54 லட்சம் குறையும். நான்காவது தீர்மானத்தை ஒப்புக்கொண்டால் $6\frac{1}{2}$ லட்சந்தான் குறையும். சர்க்கார் கோடிக்கணக்காக வருவாய் குறையும் உப்புவரிக் குறைவு தீர்மானத்தைத்தான் ஒப்புக்கொள்ள முடியாதுபோனாலும் மற்றைய தீர்மானங்களில் எதையேனும் ஒன்றை ஒப்புக்கொண்டு வரவு செலவை வெகு இலகுவாக சமாளிக்கக்கூடும். சர்க்கார் மனது வைத்தால் இந்தத் தீர்மானங்கள் எல்லாவற்றையுமே ஒப்புக்கொண்டு,

வரவு செலவை சரிக்கட்டமுடியும். நாம் ஏற்கனவே எடுத்துக் காட்டியபடி ராணுவச் செலவு ஒன்றில் மட்டும் சிக்கனம் செய்தாலே இத்தொகையை சரிக்கட்ட முடியும். மற்றும் சர்க்கார் சம்பளப் பிடித்தத்தை நிவர்த்தித்ததும் இப்போதுள்ள நிலையில் கண்டிக்கற்பாலதாகும். அவ்விதம் செய்யாதிருந்தால் சுமார் இரண்டு கோடி மிச்சப்படும். இத்தீர்மானங்களை ஒப்புக்கொண்டு அந்த சிக்கனத்தினுலும் வரவு செலவை சரிக்கட்டி யிருக்கலாம். இங்கு ஒன்று கவனிக்கற்பாலது. ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் மாகாணத்தில் சம்பளப் பிடித்தத்தை நிவர்த்திக்கவில்லை. அதைப்போல் ஏன் இந்திய சர்க்காரும் செய்திருக்கக் கூடாது? என்பதற்கு போதிய காரணங்களில்லை. சர்க்கார் தாங்கள் வாக்குறுதி கொடுத்திருப்பதால் அவ்விதம் செய்ததாய் கூறுகிருர்கள். அப்படியாயின் சட்டசபையில் ஜனப் பிரதிநிதிகளுக்கு சர்க்கார் இதுவரை எத்தனை வாக்குறுதிகள் கொடுத்திருக்கின்றனர்? அவைகளை எல்லாம் சர்க்கார் நிறைவேற்றி விட்டார்களா? அவ்விதம் ஒன்றுமில்லையே. அப்படியிருக்க இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் மட்டும் சர்க்கார் இவ்வளவு சிரத்தை காட்டுவானேன்? சர்க்கார் தங்களின் நலன் ஒன்றையே பெருக்கிக் கொள்ளுவதில் மட்டுந்தான் கண்ணுக விருக்கிருர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாகாதா?

பொக்கிஷ மெம்பர் அத்தீர்மானங்களை ஒப்புக்கொள்ளாததற்கு சாரமற்ற ஓர் பதில் கூறியுள்ளார்; அதாவது 'இந்நிலையில் சர்க்கார் அவைகளை ஒப்புக்கொள்ள இயலாது' என்று கூறினுர். இந் நிலைமையில் ஒப்புக்கொள்ள இயலாது என்ருல் வேறு எந்நிலையில் ஒப்புக்கொள்ள இயலும் என்பதையாவது அவர் விளக்கிருரா? சர்க்கார் தாங்கள் எதையும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்ற முடிவுடனிருந்தால் அவர்கள் ஏன் சபை அங்கத்தினர்களை திருத்தத் தீர்மானங்களை கொண்டுவரச் சொல்லி வாதித்து தவப்பொழுதை அவப்பொழுதாக்க வேண்டும். அப் பொழுதை வேறு காரியங்களை கவனிப்பதில் கழிக்கலாகாதா? ஒருக்கால் சர்க்கார் பல தீர்மானங்களை நிறைவேற்றினுல் அவைகளை எல்லாம் ஒப்புக்கொள்ள முடியாது என்றும், ஏதாவது ஒரு தீர்மானம் நிறைவேற்றினுல் அவை ஒப்புக்கொள்ளலாம் என்றும் கருதியிருக்கலாம். சர்க்கார் அபிப்பிராயம் அதுவாயிருந்தால் அதையாவது அவர்கள் தெளிவாய் கூறி இருக்க வேண்டும். அவ்விதமும் செய்யவில்லை; எனவே சர்க்காரின் செய்கையை சீர் தூக்கிப் பார்க்கும்போது எந்த வழியிலும் அது போற்றத்தக்கதா யில்லை. அவர்களின் செய்கை எதேச்சாதிகாரமாகவே தோன்றுகிறது. இவ்வித நிலைமையினுல் வைஸ்ராய் சிபார்சு செய்து அனுப்பிய மசோதாவையும் இந்தியச் சட்டசபை நிராகரித்ததில் வியப்பொன்று மில்லை. சாமானிய காரியங்களுக்கெல்லாம் விசேஷ அதிகாரங்களை உபயோகிப்பதாலுல், வரும் அரசியல் சீர்திருத்தம்

இரட்டை யாட்சியையும்விட மிக மோசமான தன்மையையே அடையும். அதை ஒப்புக்கொண்டு வேலைசெய்ய முன்வருபவர்கள் மிகவும் சொற்பமாகவே இருப்பர். சர்க்கார் காட்டிவரும் இப்படிப்பட்ட மனோபாவத்தினால் இந்தியச் சட்டசபை வைஸ்ராய் சிபார்சுசெய்து அனுப்பிய மசோதாவை நிராகரித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்தியரின் நல்லெண்ணத்தைப்பெற இந்த எதேச்சாதிகாரமே கடும் விரோதியாய் இருக்கின்றது என்பதை என்றுதான் அதிகாரிகள் உணருவார்களோ?

கல்வித்தடையா ?

பம்பாய் கார்பொரேஷன் ஒரு மோசமான காரியத்தை செய்யப் போவதாய் தெரிகிறது. அது தனது அதிகாரத்தின் கீழிருக்கும் கோவர்த்தனதாஸ், சுந்தரதாஸ் வைத்தியக் கல்லூரியில் பம்பாய்க்கு வெளியிலிருந்துவரும் மாணவர்கட்கும் சமஸ்தானங்களிலிருந்துவரும் மாணவர்கட்கும் கட்டணத்தை உயர்த்துவதைப்பற்றி ஆராய்ந்து சிபார்சு செய்ய ஒரு சப்கமிட்டி நியமித்தது. அக்கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டது. அது பம்பாய் நகரிலே பிறந்து வளர்ந்த மாணவர்கட்கு ஒருடர்மிற்கு (term) ரூ. 67 கட்டண வாங்க வேண்டும் என்றும் பம்பாய் மாகாணவாசிகட்கு ரூ. 87 கட்டணம் வாங்கவேண்டும் என்றும், பம்பாய் மாகாணவாசிகளல்லாதவர்கட்கு ரூ. 107 கட்டணம் வாங்கவேண்டும் என்றும் சிபார்சு செய்துள்ளது. இந்த முறையைக் கையாண்டால் கல்லூரி ஒழுங்காக நடக்கும் என்று நாம் கருதவில்லை. முதலாவது கல்லூரிக்கு வரும் மாணவர்களை அவர்கள் பம்பாய் நகர்வாசிகளா அல்லது பம்பாய் மாகாணவாசிகளா அல்லது வேறு பிரதேசத்தை சேர்ந்தவர்களா என்று நிச்சயிப்பதில் அதிகச் சங்கட மேற்படும். உதாரணமாக நிரந்தரமாக பம்பாயில் வசிக்கும் ஒருவர் பம்பாய் மாகாணத்திலே வேறு ஊரிலோ அல்லது வேறு பிரதேசத்திலோ பெண் கொள்ளுகிறார் என்று வைத்துக்கொள்வோம். பெண் கருப்ப முற்றதும் பேறு காலத்துக்கு தாய்வீடு செல்வது சகஜம். அப்படிப் பிறந்த ஒரு மாணவனை கார்ப்பரேஷன் எந்த இனத்தில் சேர்க்கும்? இதேபோல் பம்பாயில் ஒரு கிராமத்தில் வசிக்கும் ஒருவர் நகரில் நிரந்தரமாக வசிக்கும் ஒரு வீட்டில் பெண் கொள்ளுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்பெண்ணும் பேறு காலத்துக்கு தாய் வீடிருக்கும் நகரத்துக்கே வருவாள். அப்படி பிறக்கும் பிள்ளைகளை எந்த இனத்தில் சேர்க்கும்? இன்னும் வேறு பிரதேசத்தினர் நிரந்தரமாக பம்பாயில் குடியேறி விடுகின்றார்கள். அவர்களுடைய பிள்ளைகளை கார்பொரேஷன் எந்த இனத்தில் சேர்க்கும்? எனவே இந்தக் கொள்கையை கையாளப் புகுந்தால் இதில் பல இடர்பாடுகள் ஏற்படுவது திண்ணம்.

மற்றும் படிக்கவரும் மாணவர்களிடம் இவ்விதமான பாகுபாட்டை விதித்து கட்டணம் வாங்குவது ஒழுங்கான முறை என்று சொல்ல முடியாது. இவ்விதம் செய்வதை கல்வித்தடை ஏற்படுத்துவதென்றே கூறவேண்டும். இவ்விதம் வித்தியாசமான கட்டணம் வாங்கினுல் பம்பாய் நகரிலுள்ள மாணவர்களைத்தவிர மற்றைய இடங்களிலுள்ள மாணவர்கள் அக்கல்லூரிக்குப் போக விரும்பமாட்டார்கள். அப்பொழுது கல்லூரியில் மாணவர் தொகை குறையும். அக்கல்லூரிக்கு நல்ல பெயர் வருவதும் அரிதாகிவிடும். கல்லூரிக்குப் பிறதேசத்திலுள்ள மாணவர்கள் வந்துபடித்து அதற்கு நற்பெயரைத் தரவேண்டுமானுல், அவர்கட்கு தனியாக சலுகை எதுவும் காட்டாவிட்டாலும், அவர்களுக்கு மற்றவர்கட்கு காட்டும் சலுகையாவது காட்டவேண்டும். அப்படியானுற்ருன் அக்கல்லூரியில் போய் படிக்க பலர் பிரியப்படுவர். மற்றும் இதில் மற்ருென்று முக்கியமாய்க் கவனிக்கற் பாலது. இப்பொழுது எங்கும் சமத்துவம் காட்டவேண்டும், வேற்றுமை காட்டக்கூடாது என்று பறைசாற்றப்படுகிறது. ஆனுல் பம்பாய் கார்பொரேஷனே அதற்கு நேர் விரோதமான காரியத்தை செய்ய முற்பட்டிருக்கிறது. சப்கமிட்டி பம்பாய் வாசிகளல்லாத பிரதேச மாணவர்களிடம் அதிக கட்டணம், அதாவது நாம் மேலே குறிப்பிட்டபடி ஒரு டர்மிற்கு ரூ. 107 வாங்க வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதை நாம் மாகாண அபிமானம் (Provincial-patriotism) என்பதா அல்லது பிறதேசத் துவேஷம் (Frontier prejudice) என்பதா என்று தெரியவில்லை. கல்வியில் இம்மாதிரி வித்தியாசம் காட்டுவது, அதிலும் மன்பதைகட்குப் பரோபகாரமாய இருக்கும் கல்வியை கற்க வருபவர்களிடம் இவ்வித வேற்றுமை காட்டுவது மிக மோசமான காரியமாகும். சர்க்கார் இதைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயம் கொள்ளுவர் என்று நாம் ஜோசியம் கூற முடியாது. ஆனுல் ஸ்தல ஸ்தாபன இலாக்கா மாற்றப்பட்ட இலாக்காவாக விருப்பதால் மந்திரி தனத் செல்வாக்கை உபயோகித்து பம்பாய் கார்பொரேஷனே இப்படிமோசன முறையைக் கையாள விடாது தடுத்து கார்பொரேஷனுக்கு நற்பெயர் வாங்கிக் கொடுப்பார் என்று நம்பகிருேம். மற்றும் பம்பாய் கார்பொரேஷன் இப்பொழுது இவ்விதமான முறையை கையாள ஆரம்பித்து விட்டால் மற்றைய மாகாணங்களிலும் இம்முறையைக் கையாள முற்படார்களா? மற்றைய மாகாணத்திலுள்ள கார்பொரேஷனும் சர்க்காரும்கூட தங்களுக்கு ஊதியம் கிடைக்குமென்று கருதினுல் இம்முறையை அனுஷ்டிக்கத் தயங்கமாட்டார்கள். எனவே பம்பாய் கார்பொரேஷன் கமிட்டியின் சிபார்சை கையாண்டால், அது, இந்த கெட்ட செய்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பது கவனிக்கத்தக்கது.

தேர்தல் நாடக மேடை

[விகடன்]

(பங்குனிமாதத் தொடர்ச்சி)

கே:—குண்ணக்குடியான் முதலியாரே! நீங்கள் தலைவர் தேர்தலில் யாருக்கு ஓட்டு அளித்தீர்கள்?

வி:—என்ன கஷ்டம், என்ன கஷ்டம், தலைவர் பதவிக்கு நின்றவர்கள் போட்டி மும்முரமாக இருந்ததையும் அதிகப் பணஞ் செலவானதையும் பார்த்தேன். ஒருவருக்கு நான் இரண்டாயிரம் ரூபாய் கடன் பாக்கி இருந்தது. அவரையணுகி பாண்டை கொடுத்து விடுங்கள். உங்களுக்கே ஓட்டு கொடுக்கிறேன் எனக்கூறி பாண்டை செல்லுப் போட்டு வாங்கிக் கொண்டேன். மற்றொருவர் வந்த எனக்கு மெஜாரிட்டி இருக்கிறது. எனக்கு ஓட்டு கொடுத்தால் இவ்வாண்டில் 20000 ரூபாய்க்கு கண்ட்ராக்ட் வேலை கொடுக்கின்றேன் எனக் கூறினார். இதைக் கேட்ட மாத்திரத்தில் சந்தோஷமடைந்து ‘வாஸ்தவம்தான் அவருக்கு நான் இரண்டாயிரம் பாக்கி இருக்கின்றது. எங்கே தாக்கல் செய்து விடுகின்றாரோ எனவஞ்சுகிறேன். இல்லாவிடில் உங்களுக்குதான் ஓட்டு கொடுப்பேன்’ என்றேன். உடனே இரண்டு ஆயிரம் ரூபாய் நோட்டை என்னிடம் கொடுத்தார். வாங்கிப் பெட்டியில் வைத்து விட்டேன். என்னுடைய ஓட்டை கண்ட்ராக்ட் கொடுப்பதாய் வாக்களித்த நபருக்கே கொடுத்தேன். முடிவில் என் கட்சி தோல்வியுற்றது. மறுநாள் ரோஜாமாலையைக் கொண்டு போய் கழுத்தில் போட்டு வாழ்த்துக் கூறினேன். என்பேரில் என்ன தப்பிதம்? நம்ம காரியத்தை நாம் கவனிக்க வேண்டியது நமது கடமை யல்லவா? பொது நலத்தைக் கருதி உழைப்பதாக வாக்காளர்களிடம் சொல்லி வெற்றி பெற்ற பிறகு நமது நலத்தைத்தானே பார்க்கவேண்டி யிருக்கின்றது’ என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே ஒரு ஆள் ஓடிவந்து, ‘ஐயா! ஐயா!! உங்கள் சம்சாரத்திற்கு (பெண்சாதிக்கு) மயக்கம் வந்து விழுந்து விட்டார்கள். வாருங்கள், வாருங்கள்’ எனக் கூவி அழைக்க மற்றவர்களின் சங்கதிகளை பின்னால் சொல்லுவதாய் விடைபெற்றுக் கொண்டார்.

நாம் எதிர்பார்க்கும் காட்சி

[எம். எஸ். ஜெய்லானி]

அன்பான வாசகநேயர்களே! 'நாம் எதிர்பார்க்கும் காட்ம' என்ற தலைப்பின்கீழ் நான் எழுதியிருக்கும் விஷயத்தை வாசிப்பதற்கு முன்பே, இக்கட்டுரை பிரபல 'பாமா விஜயக்' காக்ஷியைப்பற்றியோ, அல்லது 'டம்பாச்சாரி'க் காக்ஷியைப்பற்றியோ, அல்லது அவைகளிலும் சிறந்த 'நல்லதங்காள்' காக்ஷியைப் பற்றியோ இருக்கலாம் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள். உங்கள் சந்தேகம் இக்கட்டுரையைத் தொடர்ந்து வாசிப்பின் நிவர்த்தியாகும் என்று நம்புகின்றேன்.

'என் தந்தை இறந்துவிட்டமையால், என்னுடைய சகோதரர்கள் இருவரையும் ஓர் கடையில் சம்பளத்திற்கு வைத்துவிட்டு, நான் அயல் நாட்டிற்குச் செல்லத் தீர்மானித்தேன். என் தீர்மானத்தை என் தாயிடம் கூறினேன். 'சகோதரர்கள் இருவரையும் கடையில் சேர்த்து விடுவோம். ஆனால் நீ மட்டும் அன்னிய சீமைக்குப் போக வேண்டாம். இங்கேயே ஓர் இடத்தில் வேலைக்கு அமர்ந்து காலத்தைக் கழிப்பதுதான் நல்லது' என என் தாய் கூறினாள். அதற்கு என் மனம் ஒப்பவில்லை. நான் என் தாயைநோக்கி, 'அன்னையே! தற்பொழுது நமது தேசம் மிகவும் க்ஷீணதிசை யடைந்திருக்கிறது. குடியானவர்கள் எல்லாம் தங்கள் நிலத்தில் விளையும் தானியமணி

கள் சொற்பவிலைக்குப் போவதால் அதிகக் கஷ்டப்படுகின்றனர். அரசாங்கத்தாரிடம் நல்ல உத்தியோகம் பெறலாம் என்றாலோ இருக்கும் உத்தியோகஸ்தர்களையே தள்ளிவிடுகின்றார்கள். அன்றியும் பி. ஏ. பட்டம் பெற்ற பட்டதாரிகளும் கப்பல் கரைதட்டாமல் செல்வதுபோன்று ஒரு வருடமும் பரிக்ஷையில் தவறாமல் தேறின போதிலும், அவர்கள் படிப்பின் நிமித்தம் செலவு செய்த 2000, 3000 ரூபாய்கள் எல்லாம் சமுத்திரத்தில் கரைத்த உப்புப்போன்று மாயமாய் மறைந்து விடுகின்றதல்லாமல், அவர்களும் பட்டம்பெற்ற பின் திண்ணைச் சோற்றுத் தடிராமர்களாய் அலைய நேரிடும் காலத்திலா எனக்கு வேலைகிடைக்கப் போகின்றது! ஒருக்காலும் இல்லை!! கைத்தொழில் சாலைகள் இருந்தாலும் அதில் சேர்ந்து பழகிக்கொள்வோம் என்றாலோ, நம் இந்தியா அந்நிய நாட்டுச் சாமான்களையே எதிர்பார்க்கிறது. ஆதலால் என் அன்பிற்கு இருப்பிடமாகிய தாயே! கவலைவேண்டாம். நான் சிங்கப்பூர் சென்று அங்கு சிலகாலம் இருந்துவிட்டு வருகிறேன். நானும் மாதாமாதம் எனக்குக் கிடைக்கும் தொகையில் கொஞ்சம் உனக்கு அனுப்பி வைக்கிறேன். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற நீதியை அறிந்த உனக்கு நான் அதிகம் எடுத்துக்கூற வேண்டுவதில்லை. ஆதலால் நீ எனக்கு அன்புடன் உத்தாவளித்து, ஆசீர்வதிக்க வேண்டுகின்றேன்" என்று சொல்லி மன்றாடினேன். என் தாயும் என்னை விட்டுப்பிரிய மனமில்லாதவளாயிருந்தும், என் பிடிவாதமான குணத்தைக் கண்டு எனக்கு உத்தாவளித்து ஆசீர்வதித்தாள். என சகோதரர்களைச் சொந்தக்காரர் கடையிலேயே சம்பளத்திற்குச் சேர்த்துவிட்டுக் கப்பலேறிச் சிங்கப்பூர் சென்றேன். நான் பத்தாவதுவரைப் படித்து இருந்தமையால், அங்கேயுள்ள ஓர் துணி நெய்யும் மில்லில் எனக்கு குமாஸ்தாவேலை கிடைத்தது. எங்களூர் வாசியும், 15 வருடங்களாய் நெய் வியபாரத்தின் பொருட்டு சிங்கப்பூரில் வசிப்பவரும், என் தகப்பனாரின் உயிர் தோழரும், மில்லின் சொந்தக்காரரின் நண்பருமான ஒருவர் எனக்காகப் பரிந்து கூறாவிடில் அவ்வேலையும் எனக்குக் கிடைத்தேயிராது.

நான் 2 வருடங்கள் அங்கு ஓர் சிறிய குமாஸ்தாவாகவே இருந்து வந்தேன். மில்லின் சொந்தக்காரர் என்னுடைய உண்மையான உழைப்பிற்குப் புகழ்ந்து, என்னை அங்குள்ள குமாஸ்தாக்களுக்கெல்லாம் தலைமையாக்கி மாதம் 100 ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தார். நான் என்னுடைய சம்பளத்தில் என் தாய்க்கும், என் சொந்தச் செலவிற்கும் செலவு செய்ததுபோக மீதி இருந்த தொகையை நிதிசேமிக்கும் இடத்தில் சேர்த்து வந்தேன். நான் இங்கு வந்து வருடங்கள் 5-ம் கழிந்தன. நான் சேர்ந்ததிலிருந்து வருடத்திற்கு வருடம் துணி வியாபாரம் குறைந்துகொண்டே வந்தது. 6-வது வருடத்தில் அறவே துணி வியாபாரம் நின்றுவிட்டது. மில்லின்

சொந்தக்காரரும், அதிகமாகக் கடன்பட்டிருந்தமையால் மில்லை நிறுத்த நேர்ந்தது. உடனே நான் நிதிசேமிக்கு மிடத்தில் சேர்த்து வைத்த தொகையைப் பெற்றுக்கொண்டு என்சொந்த நாட்டிற்குத் திரும்பினேன்.



நான் சென்னையில் கப்பலைவிட்டு இறங்கியதும், கடற்கரை ஓரமாய்ச் செல்லும் பொழுது அங்கு காணப்பட்ட காக்ஷிகள் எனக்குப் பரமானந்தத்தை யளித்தன. கடற்கரையில் கூடியிருந்தவர்கள் எல்லாம் வெவ்வேறு மதத்தினர்களாய் இருந்தும் ஜாதி மத வித்தியாசமின்றி சகோதர பாவனையில் நெருங்கிப் பழகுவதைக் கண்டு உள்ளம் பூரித்தேன். பெண்களும் கூண்டில் அடைபட்ட கிளியைப்போன்று வாடிவதங்கி யிராமல், மதிபோன்று பிரகாசிக்கும் முகத்தை யுடையவர்களாய் கடற் கரையில் உலாவுவதையும் கண்டு களித்தேன். அங்கு என் கண்முன் தோன்றியவர்கள் எல்லாம் சுத்தக் கதராடை அணிந்திருந்தனர். அவர்கள் உபயோகித்த சாமான்கள் எல்லாம் இந்தியநாட்டில் செய்ததாய் இருப்பதைப் பார்த்ததும், பரமானந்தமடைந்தேன். நான் அங்கிருந்து என் சொந்த ஊருக்குச் சென்றேன். அங்கும் பெண்கள் எல்லாம் சுதந்திரம்பெற்று, ஆண்கள் போன்று பல விதத்தொழிலில் பாடுபட்டு வந்தார்கள். எங்கள் ஊரில் அப்பொழுது முனிசிபாலிட்டுக்குத் தலைமையாக இருந்ததும் ஓர் பெண்ணே; எங்கள் ஊரிலுள்ள முனிசீப் கோர்ட்டிலும் முனிசீப்பாக இருந்ததும் ஓர் பெண்ணே. வக்கீல்கள் வாசம் செய்யும் தெருக்கள் வழியாகச் சென்றகாலத்து, ஆண்கள் வக்கீலாய் இருப்பதைக் காட்டிலும் பெண்களே அதிகமாக வக்கீல்களாய் இருப்பதை வெளியே கட்டித் தொங்கும் விளம்பரப் பலகைகளின் மூலம் அறிந்தேன். எங்கள் ஊரிலும் எல்லோரும் கதரே அணிந்திருந்தார்கள். அன்னிய நாட்டுத்துணி மருந்துக்கு வேண்டுமென்றாலும் கிடையாது என்றே சொல்லலாம். எங்கள் வீட்டிலும் எல்லோரும் கதரே கட்டி

வந்தார்கள். நான்மட்டும் சிங்கப்பூரில் வாங்கிய, 'சில்க்' முதலிய துணிகளை அணிந்துவந்தேன்.

என்னை வழியில் பார்ப்பவர்களும் ஒருமுறை என்னை முறைத்துப் பார்த்துவிட்டு என்னுடன் வார்த்தையாடாமல் போய் விடுவார்கள். ஒரு நாள் ஈஸ்வரன் கோவிலில் ஓர் திருவிழா நடந்தது. அதற்கு நானும் சென்றிருந்தேன். அங்கு பார்த்தபொழுது எல்லா மதத்தினரும், தாழ்த்தப்பட்டவர்கள், உயர்த்தப்பட்டவர்கள் தீண்டப்படாதவர்கள் என்ற வித்தியாசமேயின்றி கலந்து சுவாமி வைத்திருக்கும் இடம் வரையில் சென்று சுவாமியை தரிசித்து வணங்கி வந்தார்கள். நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில் உரையாடிக் கொண்டிருந்த 2, 3 வாலிபர்கள் தீண்டாமை அறவே ஒழிந்து, அன்னிய நாட்டுத் துணிகளும், சாமான்களும் இந்தியாவைக் கண்களால் கண்டு தரிசிக்க முடியாது தவித்துக்கொண்டிருக்கும் காலத்திலும், கதர்த் துணிகள் விலைகுறைந்து பலபல தினுசுகளில் பிரகாசிக்கும் இக்காலத்தில் அந்நிய நாட்டு 'சில்க்' எதற்கென்று என்னை ஏளனம் செய்வது என் செவியில்பட்டது. உடனே எனக்கு அங்கிருக்க மனம் பிடிக்கவில்லை. நான் என்னுடைய இல்லத்திற்குச் சென்று நடந்ததை என் தாயிடம் கூறினேன். என்தாயும் முன்பு தான் நாம் அறிவிலிகளாய் இருந்தோம். நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தைஎல்லாம் அன்னியநாட்டுத்துணிகளிலும் சாமான்களிலும் விரயஞ்செய்து நம் நாட்டில் அநேக கோடிமக்கள் பட்டினி கிடக்கக் காரணமாய் விளங்கினோம். இப்பொழுதுதான் நாம் நித்திரையிலிருந்து எழுந்தவர்கள் போன்று விழித்துக்கொண்டோம். இந்தியாவிலேயே நூலாக நூற்று அந்த நூலால் நெய்யப்பட்ட துணிகளை நாம் வாங்குவதால் அனேககோடி மக்களுக்கு அன்னமிட்ட புண்ணியம் நம்மைச் சாருகிறது. ஆகையால் நீயும் இனிமேல் கதர் துணியே உபயோகிப்பது நல்லது' என்று கூறினாள். எனக்கு சிறுவயதிலிருந்து சுதந்திர ஊற்று என் உடலில் ஊறிக்கொண்டிருந்தமையால், என்னிடமுள்ள அன்னிய நாட்டுத் துணிகளை ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் கொடுக்க எண்ணி அவர்களைத்தேடி அலைந்தேன். ஒருவரும் என் கண்ணில்படவில்லை. நான் பார்ப்பவர்கள் எல்லோரும் ஒவ்வொரு துறையில் பாடுபட்டு அவர்கள் உழைப்பிற் கேற்றபடி ஊதியம் அடைபவர்களாய்க் காணப்பட்டார்கள். ஆகையால் நான் என்னுடைய துணிகள் எல்லாவற்றையும் நெருப்பிற்கு இரையாக்கிவிட்டு, கதர் துணியை அன்று முதல் அணிந்து வந்தேன்.

நான் 5 வருடம் சிங்கப்பூரில் மில்லில் வேலைசெய்து வந்தமையால் எனக்கு இங்கும் மில்லில் வேலை கிடைக்கும் சந்தர்ப்பங்கள் வாய்த்தும், அவற்றை எல்லாம் வெறுத்து, உண்மையில் உலகத்தை

ஆளும் அதிபதிகளாய் விளங்கும் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ள விரும்பினேன். நம்மை ஆள்வது ஓர் அரசனாய் இருப்பினும், அந்த மன்னனும், மந்திராலோசனை சபைக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். ஆனால் மந்திராலோசனை சபையில் உள்ள அங்கத்தினர்களோ, அவர்களுடைய இல்லாள் சொல்படி நடக்க வேண்டி இருக்கிறார்கள். கணவன் மீது அதிகாரம் செலுத்தும் மனைவியும் தான் பெற்ற மைந்தனன் வார்த்தைக்குக் கீழ்படிகின்றனள். ஆதலான் இதுவரையில் இளம் பிள்ளைகளே அரசனைக் காட்டிலும் மிகுந்த அதிகாரமுள்ளவர்கள் என்று அறிந்தோம். இப்படி அரசனைவிட அதிக அதிகாரமுள்ள குழந்தைகளை அடக்கி ஆள்வது யார்? அவர்கள்தான் ஆசிரியர்கள். அதனால் ஆசிரியர்கள் அரசனைக்காட்டிலும் அதிக அதிகாரமுள்ளவர்கள் என்பதை அறிந்து போதனா முறையில் 2 வருடங்கள் பயின்று தேறி, எங்கள் ஊரிலேயே மாதம் 40 ரூபாய் சம்பளத்தில் ஆசிரியராக அமர்ந்தான்.

நான் உபாத்திமைத் தொழிலில் 6 மாதங்களைக் கழித்தேன், அப்பொழுது என்தாய் என்னை நோக்கி, 'அருமைச் செல்வ! உனக்கும் தக்க வயதாகிவிட்டது. ஆகையால் உனக்கு நல்ல ஓர் பெண் பார்த்துக் கல்யாணம் செய்ய வேண்டிய கடமை என்னுடையதாக இருக்கிறது. நீ இதற்கு முன் ஏதேனும் ஓர் பெண்ணைக் காதலித்திருப்பின், அதை கூறினால் பெண்ணின் பெற்றோர்களிடமிருந்து உத்தரவு பெற்று கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்' என்றாள். எங்கள் ஊரில் பால்ய விவாகம் என்பதே அறவே ஒழிந்தது. ஆணுக்கு 25 வயதும், பெண்ணுக்கு 18 வயதும் நிரம்பிய பின்னர்தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற சட்டமும் அமுலில் இருந்தது. நானும் என்னுடைய 27வது வயதில் 18 வயது நிறம்பப் பெற்ற, பல வருஷங்களாய் நேசித்து பரஸ்பர அன்பு ஏற்பட்டிருந்த ஓர் மங்கையைத் திருமணம் செய்து கொண்டேன். அவளும் கல்வியில் சிறந்தவளாய் இருந்தமையால் எல். எம் பி (L. M. P) பரிக்ஷையில் தேறி லேடி டாக்டராக வேலை பார்த்து வந்தாள். நாங்கள் இருவரும் பரஸ்பர அன்புடன் இருவர்கள் வேலையும் சரிவர கவனித்து வந்தோம். இருவரும் மாலை நேரங்களில் 'யூத்ஸ்ரிக்கிரியேஷன்' கிளப்பில் 'டென்னிஸ்' ஆடிவிட்டு வீட்டிற்குத் திரும்பி வருவோம். நாங்கள் மனமொத்த சதிபதிகளாய் காலம் கழித்து வந்தோம். எல்லா சௌகரியங்களும் எங்களுக்கு இருந்தும் பிள்ளையில்லாத கவலை ஒன்றுதான் எங்களை வாட்டியது. நாங்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது எங்கள் தெருவின் கோடியில் வாசம் செய்துவந்த ஒருவர் அகாலமாய் மாணமடைந்தார். கணவன் இறந்த சின்னாட்களில் காரிகையும் கணவனைப் பின்பற்றினாள். அவர்களுடைய நான்கு வயது நிரம்பப் பெற்ற ஆண் குழந்தை தந்தை தாயற்று தவிப்பதைப் பார்த்து என் மனம் அலை

கடல் துரும்புபோல் தவித்தது. அக்குழந்தையின் பெற்றோர்கள் தீண்டாமை தாண்டவமாடிய காலத்து, செருப்புத்தைத்து ஜீவனம் செய்யும் சக்கிலியர் குலத்தில் அவதரித்தவர்கள் என்பது எனக்கு நன்ருய் தெரியும். நான் ஓடோடியும் அந்தக் குழந்தையின் பரிதாப மான நிலைமையைப்பற்றி என் இல்லக் கிழத்தியிடம் கூறினேன். அவளும் என் அபிப்பிராயத்திற்கொப்ப அக்குழந்தையை எடுத்து வளர்க்க ஒத்துக்கொண்டாள். நான் அப்பையனை, என் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுவந்து அவனுக்கு வேண்டிய கதர் ஆடைகளைத் தைத்துக் கொடுத்து எங்கள் சொந்தக் குழந்தைபோன்று வளர்த்து 'ராகவன்' என்ற நாமகரணம் சூட்டினேம். அவனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து 6 வயது நிரம்பப் பெற்ருன். அவனை நான் எங்கள் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள ஓர் சிறிய பள்ளிக்கூடத்தில் சேர்த்தேன். அவனும் சில நேரங்களில் விளையாட்டுப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிவிட்டு மற்ற நேரங்களில் பள்ளிக்கூடத்திற்குச் சரியாகச் சென்று கொண்டும் இருந்தான்.

ஒருநாள் நான் என் பள்ளிக்கூடம் விட்டதும் $4\frac{1}{2}$-மணிக்கு வீட்டிற்கு வந்தேன். என் மனைவி ஆஸ்பத்திரிலிருந்து 5-மணிக்குத் தான் வருவது வழக்கம். அதனுல் நான் என்னுடைய அறைக்குச் சென்று வழககம் போன்று 'பேப்பர்' பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எங்கள் ராகவன் 'அம்மா: அம்மா' என்று கூறிக் கொண்டே பள்ளியிலிருந்து வந்து வீட்டினுள் நுழைந்தான். நான் அவனை நோக்கி, 'அப்பா! ராகவா!! உன்னுடைய தாயார் இன்னும் ஆஸ்பத்திரியி லிருந்து வரவில்லை. இங்கே வா?' என்று அழைத்து அவ னுக்காக வாங்கி வந்த தின்பண்டங் களைக்கொடுத்து அன்றைய தினம் அவன் பள்ளியில் கற்றுக்கொண்ட விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருந் தேன்.'



அப்பொழுது நான் படுத்திருக்கும் அறையின் கதவை ஒருவர் தட்டும் சப்தம் கேட்டு படுக்கையை விட்டு எழுந்து கதவைத்திறந்தேன். எனது நண்பர் ராஜம் நிற்பதைப் பார்த் தேன். அப்பொழுதுதான் நான் இதுவரையில் கண்ட விஷயங்கள் முழுவதும் கனவென்று அறிந் தேன். இன்றைய தினம் நான் கனவில் கண்டபடி என்று நம்

நாட்டில் பால்ய விவாகம் அறவே ஒழியுமோ' பெண்களும் சுதந்திரம் பெற்று வாழ்வார்களோ, எக்காலத்தில் நம் தேசத்தில் வாழும் மாந்தர்கள் அன்னியநாட்டுச் சாமான்களையும் துணிகளையும் அறவே வெறுத்து நம் நாட்டுத் துணிகளையும் சாமான்களையும் உபயோகிப்பார்களோ, என்று நம் நாடு கைத்தொழிலில் சிறந்து விளங்குமோ, என்று நம் நாட்டில் வாசம் செய்யும் தீண்டாமை தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பேய்கள் வீரிட்டுக்கொண்டு நம் தேசத்தில் இனி வேலையில்லை என்று கப்பலேறுமோ, அன்றுதான் நம் தேசத்திற்கு மோக்ஷமடையும் காலம் வரும்.

சோமு:—நான் ஒரு மோட்டார் வாங்கி இருக்கிறேன். ஆனால் அதை பத்திரமாய் வைத்திருக்க எனக்கு தகுந்த இடம் இல்லை.

காமு:—ஏன்? மோட்டாரை யார்மேலாகிலும் ஏற்றிவிட்டால் போலீஸ்டேசனில் பத்திரமாய் வைத்திருக்கலாமே. —ராஜன்

தாயார்:—அடே குளத்தில் நீஞ்சாதே ஜலதோஷம் வரும்.

மகன்:—அப்பா நீஞ்சுகிறாரே.

தாயார்:—அவர் இன்ஷியூர் செய்திருக்கிறார்; அதனால் அவர் நீஞ்சலாம். —கே. மகாதேவன்

நமது பத்திராதிபர் வைகாசி மாதம் 1-ம் திகதி முதல் 3-ம் திகதி வரையில் பட்டமங்கலம் கிராமத்தில் திருவாளர் அ. வி. அ. ள. அடைக்கப்பச் செட்டியார் அவர்கள் வீட்டில் நடக்கும் கலியாணத்தை முன்னிட்டு, அங்கு தங்கி யிருப்பார்.

திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாட் கழகத்தார், (6, பவளக்காரத் தெரு, சென்னை) நமக்கு பின்வரும் அறிக்கையை அனுப்பியுள்ளார்கள்:—

நந்தண்டமிழ் நாட்டிற் பண்டைக் காலத்தில், ஞாயிற்றையும் திங்களையும் மாமழையையும் போற்றி வந்ததுபோல் புலவர்களையும் போற்றி வருதல் பெருவழக்கா யிருந்தது. மலரவன் செய் வெற்றுடம்பு மாய்ந்து போவதானும், வண்டமிழோர் பாவுடம்பு மாயாது புகழ்கொண்டு நின்று நிலவுவதானும் 'மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்' என்று மதிப்பிட்டுக் கூறிய பெருமை தமிழ்நாட்டிற்கே உரித்தாம். அத்தகைய அருப்பெறற் புலவர் தம் நினைவு மறவாது மக்கள் உள்ளத்தே என்றும் நின்று நிலவச்செய்தல் நாட்டுத் தொண்டுகளில் ஒன்றாகும் என்பது யாவர்க்கும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். நானிலம் போற்றும் நாடகப் புலவரான ஷேக்ஸ்பியர் என்பார் தம் திருநாளை, அது கொண்டன்றோ, ஆங்கிலேயர் ஆங்காங்குச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்! அவ்வாறே ஏனைய நாட்டினரும் தத்தம் நாட்டுப் பெரும்புலவர் நாட்களை வழாஅது கொண்டாடுகின்றனரல்லரோ? அற்றாக, உலகப் புலவர்களின் நடுநாயக மாமணியாயும் ஒழுக்கத்திற்கு உறையுளாயும் தமிழ் மொழிக்கு உயிர்நிலையாயும் இலகும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவது தமிழரின் கடமையன்றோ? இதுகருதி இவ்வாண்டு முதல் ஆண்டுதோறும் வள்ளுவர்தம் திருநாளாய வைகாசி அனுடத்தன்று வள்ளுவர் விழாக் கொண்டாடுதற்கான முறைகளைத் தேர்ந்து அமைப்பதற்காகவே இக்கழகம் கூட்டப்பட்டது. தமிழ்நாட்டிற்கும், தமிழ்மக்கட்கும், தமிழ்மொழிக்கும் இயன்றவரையில் எத்துறையிலும் பணியாற்றி வருவதே இக்கழகத்தின் பொதுநோக்கமாயினும், இதன் சிறப்பான நோக்கங்கள் பின் வருவனவாம்:—

1. பொதுமறையாகிய திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டுதோறும் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தல்.

2. திருவள்ளுவர் திருநாளன்று ஆங்காங்கு ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

3. திருவள்ளுவர் பெயரால் ஒரு 'நினைவு மலர்' அச்சிட்டு, திருநாளன்று அடக்க விலைக்குத் தருதல்.

4. இந்தியாவிலுள்ள திருந்திய மொழிகளில் எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் படாதிருக்கின்ற

தெனத் தெரிகிறதோ அந்தந்த மொழிகளில் மொழி பெயர்க்கச் செய்தல்.

5. சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ்மொழியில் முதன்மையாகத் தேர்வுபெறும் மாணவர்களுக்கு நூல்கள், பதக்கங்கள் முதலிய பரிசுகளை யளித்தல்.

6. திருவள்ளுவர் பண்டசாலை யொன்று சென்னை நகரிலே நிறுவுதற்கான முறைகளைத் தேடியமைத்தல்.

7. எத்திறத்தார்க்கும் பொதுவாகப் பயன்படுமாறு தலைநகராகிய சென்னையின்கண் ஒரு மன்றம் அமைத்தல்.

8. ஒரு பொதுநூல் நிலையத்தை மன்றத்தி லமைத்தல்.

9. மன்றத்தின் நடுவே தெய்வப் புலவர் திருவள்ளுவரின் உருவச்சிலை யொன்றைப் பளிங்கிறற் செய்து நிறுத்துதல்.

மேற்கண்ட இந்நோக்கங்கள் எளிமையாகவும், இனிமையாகவும் நிறைவேறுதற் பொருட்டு இக்கழகத்தினுக்குப் பெருந்தொகையினரான உறுப்பினர்களை நாடெங்கும் சேர்த்தல் கட்டாயமாகும். சாதி, சமய வேற்றுமையின்றி எல்லாரும் இக்கழகத்திற்கு உறுப்பினராகுந் தகுதியுடையவராவர். ஆண்டுக்குக் கட்டணம் 4 அணு செலுத்துவோர் இக் கழகத்தின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்படுவர் ரூ. 5. கொடுப்பவர் இதற்கு வாழ்நாள் உறுப்பினராவர். ரூ 10-ம், அதற்கு மேலுங் கொடுப்பவர் காப்பாளர் (Patron) ஆவர்.

இவ்வாண்டு வள்ளுவர் விழா யுவ௵ வைகாசி௴ ௫-ம் நாள் (18-5-1935) நடைபெறும்.

கமலம் பட்டபாடு

[தூயோன்]

அப்பப்பா! இந்த இருவருக்கிருக்கும் பொருத்தத்தைப் போல் வேறு யாருக்காவது இருப்பதாகச் சொல்லி—ஜாதகர்கள் சொல்லி—இந்தக் காதும் கேட்டதில்லை. கண்களும் கண்டதில்லை. எப்பேர்ப்பட்ட பொருத்தம்! ஒரு ஜாதகத்தைப் பிடித்திழுத்தால் மற்றொரு ஜாதகம் விடமாட்டேன் என்கிறது; காந்தம் போல் பிடித்துக்கொண்டிருக்கிறது.

இவ்வளவு பொருத்தத்தோடு விட்டார்களா? மறுபடியும் இன்னம் பொருந்தச் செய்தார்கள். ஒரு மாதகாலமாக ஓய்வு ஒழிச்சலின்றி நூறு நூறாகச் செலவுசெய்து கோவில்களில் அர்ச்சனையும் ஆராதனையும் செய்து பொருந்த வைத்தார்கள். இருவரும் சரியாகப் பொருந்திப் போய்விட்டார்கள். அந்தப் 12 வயது கமலமும் 16 வயது ராமசாமியும் இனி இறந்தால் இருவரும் கட்டாயம் ஒரே நிமிடத்தில்தான் இறப்பார்களாம். இது அவர்கள் தாய்தந்தையர் நினைப்பு.

ஆனால் அந்த யமனுக்கு மாத்திரம் அவர்கள் செய்த பிரார்த்தனை காதில் விழவில்லை போலும்! அவர்கள் பட்ட கஷ்டம் அவன் மனதைக் கரையச் செய்யவில்லைபோலும்! கமலாவுக்கும் ராமசாமிக்கும் கலியாணம் நடந்தேறிய மூன்றாம் மாதம் அந்த மோட்டார் யமன் ராமசாமியைக் கொள்ளைகொண்டான்.

ராமசாமியின் தகப்பனார் கோவிந்தசாமி கமலத்தைத் தன் வீட்டிற்கே அழைத்துச் சென்றுவிட்டார்.

பெற்றோரைப் பிரிந்து செல்லும்பொழுது அவளுக்கு எதற்காக, எங்கே தன்னை அழைத்துச் செல்லுகிறார்கள் என்பதே விளங்கவில்லை. கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் சிந்திய வண்ணமாகவே கமலா தன் பெற்றோரைப் பிரிந்தாள்.

கோவிந்தசாமியும் அவ்வளவு அக்கரையுடன் கூட்டிச் சென்றிருக்கமாட்டார். ஆனால் வீட்டில் வேலைக்கு உதவும் என்றுதான் அவ்வளவு அக்கரைகாட்டி கட்டாயத்துடன் அழைத்துச் சென்றார்.

அங்கு கமலம் பட்ட பாட்டைக் காதால் கேட்டாலும் எப்பேர்ப்பட்ட கடின சித்த முடையவர்களுக்கும் இரக்கம் மேலிடும். ஆனால் கோவிந்தசாமியின் வீட்டார் யாவரும் கற்பாறையையொத்த மனதையுடையவர்களாக இருக்கும்பொழுது அவளை அங்கு சந்தோஷமாக வைத்துக்கொண் டிருப்பவர்கள் யார்?

அவள் பட்ட கஷ்டங்களை விவரிக்கத் துடங்குவேனானால் கதையை முடிப்பதே கஷ்டமாகிவிடும். ஆதலால் அவைகளைத் தாண்டிச் செல்வதே நலம்.

ஒரு சமயம் அவள் தன் பெற்றோர் வீட்டுக்கு வந்தபொழுது தன் தகப்பனாரைக் கேட்கிறாள்:—ஏனப்பா, நான் ஏன் அங்கேயே இருக்கிறேன்? என்னை வேலைசெய்ய சம்பளத்துக்கு அமர்த்திக் கொண்டார்களா? சம்பளத்துக்கு வைத்துக்கொண்டாலும் இவ்வளவு அக்கிரமமாகவா நடத்துவது? இந்த ஊரிலேயே எங்காவது சம்பளத்துக்கு அமர்த்தி விடுங்களேன். நான் இனியும் அங்குத்தானா செல்லவேண்டும்?

இதற்குத் தகப்பனார் என்ன பதில் சொல்லுவார். அவர் கண்கள் கண்ணீரைத்தான் கொட்டுகின்றன.

பின் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அவள் நிலைமையை அறிவித்துவிட்டார்.

அநியாயம்! அநியாயம்!! கல்யாணம் என்றால் இன்னதென்றே அறியாத சின்னஞ் சிறு பெண்களுக்குக் கலியாணம் செய்து பரிதவிக்க விடுகிறார்களே! அந்தோ! பரிதாபம்!!

II

கமலம் தான் அடிபட்டதையெல்லாம் தன் பெற்றோரிடம் சொல்லி விட்டாளென்ற கோபத்தினால் கோவிந்தசாமி இன்னும் மோசமாகக் கமலத்தை நடத்தத் தொடங்கினார்.

வேளைக்கு உணவு கிடையாது. சரியான உணவும் கிடையாது. நல்ல ஆடை கிடையாது. வெளியில் போகக்கூடாது. ஆனால் வீட்டுவேலை பூராவும் அவள்தான் செய்யவேண்டும்.

'என் புருஷர் இறந்துவிட்டார். நான் மறுபடியும் ஏன் வேறு ஒருவரை மணந்து அவருடன் வாழ்க்கையை நடத்தக்கூடாது? இது கூடாது என்கிறார்களே! ஏன்? ஆண்கள் தங்கள் மனைவி இறந்தால் வேறொரு பெண்ணை மணந்து வாழ்க்கையை நடத்துகிறார்களே! ஓர் பெண்மாத்திரம் ஏன் அவ்விதம் செய்துகொள்ளக்கூடாது?' என்று

கமலம் தன்னைத்தானே கேட்டுக்கொள்கிறாள். கேள்விகள் எவ்வளவு வேண்டுமானாலும் அவள் மனதில் எழுகின்றன. ஆனால் ஒன்றுக் காவது அவளுக்கு விடை புலப்படவில்லை.

அநியாயம்! அநியாயம்!! ஓர் ஆடவன் தான்கொண்ட மனைவி மார் இறக்க இறக்க, தான் இறக்கும் வரையிலும் வரிசையாக எத்தனை பெண்களை வேண்டுமென்றாலும் கட்டிக்கொள்ளலாம். ஆனால் ஓர் பெண் தான் கொண்ட புருடன் இறந்தால் அவளுடைய சுகம் அத்துடன் தீர்ந்தது. அவள் அன்றுமுதல் அப்படியே துக்கசாக ரத்தில் மூழ்கி அமிழ்ந்துபோக வேண்டியதுதானே ஒழிய அவ ளுக்கு சுகமாகவாழ ஒருவழியும் கிடையாது! அடடா! என்ன பக்ஷபாதம்!

மாமனார் வீட்டிலிருக்கும் வரையிலும் தனக்கு சுகம் என்பதே இவ்வுலகில் கிடையாது என்பது நிச்சயம் என்பதை அறிந்துகொண் டாள் கமலா. நாட்கள் செல்லச் செல்ல அவள் கஷ்டமும் மேன் மேலும் பெருக்கெடுத்தது. அவள் இவ்வுலகை வெறுத்தாள். இனி இவ்வுலகில் வாழ அவளுக்குக் கொஞ்சமும் ஆசை கிடையாது. உயிர் நீக்கத் தயாரகவே இருந்தாள். தற்கொலை செய்துகொள்ளவும் தயாராக இருந்தாள். அந்நன்னாளை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த் துக் கொண்டிருந்தாள்.

III

ஓர் நாள் காலைவேளை; சுமார் 5மணி; கொஞ்சம் இருட்டாகவே இருந்தது.

கமலம் வீதியைச் சுத்தம் செய்ய வெண்சாமரத்துடன் வெளியே வந்தாள். வந்தவள் தன் வேலையைக் கவனிக்காமல் சுற்றுமுற்றிலும் நோக்கினாள். யாரும் காணப்படவில்லை. வீதி யிலே அவள்தான் முதன்முதலில் எழுந்து வீதியைச் சுத்தம் செய்பவள்.

வெண்சாமரத்தைத் திண்ணையின் பேரில் வைத்துவிட்டாள். நடக்கத் தொடங்கினாள். அச்சமின்றி முன்னேக்கிச் சென்றாள். உயிரைப்பற்றிய அக்கரையிருந்தாலல்லவா! இருட்டில் பேயும், பிசா சும் இருக்கும் என்ற பயம்! ஊரைக் கடந்தாள், இன்னும் சென்றாள். சுற்றிலும் நோக்கினாள். கண்கள் ஏதோ ஒன்றைக் கூர்ந்து தேடின. இன்னும் கொஞ்சம் நடந்தாள். அங்கு ஒரு கிணறு தென்பட்டது. கிணற்றின் பக்கம் சென்றாள்.

தென்முகமாகப் போனாள் ? கிணற்றின் பக்கம் என்னவேலை ?

தெய்வப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். முடித்தாள்; கிணற்றுத் தண்ணீரை நோக்கினாள். அவள் முகம் பிரகாசமுற்றது.

'தடால்' என சப்தம்; என்ன? அந்தோ! கமலம் கிணற்றில் குதித்துவிட்டாள். 'தடால்' என இன்னொரு சப்தம்; என்ன ?

மறுநிமிடத்தில் கூந்தல் பூராவும் முகத்தில் கிடக்கக் கமலம் மேலே வந்தாள். அவள் இன்னொரு உருவத்தின் கைகளில் இருந்தாள். அவ்வுருவம் கமலத்தைக் கரைக்குக் கொண்டுவந்து, ஓரிடத்தில் படுக்கவைத்து வேண்டிய உபசரணைகள் செய்தது.

கமலம் சீக்கிரத்தில் கண்களைத் திறந்தாள். தன் பக்கத்தில் சுமார் 20 வயதுள்ள ஓர் ஆடவன் அமர்ந்திருப்பதை அறிந்தாள். எழமுயன்றாள். ஆனால் முடியவில்லை.

கமலத்திற்கு காயம் ஒன்றும் காணவில்லை.

'ஏன் கிணற்றில் விழுந்தாய்?' என முகம் கழுவவந்த அவ்வாலிபன் கேட்டான்.

'என் புருடனை இழந்தேன். நான் என் மாமியார்வீட்டில் இருக்கிறேன். அங்கு பல கஷ்டங்கள் படுகிறேன். நான் இவ்வுலகை வெறுத்தேன். ஆதலால் இறக்கத் துணிந்தேன்' என மெல்லிய குரலில் கூறினாள்.

வாலிபன் கொஞ்சநேரம் பேசாமலிருந்தான்.

'நான் உன்னைக்......காதலிக்கிறேன்' என திடீரெனக் கூறினான்.

கமலம் திடுக்கிட்டாள். மறுநிமிடம் அவள் செவ்வாயிதழ்களில் புன் சிரிப்புத் தோன்றியது.

'நான் இன்று 10 மணிக்கு பி. ஏ. படிப்புக்காகச் சென்னை செல்லுகிறேன். உன்னையும் அழைத்துச் செல்லுகிறேன்.'

கமலம் எழுந்து நின்றாள். தலையை நிமிர்த்தினாள். ஆடவனைப் பார்த்ததும் தலையைத் தாழ்த்தினாள்.

'சம்மதமா?' என்றான்.

அவள் பதில் பேசவில்லை. அவள் சம்மதத்தின் அறிகுறியாக அவள் செவ்வாயிதழ்களில் புன் சிரிப்பு அதிகமாகத் தவழ்ந்தது.

ஆடவன் அவள் இரண்டு மெல்லிய கரங்களையும் பிடித்தான். மறுநிமிடம் இருவர் அதரங்களும் ஒன்று சேர்ந்தன.

IV

பலர் அறியக் கலியாணம் செய்துகொண்ட சொந்தப் புருஷனைப் போலவே அவ்வாடவனைப் பாவித்து நடந்தாள் கமலம்.

ஆடவன் கமலத்தின் பேரில் கொண்ட அன்புக்கும் எல்லையில்லை.

யாராக இருந்தாலென்ன? யார் எப்படிப் போனாலென்ன? யார் எப்படி இருந்தாலென்ன? என்று மாத்திரம் இந்தப் பெண்கள் தங்கள் காரியத்தை கவனிப்பதோடு இருப்பதில்லை.

மத்தியானம் சாப்பிட்டபின் வெற்றிலையைத்தான் போட்டுக் கொள்ளுகிறார்களே! அதை மென்றுகொண்டு பேசாமல் குந்திக் கொண்டிருக்கிறதுதானே. அதுதான் நம் பெண்களிடம் இருப்பதில்லை. வீணாக, வாய் வலிக்க ஊர்வம்பை ஏன் மென்றுகொண்டிருக்கவேண்டும்?

எதுகிடைக்குமோ என்று ஏங்கிக்கொண்டிருந்த—மேலுலகத்துக்குப் போக டிக்கட் ரிசர்வ் செய்து வைத்துக்கொண்டிருந்த பாட்டிகளுக்கும், வேலையில்லாப் பெண்களுக்கும் கடைசியில் கமலம் கிடைத்தாள்.

கமலத்தின் பேரில் பல சந்தேகங்களைக் கிளப்பி ஏதேதோ பேசிக்கொண் டிருப்பார்கள். கமலம் கேட்கும்படியாகக்கூடப் பேசுவார்கள்.

ஆனால் கமலம் இதையெல்லாம் ஒரு பொருட்படுத்துவதில்லை. தானுண்டு, தன் வீட்டு வேலையுண்டு என்றிருப்பதுதான் கமலத்தின் வழக்கம்.

யாரும் அறியாமல் இம்மாதிரி ரகசியமாக முன்பின் அறியாத ஓர் ஆடவனை நம்பி கமலம் இப்படி ஓடிவந்துவிட்டது கண்டிக்கக் கூடிய சமாச்சாரந்தான்.

'ஆசை அறுபதுநாள், மோகம் முப்பது நாள்' என்றொரு பழமொழியுண்டு. அதை அவ்வாடவன் தத்ரூபமாகச் செய்கையில் காண்பித்துவிட்டான்.

2 மாதங்கள் வரை வெகு சந்தோஷமாக நாட்கள் கடந்தன.

ஓர் நாள் புத்தகங்களையெல்லாம் எடுத்து மூட்டை கட்டினான்.

'எங்கே போகின்றீர்கள்?' எனக் கேட்டாள் கமலம்.

புத்தகங்களை யெல்லாம் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலேயே உள்ள ஒரு பையன் வீட்டில் கொண்டு வைக்கப்போகிறேன். எதற்காக இங்கிருந்து இவ்வளவு தூரம் சுமந்துகொண்டு போகவேண்டும்' என்று கூறி கமலத்தின் அதரங்களில் ஒரு முத்தம் சிந்தினன். கமலமும் நல்லயோசனைதான் என்று பேசாமலிருந்துவிட்டாள்.

மறுநாள் காலையில் வெளியில் சென்றான் சென்றவன் சென்றவனே! திரும்பிவரவே யில்லை; 2 நாட்கள் 4 நாட்கள் கழிந்தன. கமலம் கலங்கினள்.

இம்மாதிரியான எத்தனையோ ஆடவர்களை நாம் தற்காலத்தில் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். எத்தனையோ காலிகள் நல்லவர்கள் போல் நடித்து குலப்பெண்களை மயக்கிக் கூட்டிக்கொண்டுபோய் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள்பாலிருக்கும் நகைகளைப் பறித்துக் கொண்டு அம்பலத்தில் விட்டுவிடுகிறதையும் காண்கின்றோம்; கேட்கின்றோம். அந்தோ! மோசம்!! மோசம்!!!

ஆனல் அதுமாதிரி கமலத்தினிட மிருக்கும் நகைகளையும் பறித்துக்கொண்டு போகாமல் இருந்துவிட்டான் கமலத்தின் காதலன். ஏதோ ஊர்ப்போய்ச் சேருமட்டும் இருக்கட்டும் என்று விட்டு வைத்துவிட்டான்போ லிருக்கிறது அப்பாவி.

இரவோடு இரவாகக் கமலம் வீட்டைவிட்டு வெளியேறி விட்டாள். கண்ணீரும் கம்பலையுமாகப் பலவிடங்களில் திரிந்தாள்.

அந்தோ! கமலா! முதல் புருஷன் இறந்தால் மறுமுறை கலியாணம் கூடாது என்கிற ஓர் மூடக்கொள்கையினு லல்லவோ நீ இவ்வாறு கதறித்திரியவேண்டி நேரிட்டது! உனக்கு நல்ல காலம் எங்காலமோ, ஈசா!

V

கமலம் முன்பே தன் தகப்பனர் ஊரையாவது அல்லது கொடுமையே உருக்கொண்டுள்ள மாமனரின் ஊரையாவது இனி நாடுவதில்லை என மனஉறுதி செய்துகொண் டிருந்தாள்.

கமலம் இப்பொழுது சென்னையில் ஓர் வீட்டில் வேலைக்கமர்ந்துவிட்டாள். வீட்டில் யாரும் கிடையாது; பள்ளியில் படித்துவரும் ஓர் வாலிபன்தான் அவ்வீட்டில் வசித்துவந்தான்.

* * *

ஓர் நாள் கமலம் சமையலறையில் ஓர் பக்கம் நின்றவண்ணம் ஏதோ பார்த்துக்கொண் டிருந்தாள். திடீரென முதுகின்மீது ஓர் கைபட்டது. திடுக்கிட்டுத் திரும்பினள். அவ் வீட்டில் வசிக்கும் வாலிபன் நிற்பதைக்கண்டாள். தலைகுனிந்து ஒருபுறமாக ஒதுங்கினள்.

'என்ன செய்கிறாய்?' என்றான்.

'ஒன்றுமில்லை' என மெதுவாகக் கூறினாள் கமலம். ஒருபுறமாக ஒதுங்கி நின்றாள்.

'விரலில் என்ன காயம்?' எனக் கேட்டான்.

'கொஞ்சம் கத்திபட்டு விட்டது'

இதென்ன அநியாயம்? கமலத்தின் கையைப்பற்றி காயத்தை நோக்கினான். பின் முகத்தை நோக்கினான். மறுநிமிடம் மற்றொரு கையையும் பற்றினான்.

கமலதிற்குச் சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

பாவி, சண்டாளன், துரோகி, நயவஞ்சகன், நேசமாகப் பேசி மோசம் செய்யும் தன்மார்க்கன், என்ன வேலைசெய்ய முற்பட்டான்! அவளைக் கட்டித்தழுவி முத்தமிடப் போனான்.

கமலம் ஆவேசத்துடன் தன் முழுப்பலத்தையும் உபயோகித்து அவனுடைய பிடியினின்று விடுவித்துக்கொண்டு, அவனைத் தள்ளி விட்டு வீதிக்கதவண்டை ஓடினாள்.

ஆனால் பாதகன் முன்பே கதவை மூடிப் பூட்டுப்போட்டிருக்கிறான். இதிலெல்லாம் புத்திசாலிதான்.

அவன் எழுந்து வருவதைக் கமலம் கண்டு விட்டாள்.



கொல்லைப்பக்கம் ஓடினாள். தனக்கு முன்பு ஒருசமயம் உதவியது போல், ஒரு கிணறு அவள் கண்களில் தென்பட்டது. ஒரே தாவு; கிணற்றுக்குள் வீழ்ந்தாள். ஜலத்தில் மூழ்கினாள்.

பேடிப்பயல், பெண் குதித்ததைக் கண்டு திக்பிரமையுடன் பதுமைபோல் நின்றான்.

கால்மணி நேரம் கழிந்து விட்டது. ஆண் பெண் வித்தியாசமின்றி யாவருக்கும் ஒரே அளவு சுகத்தைக் கொடுத்து ரக்ஷிக்கும் ஆண்டவன் அடியைக் கமலம் அடைந்துவிட்டாள்.

எ மூடக்கொள்கையே! உனக்கு ஓய்வுநாள் கிடையாதா! எத்தனை யௌவன மங்கைகளைக் கொள்ளைகொண்டாய்! எமனிடம் சேர்ப்பித்தாய்! இன்னும் எத்தனை பேரைத்தான் எமனிடம் சேர்க்கப்போகிறாய்? அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!!



கோகிலா

[வி. ஜி. ஜெயராம்]

நாடக பாத்திரங்கள்.

ஸ்ரீனிவாசன்	...	ராமசாமி பிள்ளையின் மகன்
இரத்தினம்	...	ஸ்ரீனிவாசன் நண்பன்
கோகிலா	...	,, காதலி
நடேச பிள்ளை	...	கோகிலாவின் தந்தை
சரஸ்வதி அம்மாள்	...	,, தாய்
சாம்பன் / கிருஷ்ணன்	...	ஸ்ரீனிவாசனின் பள்ளிக்கூட நண்பர்கள், குடியர்கள்.
சண்முகம்	...	துப்பறிபவன், ஸ்ரீனிவாசனின் சிற்றப்பன்
ரங்கநாயகி	...	ஸ்ரீனிவாசனின் தாய்
சிவம்	...	கிருஷ்ணனின் வேலையாள்
கந்தன்	...	இடையன்
கருப்பாயி	...	இடைச்சி
மதிவதனம்	...	சாம்பன் மனைவி
முனியன்	...	கொள்ளைக் கூட்டத்தை சேர்ந்தவன்

குடு குடுப்பைக்காரன், கொத்தவால், போலீஸ் அதிகாரிகள் வேலையாட்கள் கொள்ளைக் கூட்டத்தார். மற்றும் பலர்.

[சென்றமாதம் வெளியான பாகத்தின் சுருக்கம் :— நடேச பிள்ளை என்பவருக்கு கோகிலா ஒரே பெண். அவள் தன்னுடன் படித்த (ராமசாமிப் பிள்ளையின் மகனான) ஸ்ரீனிவாசனை காதலிக்கிறாள். அவள் தந்தை அவளை குடியனான கிருஷ்ணன் என்பவருக்கு இரண்டாந்தாரமாகக் கொடுக்க விரும்புகிறாள். கோகிலா அதற்கு இசைய மறுக்கிறாள். ஒரு நாள் அவளும் ஸ்ரீனிவாசனும் தங்கள்

காதலுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தைப்பற்றி உரையாடிவிட்டு அன்றிரவே சிறிது பொருளுடன் மதுரைக்கு ஓடிவிடவேண்டும் என்றும், இருவரும் கடற்கரையில் அதேயிடத்தில் இரவு 12 மணிக்கு சந்திக்க வேண்டும் என்றும் தீர்மானித்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் பேசியவற்றை யெல்லாம் மறைவிலிருந்து கிருஷ்ணனின் கூட்டாளிகளிலொருவனும் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவனுமான முனியன் என்பான் கேட்கிறான். பின்னர் அவன் கோகிலா எழுதியதுபோல் சீனிவாசனுக்கு 'நம்முடைய இரகசியம் தெரிந்துபோய் விட்டபடியால் உங்களைக்கொல்ல முயற்சி செய்கிறார்கள். எங்காவது ஓடிவிடவும்" என்று ஒரு கடிதம் எழுதி யனுப்புகிறான். அதை நம்பி சீனிவாசனும் ஓடிவிடுகிறான். கோகிலா தாங்கள் தீர்மானித்துக் கொண்டபடி கடற்கரைக்கு வருகிறாள்.]

காட்சி 6.

இடம்:—கடற்கரை.

காலம்:—நடுச்சாமம்.

(கோகிலம் 12 மணிக்கு கடற்கரைக்கு வருகிறாள்.)

கோகிலம்:—என் காதலர் குறித்த நேரத்தில் வந்து விடுவாரே. ஏன் இன்னும் வரக்காணோம்! ஆம், எல்லோரும் நித்திரைக்குச் சென்ற பிறகுதானே வரவேண்டும். நான் இங்கே இந்த கட்டையின் மேல் உட்காருகிறேன். (உட்காருகிறாள்.)

(ஒரு படகின் மறைவில் இருந்து முனியன் வருகிறான்.)

முனி:—அம்மா ! தாங்கள்தானா கோகிலா அம்மாள்?

கோகி:—ஆம். என்ன சங்கதி?

முனி:—நான் எங்க எசமானுங்க கிட்ட இருந்து வரேனுங்க.

கோகி:—யாரடா அது?

முனி:—ஸ்ரீனிவாசர் கிட்டே இருந்து.

கோகி:—(அவசரமாக) என்ன சங்கதி?

முனி:—அவரை யாரோ கத்தியால் குத்திட்டாங்க. இப்போதுதான் மயக்கம் நீங்கிச் எங்கிட்ட சொன்னாரு.

கோகி:—ஐயோ! (கீழே விழுகிறாள்) அப்பா! இப்பொழுது எங்கிருக்கிறார்?

முனி:—அவர் வூட்டிலேதான் இருக்கிறார். நான் மோட்டாரிலேதான் வந்தேன். வாங்க போலாம். (காரில் ஏற கார் மறைகிறது.)

(கார் ஒருவீட்டின் முன் நிற்கிறது. முனியன் கோகிலாவை அவ்வீட்டின் ஓர் அறையில் விட்டுப் பூட்டிச் செல்கிறான்.

கோகி:—இது என் அன்பருடைய வீடுதானா? இங்கே வீட்டில் ஒருவரையுங் காணோமே. வேலையாளும் போய்விட்டானே. (ஒவ்வொரு அறையையும் பார்க்கிறாள்.)

இவ்வீடு ஒரு செல்வருடையது போல்தான் தோன்றுகிறது. ஆனல் யாரையும் காணுமே? (கிருஷ்ணன் குடித்துவிட்டு உள்ளே வருகிருன்)

கிருஷ்:—சபாஷ்! முனியன் சொன்னபடியே செய்தான். குட்டி வா, இப்படி உட்கார். ஏன் நிற்கிருய்? வா அருகில். (கிட்டே செல்கிருன்.)

கோகிலம்:—(தனக்குள்) ஆ! மோசம் போனேன். பாவி என்னை ஏமாற்றிவிட்டான். இத்துஷ்டனை மணக்கும்படி வற்புறுத்திய என் பெற்றோர்கள் குருடர்களே. இவ்விடம் இருந்து எப்படித் தப்பிச் செல்வது? (கோபமாக) சீ மூர்க்கா! அப்படியே நில், கிட்டே வாராதே.

கிருஷ்:—கோபிச்சிக்காதே. உனக்கு வேணுங்கிற நகை போடுகிறேன், எங்கிட்டே எவ்வளவு பணம் இருக்குது தெரியுமா?

கோகி:—அடே! உன்னுடைய வீண் எண்ணத்தை விடு. உன் மனைவி இறந்து இன்னும் மூன்று மாதங்கள்கூட ஆகவில்லையே. ஐயோ! உன்னுடைய செய்கைகள் அவளுக்கு எவ்வளவு அருவெறுப்பைத் தந்ததோ? அதனுலேதான் அவள் உயிர் துறந்தாள். இன்னும் உன் துர்பழக்கம் உன்னை விடவில்லையே.

கிருஷ்:—நான் சொல்லுகிறபடி கேள். என்னை கலியாணம் பண்ணிக்கிட்டேயானல் ராஜாத்தி மாதிரி இருக்கலாம்.

கோகி:—துஷ்டப்பதரே! உன் வார்த்தைகள் என் காதை துளைக்கின்றன. போ! வெளியே.

கிருஷ்:—உனக்குத் தகுந்த தண்டனை கொடுத்தால்தான் நீ என் வழிக்கு வருவாய். நீ இங்கிருந்து தப்பிச் செல்ல முடியாது. அவ்வெண்ணத்தைவிட்டு விடு. அடே! சிவம்!! சிவம்!!! (கூப்பிடுகிருன்.)

சிவன்:—ஏன் சாமி? (ஓடி வருகிருன்)

கிருஷ்:—சிவம்! இப் பெண்ணை சாக்கிரதையாக பார்த்துக்கொள்: வெளியே போகவிடாதே. வேண்டுவனவெல்லாம் செல்லத்தைக் கேட்டு வாங்கிக் கொடு. நீ இவ்விடத்தைவிட்டு நகராதே. நகர்ந்தால் ஒரு நாயை அடிப்பதைப்போல் அடித்துக் கொன்று விடுவேன்.

சிவ:—அப்படியே செய்யரேனுங்க. (கிருஷ்ணன் போகிருன்)

சிவம்:—அம்மா! ஏன் துக்கப்படுரைங்கோ? இந்தபாவி எப்போதும் இப்படிதானுங்க. அனியாயமா கெடுத்துடரானுங்க.

கோகி:—அப்பா சிவம்! நீயோ வயதானவன். என்னை உன் சொந்தப் புதல்வியைப் போல் பாவித்துக் காப்பாற்று.

சிவம்:—அம்மா! உங்களைக் கண்டதும் என்னையறியாமலே உங்களைக் காப்பாத்துனம்னு என்மனதில் உதிக்குது. தெய்வமே! நான் என்ன செய்வேன்? பாவி இங்கிருந்து போகக்கூடாதுன்னு உத்தரவு இட்டுயிருக்கிருன். அம்மா! வருந்தாதே. எப்படியாவது உதவி செய்யறேன். நீங்கள் கொஞ்சம் ஏதாவது சாப்பிடுங்க. (செல்லத்தைக் கூப்பிட்டு பரிமாறுகிருன்)

சிவம்:—(தனக்குள்) ஆ! நல்ல யோசனை. இன்று இவன் வெளியே சென்றதும், அவளை தப்பிவிக்கிறேனே? (கிருஷ்ணன் வருகிருன்)

கிருஷ்:—சிவம்! சாக்கிரதையாக இருக்கிறாயா?

சிவம்:—ஆமாங்க! (கோகிலாவைப் பார்த்து) அம்மா! உள்ளே தாழ்பாள் போட்டுகோங்கோ. (ஒருதடியுடன் காவல்காக்கிறான். கிருஷ்ணன் போகிறான்)

சிவம்:—அம்மா! அம்மா!! கதவைத் திறங்கள். (கோகிலா கதவைத் திறக்கிறாள்)

சிவ:—அம்மா! இந்த கதவைத்திறந்தால் (அவ்வறையில் மற்றோர் கதவை காட்டுகிறான்.) அடுத்த அறைக்குப் போகலாம். அங்கிருந்து மெத்தை படி வழியே இறங்கிப் போகலாம்: என்மனைவியை உங்களுடன் வெளியேபோகும் வரை துணைக்கு அனுப்புகிறேன். கதவை மூடிக்கோங்கோ. இன்னும் நிமிஷத்திலே புறப்பட தயாராக இருங்க. (கோகிலம் கதவை சாத்திக் கொள்கிறாள்)

சிவம்:—செல்லம்! செல்லம்!! (கூப்பிடுகிறான்)

செல்லம்:—ஏன்? என்ன வேண்டும்?

சிவம்:—எசமான் என்னை இங்கிருந்து போகக்கூடாதுன்னு கட்டளையிட்டிருக்கிறாரு. நீ எங்க ஊட்டுக்காரியைக் கூப்பிட்டு, நல்ல மூக்குத்தூளாக அரையணாவுக்கு வாங்கி வரச்சொல்லு. ராத்திரிக்கெல்லாம் தூக்கம் முழிக்கணும். (செல்லம் போகிறாள். குப்பாயி வருகிறாள்.)

சிவம்:—ஏண்டி குப்பாயி! பொடி வாங்கிந்தியாடி, கொண்டா சீக்கிரம். கட்டையில போறவ, நடக்கிற நடையைப் பாருடா. வா சீக்கிரம்.

குப்பாயி.—என்ன? சும்மா சும்மா வெருட்டறே. இந்தா பொடி. (கொடுக்கிறாள்)

சிவ;—கோவிச்சிக்காதே. கிட்டவா. நான் ஒன்னு சொல்லறேன் கேளு.

குப்பாயி:—இதென்ன பெரிய இழவாய் போச்சு, நீதான் வாயேன் கிட்டே.

சிவ:—அடீ! எங்க எசமானு உத்தரவு. இங்கிருந்து அடிஎடுத்து வைக்கக் கூடாதுடீ.

(குப்பாயி கிட்டே வருகிறாள். சிவம் ரகசியமாக ஏதோ சொல்ல குப்பாயி சந்தோஷத்தோடே அடுத்த அறைக்குப் போகிறாள்.)

(கோகிலாவும், குப்பாயியும் வெளியே வருகிறார்கள். கோகிலம் தன் கை வளையல்களை கழற்றி குப்பாயிக்கு கொடுத்துவிட்டு தப்பிச் செல்கிறாள்.)

(கிருஷ்ணன் குடித்துவிட்டு உள்ளே வருகிறான்)

கிருஷ்:—டே! சிவம்! என்னடா செய்கிறாய்?

சிவம்:—இதோ இருக்கிறேனுங்க.

கிருஷ்;—கதவை திறக்கச் சொல்லுடா?

சிவம்:—அம்மா! எசமான் வந்திருக்கிறார். அம்மா! கதவைத் திறங்கோ (கதவை இடிக்கிறான்)

கிருஷ்:— . ன்னடா இது? கம்பி நீட்டிவிட்டாளா? என்ன?

சிவம்:—என்னுங்கோ சாமி. நான் இங்கிருந்து அசையவே இல்லிங்கோ எப்படி தப்பிச்சுடுவா. தூங்கிறுப்போல இருக்குது.

கிருஷ்:—என்னடா? இந்நேரத்திலா தூக்கம்? கதவை உடைத்துத்திற.
(சிவம் கதவை உடைக்கிறுன்)

கிருஷ்:—(உள்ளே சென்று தேடுகிறுன்.) எங்கேடா ஓடிவிட்டாள்? நீ சாக்கிரதையாக காவல் செய்திருந்தால் எப்படி ஓடிவிடுவாள்?

சிவம்:—சாமி! நீங்க சொன்னபடி இங்கிருந்து நகரவேயில்லே. செல்லத்தைக் கேட்டும் பாருங்கோ.

கிருஷ்:—உங்களால் எப்பொழுதும் துன்பந்தான். (கோபத்துடன் போகிறுன்)

காட்சி 7.

இடம்:—இரத்தினத்தின் வீடு.

காலம்:—காலே 6 மணி.

இரத்:—(தனக்குள்) என்ன, படிப்பிலும் மனம் செல்லவில்லே. காட்சிகளிலும் மனம் செல்லவில்லே. என் நண்பன் ஸ்ரீனிவாசனின் பிரிவே இதற்குக் காரணம். எந்தச் சமாசாரத்தையும் என்னிடம் சொல்லாமல் இரானே. ஒருவேளே அவன் பெற்றேர்கள் எங்கேயாவது அனுப்பி இருப்பார்களா? எப்படியும் நம்மிடம் சொல்லாமல் வெளியே போகமாட்டானே. அவன் காதலி கோகிலாவுடன் சுற்றுப் பிரயாணம் போய் இருப்பானே. சீ...சீ...அவளுடன் சென்றிருக்கமாட்டான். கோகிலாவின் பெற்றேர் அவளே தனக்கு மணம் செய்து வைக்கமாட்டார்கள் என்றும், அவர்கள் பணக்கார மாப்பிள்ளேயைத் தேடுகிறுர்கள் என்றும் கூறினுனே. எதற்கும் அவன் வீட்டிற்குச் சென்று பார்க்கலாம். (புறப்பட்டு ஸ்ரீனிவாசன் வீட்டை அடைகிறுன்)

ராமசாமிப் பிள்ளே:—(இரத்தினத்தைஉபசரித்து துக்கத்துடன்) அப்பா! உன் நண்பன் எங்குச் சென்றுன்? அவனே இரண்டுநாட்களாகக் காணவில்லேயே!

இரத்தினம்:—தான் எக்காரியம் செய்தாலும், எங்கு போனுலும், என்னிடம் சொல்லாமல் இருக்கமாட்டான். அவனே காணுமையால்தான் நான் தேடிக்கொண்டு வந்தேன்.

ராம:—அவன் சிறிய தந்தையாகிய சண்முகத்திற்கு காலேயில்தான் தந்தி கொடுத்திருக்கிறது. அவன் இப்பொழுது மதுரையில் இருக்கிறுன். அநேகமாக நாளே காலே 3 மணி வண்டியில் வருவான்.

இரத்:—தாங்கள் யாரையும் தேட அனுப்பவில்லேயா?

ராம:—இல்லே.

இரத்:—இதோ நான் புறப்படுகிறேன், என் நண்பனேக் காணுமல் என் கண்கள் பூத்துவிட்டன. தாங்கள் வருந்தவேண்டாம். அவன் ஏதாவது முக்கிய காரணமாக வெளியே சென்றிருப்பான். அல்லது யாருக்கேனும் உதவி செய்யச் சென்றிருப்பான். இன்னும் இரண்டு தினத்தில் வந்து விடுவான். நானும் தேடிப் பார்க்கிறேன். (விடைபெற்று வெளியேசெல்கிறுன்)

இரத்:—நான் எங்குச் சென்று தேடுவேன். ஆ! கடவுளே! இரவும் பகலும் மாறிமாறி வருவதுபோல் மனிதர்களுக்குச் சந்தோஷத்தையும் துக்கத்தையும் அளிப்பது சரியோ? ஏ! பரந்தாமா! ஆபத்பந்துவா! (வருத்தத்துடன் செல்கிறான்)

கிருஷ்:—முனியா! அவள் கம்பி நீட்டி விட்டாடா. சீக்கிரம் போய் தேடுடா. அந்தப்பயல் சிவம் எச்சரிக்கையாய் இருந்திருந்தால் இந்த தொல்லை வந்திராது.

முனி:—கம்பியா நீட்டிட்டா? இதோ தேடிப் பிடிச்சாந்துடறேன்.

(வேகமாக வீதி வீதியாய் திரிகிறான். வழியில் கோகிலாவைப் பார்க்கிறான்)

முனி:—ஏ! குட்டி, என்னே யாருன்னு நெனேச்சுகிட்டே, பய முனியன் கிட்ட உன் பாச்சா பலிக்காது. வந்துடு எங் கூட. இல்லாபோனல் மரியாதை கெடுத்துடுவேன்.



கோகி:—ஐயோ! தாங்கள் இவ்விதம் தகாத வார்த்தை கூறுவது சரியா. தங்கள் சகோதரியாய் பாவித்து என்னைக் காப்பாற்ற வேண்டும்.

முனி:—வாயைப் பாருடா. பேசாமல் நட கழுதை? (நெட்டி தள்ளுகிறான்)

கோகி:— (கண்ணீருடன்) அம்பிகா! இதுவும் உன் சோதனையா. ஜெகதீஸ்வரி! அனுதாக்ஷி. ஏ, பரந்தாமா! பக்தர்களின் கிருபாநிதியே, நிர்மல சொரூபா, அடியேனைக் காப்பாற்று.

முனி:—சாமி, சாமின்னு ஏண்டி சலாம் செய்கிறாய்? சாமியாவது, சாத்தாவாவது. நான்தான் சாமி; வேறு சாமி ஏது? எங்கே அது வந்து இப்போ உனக்கு உதவி செய்யட்டும் பார்ப்போம்.

(இரத்தினம், ஸ்ரீனிவாசனைப்பற்றி எண்ணிக் கொண்டே வருகிறான். முனியனுடைய பேச்சுக் குரலை கேட்டு அருகில் வருகிறான்.)

முனியன்:—இன்னுமா நிக்கரே? நட சீக்கிரம்.

(இழுத்துக்கொண்டு போகிறான்)

(இரத்தினம் ஒரு அபலையின் குரலை கேட்டு உரத்த குரலில்) யார் அது ? அப்படியே நில்! நகர்ந்தால் கொல்லுவேன்.

முனி. யாருடா, அது கேக்கறது? (சண்டைக்குத் தயாராகிறான்)

கோகிலா.—(இது ரத்தினம்போல் தோன்றுகிறது. வாய்விட்டு) இச்சமயம் என்னைக் காப்பாற்றுங்கள். (என்றாள்)

(இரத்தினம் முனியனை அடித்து கீழே வீழ்த்துகிறான்.)

இரத்—அம்மா நீ யார்? இந்த நடுச்சாமத்தில் இங்குவரக் காரணம் என்ன?

கோகி—அண்ணா! என்னை அறிந்து கொள்ள முடியவில்லையா? நான் கோகிலா அல்லவா !

இரத்—சகோதரி! நீ ஏன் இப்படி வந்தாய்? நல்லவேளையாக நான் இங்கு வந்தேன்.

கோகி—அண்ணா! என் காதலருடன் வெளிதேசத்துக்கு சென்றுவிட எண்ணி, கடற்கரையில் அவருக்காக காத்திருந்தேன். கிருஷ்ணன் என்னை ஏமாற்றி அவன் வீட்டில் சிறைப்படுத்தினான். சிவம் என்னும் வேலையாளால் தப்பினேன். மறுபடியும் இவனிடம் அகப்பட்டுக்கொண்டேன். தாங்கள் இப்பொழுது காப்பாற்றினீர்கள்; என் காதலர் இப்பொழுது எங்கிருக்கிறார்?

இரத்—அம்மா! இப்பொழுது நான் உன் காதலர் வீட்டிலிருந்துதான் வருகிறேன். அவன் வீட்டைவிட்டு வெளியே சென்று இரண்டு தினங்கள் ஆகிறது. அவனைத் தேடிக்கொண்டுதான் இங்குவந்தேன்.

கோகி—ஐயோ! அப்பாவிகள் ஏதாவது மோசம் செய்திருப்பார்களோ என்னவோ? அண்ணா! இனி நான் என்னசெய்வேன்?

இரத்—தங்காய், நீ வருந்தாதே. உன் வீட்டிற்கு சென்று சுகமாக இரு. வீணாக ஏன் திரிகிறாய்? நான் உன் காதலனை கூடிய சீக்கிரம் கொண்டுவந்து சேர்க்கிறேன். (உத்தரவு பெற்றுக்கொண்டு போகிறான்)

கோகி—இனி என் வீட்டின் வாசலைகூட நான் மிதியேன். நானும் என் காதலரை தேடிச் செல்கிறேன். அவர் பனியிலும், வெயிலிலும், என்னை நினைத்து திரிந்துகொண் டிருப்பார். நானும் தேடுகிறேன்.

(மனம் சென்றவாறு தேடித் திரிகிறாள்)

காட்சி 8.

இடம்—ஸ்ரீனிவாசனின் வீடு.

காலம்—காலை.

(ஸ்ரீனிவாசனின் சிறிய தந்தை சண்முகம் வருகிறார்.)

ராமசாமிபிள்ளை—அப்பா! தம்பி! நாங்கள் இனி என்செய்வோம்? எங்கள் அருமைக் குமாரன் எங்குச் சென்றானோ? ஒரு நாளும் உத்தரவின்றி வெளியே செல்லாதவன் யாரிடமும் சொல்லாமல் போய்விட்டானே. இனி நாங்கள் எவ்விதம் உயிர்வாழ்வோம், (கண்ணீர் விடுகிறார்)

சண்முகம்—அண்ணு! வீணே புலம்புவதில் என்ன பிரயோஜனம்' நடக்கவேண்டிய காரியத்தை யல்லவோ கவனிக்கவேண்டும். ஸ்ரீனிவாசன் வீட்டைவிட்டுச் சென்று எத்தனை நாட்கள் ஆகிறது?

ராமசாமி—இரண்டு தினங்கள் ஆகிறது?

சண்மு—அவனுக்குச் சினேகிதர்கள் யாராகிலும் உண்டா?

ராமசாமி—இரத்தினம் என்பவன்தான் அவனுக்குத் தோழன். அவனிடம் கூறுமல் எக்காரியமும் செய்யான். அவனும் ஸ்ரீனிவாசனை காணுததால் நேற்று இரவு இங்கு வந்திருந்தான், தானும் தேடிச் செல்வதாகக் கூறிச் சென்றுன்.

சண்முகம்—அவனை இங்கு வரவழைக்க முடியுமானல் தயவு செய்து வரவழையுங்கள்.

(ராமசாமி பிள்ளை இரத்தினத்திற்கு கடிதம் எழுதி அனுப்ப, இரத்தினம் வருகிறுன். ஷண்முகம் ஸ்ரீனிவாசனின் அறையை சோதனைசெய்து ஒரு கடிதத்துடன் வெளி வருகிறுர். அது முனியனுல் கோகிலம் எழுதியது போல் எழுதியனுப்பப்பட்ட கடிதம்.)

ஷண்முகம்:—(இரத்தினத்தை வெளியே அழைத்துச் சென்று) அப்பா ! கோகிலா என்னும் பெண் யார்? அவளைப்பற்றி ஸ்ரீனிவாசன் ஏதாகிலும் சொல்லி யிருந்தால் விவரமாகக் கூறு.

இரத்தினம்:—ஐயா! கோகிலா, நடேச பிள்ளையின் புத்திரி. அவள் எங்களுடன் வாசித்துக்கொண் டிருந்தாள். சிறுவயது முதற்கொண்டே அவள் ஸ்ரீனிவாசன்மேல் அதிக அன்புகொண் டிருந்தாள். கோகிலாவின் தந்தை அவளை கிருஷ்ணன் என்பவனுக்கு மணம் செய்து கொடுக்க எண்ணி ஞர். கோகிலா அதை விரும்பவில்லை. ஆகையால் பெற்றேர்களுக்கும் பெண் ணுக்கும் அடிக்கடி சச்சரவு நடந்துகொண் டிருந்தது. இவற்றை யெல்லாம் என் நண்பன் என்னிடம் கூறியிருக்கிறுன். ஒரு சங்கதிமட்டும் மறைத்துக் கூறியிருக்கிறுன். அதையும் நேற்றுக் கோகிலாவால் அறிந்தேன். 'இருவரும் சிறிது பொருளுடன் வெளிநாடு சென்றுவாழ எண்ணங்கொண் டிருந்தார்கள்: இரண்டு நாட்களுக்கு முன் அவர்கள் புறப்பட்டு மதுரை செல்ல நாள் குறிப் பிட்டிருந்தார்களாம். குறித்ததினம் கோகிலா கடற்கரையில் என் நண்பன் ஸ்ரீனிவாசனுக்காகக் காத்திருந்தாளாம். அப்பொழுது ஒரு ஆள் ஸ்ரீனிவாசனை யாரோ குத்திவிட்டதாகக் கூறி, அவளை கொண்டுபோய், கிருஷ்ணன் வீட் டில் சிறை செய்தானும். சிவம் என்ற வேலையாளால் தப்பி வெளியே வந் தாளாம். அவள் தப்பிச் சென்றதை அறிந்து, ஒருவன் அவளை கண்டு பிடித்து இம்சிக்க, நான் தற்செயலாய் அங்கு வந்தேன். பிறகு அவனை அடித்துத் துரத்தி விட்டு அவளை காப்பாற்றி வீட்டிற்கு அனுப்பினேன். நான் ஸ்ரீனிவாசனை கூடிய சீக்கிரம் கொண்டுவந்து சேர்ப்பதாகச் சொன்னேன்.

ஷண்முகம்:—சரி. இக்கடிதத்தைப் பார்.

(ஸ்ரீனிவாசனின் அறையில் அகப்பட்ட கடிதத்தைக் கொடுக்கிறுர்)

இரத்தினம்:—(வாசித்து) இது அப்பாபிகள் செய்த சூழ்ச்சிதான். இக் கடிதம் அவளால் எழுதப்பட்டதல்ல.
(வருந்துகிறுன்)

ஷண்முகம்:—நீ வருந்தாதே. கூடிய சீக்கிரம் ஸ்ரீனிவாசன் அகப்படுவான். நீயும் தேடிப் பார். (இரத்தினம் போகிருன்)



(ஷண்முகம் பைத்தியக்காரனைப் போல் சாம்பலைப் பூசிக்கொண்டு கிழிந்த சொக்காய்கள், கந்தை, காகிதம், கண்ணுடி, முதலிய வஸ்துக்களுடன் கள்ளுக் கடைக்குச் செல்கிருன். அங்கு கிருஷ்ணன், சாம்பன், முனியன் முதலியவர்கள் குடித்துவிட்டு, பேசுவதைக் கவனிக்கிருன்.)

கிருஷ்ணன்:—டே முனியா! நீ இவ்வளவு கஷ்டப்பட்டு என்னடா பிரயோஜனம்? அவள் தப்பித்து ஓடிப் போனளே.

முனியன்:— என் சாமி! என் வேலையை சரியாய்த்தான் செஞ்சேன். அந்தப் பய சிவம் சரியா இருந்தா, கயிட்டமே யில்லே. அந்தப் பய, அடே அப்பா, அதே நெனேச்சாகூட பயமா யிருக்குது. எப்படி அடிச்சான்? ஒரு அடியிலே கீழே உளுந்துவிட்டேன். பயலைப் பழிக்குப்பழி வாங்காட்டா எனக்கு திருப்தி ஆகாது. இப்போ என்னு, அவனே—சீனிவாசனை ஒழிச்சிட்டா அப்புறம் அந்த கோ......கோ......கோகிலா நம்ப கிட்டவந்துடுவா. பயப்படாதிங்கோ.

சாம்பன்:—அடே! எப்படியாளுலும் அவளை கொண்டாந்துடுடா, பிறகு பாாத்துக்கொள்ளலாம்.

முனி:—தைரியமாய் இருங்க. நான் எப்படியாளுலும் பிடிச்சாந்துடுறேன். என்னை அடிச்சவனை பழிக்குப்பழி வாங்கிடுறேன். ஸ்ரீனிவாசனை கொல்லனும். இந்த மூணு வேலேதான் சாமி! எனக்கு இன்னும் இரண்டு போடுங்கோ.

கிருஷ்ணன்:—வேணுங்கிறது சாப்பிடுடா.

(குடித்துவிட்டு வெளியே செல்கிருர்கள். ஷண்முகம் பின் தொடர்கிருர்.)

காட்சி 9.

இடம்:—ஒரு மரத்தடி.

காலம்:—நடுப்பகல்.

இடைச்சி:—ஐயோ! நான் என்ன செய்வேன். இன்னிக்கு எவ முகத்திலே முழிச்சேனே. பால், தயிர், நெய், மோர், எல்லாம் அப்படியேயிருக்குது. வெயில் உச்சிக்கு வந்துடுத்தே. புருஷனுக்கு சோறுகொண்டு போகனுமே. உஸ்.........அப்பா, நாலு காசு வந்தால்தானே சந்தோசம். கோழி கூப்பிட எழுந்து வந்தேன். இந்நேரவரைக்கும் காப்பணத்துக்குக்கூட விக்கிலே.

புருஷனுக்கு சாப்பாடு கொண்டு போகாமல் போனல் சண்டை போடுவானே"

(எழுந்து கூடையைத் தூக்கிக்கொண்டு காட்டு மார்க்கமாய் போகிருள். வழியில் ஸ்ரீனிவாசன் விழுந்து கிடப்பதைப் பார்க்கிருள்.)

இடைச்சி:—ஐயோ! எம்மா, அயகா இருக்க ராண்டா, எம்புள்ளே, உசி ரோடே இருந்தா, இவனைப் போல்தான் இருப்பான். பாவம்! களெச்சி போயி படுத்திருக்கிரு போலே இருக்கு.

(அவன் வாயில் கொஞ்சம் பால் விடுகிருள்)

ஸ்ரீனிவாசன்:— (கண்ணைத் திறந்து) என் கண்ணே, என்னுசை நாயகமே, என் செல்வமே, தெவிட்டா அமுதமே! யானுன்னைப் பிரிய சேர்ந்ததே, என் கட்டிக்கரும்பே, உன் கிளி மொழியை எப்பொழுது கேட்கப் போகிறேன்? ஈசா! இதுவும் உன் அருளா? அவளைப் பிரிந்து உயிர் வாழேன்.

இடைச்சி:— அப்பா! நீ யாரு? உனக்கு வேண்டிய உதவியை நானும் என் புருஷனும் செய்யக் காத்துக் கொண்டிருக்கோ**ம்**.

ஸ்ரீனி:—அயமா! நான் ஓர் அனுதி. யாரும் அற்ற பாவி. கடவுளும் என்னை கைவிட்டார்.

இடைச்சி:—அப்பா! எழுந்து வா, எங்க வூட்டுக்கு.

(கூட்டிக்கொண்டு போய் சிறிது ஆகாரம் கொடுக்கிருள், ஸ்ரீனிவாசன் சரியாக சாப்பிடாமல் எழுந்திருக்கிருன்)

இடைச்சி.—அப்பா! நீ இங்கேயே படுத்துக்கோ. நான் காட்டுக்கு போய் சாதம் கொடுத்துவிட்டு வந்துடுறேன். (போகிருள்)

ஸ்ரீனி—(கயிற்றுக் கட்டிலின்மேல் படுத்து) கோகிலா! நீ எவ்விதம் துக்கப்படுகிருயோ? அல்லது உயிர் துறந்தாயோ, செந்தாமரை மலர்போல் விளங்கும் உன் முகம் என் பிரிவாற்ருமையால் எவ்விதம் வாடி யிருக்கிறதோ? ஆ! அதை நினைக்கும்பொழுதே, என் கண்களில் என்னையறியாமல் நீர் வடிகிறதே, என்ன உலகம்? என்ன வாழ்வு? (அயர்ந்து தூங்குகிருன்)

(இடையன் காட்டில் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிருன்)

கந்தன்—இந்த பொம்பிளே பாருடா, போ காட்டுக்கு, பாலு, மோறு எல்லாம் வித்துட்டு பின்னலேயே சோறு கொண்டாந்துடறேனு சொன்னவ, இன்னும் காணமே. பொழுது போயிடுச்சே, இந்த காட்டிலே என்ன இருக்குது பசிக்கு, வரட்டும் அவளே ஒரே உதை கொடுக்கிறேன்.

(ஒரு கல்லின்மேல் உட்காருகிருன்)

கருப்பாயி—(சாதம் கொண்டுவர, கந்தன் பேசாமல் இருக்கிறன்.) என் மச்சான் கோவிச்சுகிட்டு இருக்கே? சோறுகொண்டாந் திருக்கிறேன். சாப்பிடலே.

கந்தன்—எட்டி! எந்நேரத்துக்குடி சோறு. பசியெல்லாம் தீர்ந்ததுக்கப்புறம் எப்படிடீ கஞ்சி குடிப்பது? (அடிக்கக் கையை ஓங்குகிறன்)

கருப்பாயி—அவசரப்படாதே மச்சான், உனக்கு வேலே செய்யாம, யாருக்கு செய்யப் போகிறேன்.

கந்தன்—உன்னே சொல்ல குத்தமில்லே. அண்டவூடு, பக்கத்தூடு எல்லாம் பார்த்து நீ கத்துக்கிட்டே. இனிமே அப்படி செய்யாதே. கஞ்சி கொண்டா.

கருப்—(அவனுக்கு அன்னம் படைத்து) மச்சான், நம்பபையன் செத்துப் போயிட்டானே, அவனேப்போல ஒரு புள்ளே காட்டிலே படுத்துக்கிட்டு யிருந்தது. அதுக்கு யாரும் திக்கில்லேயாம். நான் அவனே வீட்டுக்கு கூட்டிப் போய் சோறுபோட்டு, நம்ப ஊட்டிலேயே இருக்கச் சொல்லிவிட்டு வந்தேன். நீ சீக்கிரம் வூட்டுக்கு வா.

கந்தன்—இருடீ, நானும் வரேன.

(ஆடுகளேயும் மாடுகளேயும் ஓட்டிக்கொண்டு இருவரும் வீட்டிற்கு வந்து சேருகிறர்கள்.)

கந்தன்—கருப்பாயி! நல்ல பையண்டீ, நம்ப புள்ளேபோல வளக்கலாம்டீ, தம்பி, தம்பி. (ஸ்ரீனிவாசனே எழுப்புகிறன். ஸ்ரீனிவாசன் கண்விழிக்கிறன்)

கந்தன்—அப்பா! உன பேரு என்ன, உங்க அப்பா, அம்மா எல்லாம் எங்கே இருக்கிறங்கோ, நீ ஏன் இப்படி வந்தே?

ஸ்ரீனிவாசன்—ஐயா! என் பெயர் ஸ்ரீனிவாசன். எங்க அப்பா, அம்மா எங்கிருக்கிறர்களோ தெரியாது. நான் யாருமற்ற பாவி. எங்கேயாகிலும் சென்று வேலேசெய்து பிழைக்க எண்ணி புறப்பட்டேன்.

கந்தன்—வேலேயா செய்யப்போறே. உன்னல் என்ன வேலே செய்ய முடியும். வேண்டான்டா, அப்பா! நீ எங்க ஊட்டுலேயே இரு. எனக்கு பத்து காணி நிலங்கள் இருக்கு. இதையெல்லாம் பார்த்துக்குனு இங்கேயே சுவமாயிருந்துடு.

கருப்பாயி—குழந்தே! நீ எங்கேயும் போகாதேடா. நாங்க உன்னே விட்டுப் பிரியமாட்டோம். இங்கேயே இருந்துடரையா?

ஸ்ரீனி—அப்படியே செய்கிறேன்.

(முனியன் தன் கொள்ளேக் கூட்டத்துடன் வருகிறன். ஸ்ரீனிவாசன் இடையனிடம் இருப்பதை அறிந்து, எல்லோரையும் விட்டுப்பிரிந்து கிருஷ்ணனிடம் போகிறன்.)

முனியன்—(கிருஷ்ணனேப் பார்த்து) சாமி! அந்த ஸ்ரீனிவாசன் ஒரு எடையன் ஊட்டிலே இருக்கிறனுங்கோ. இனிமே, சீக்கிரம், கயிட்டம் இல்லாமே வேலேயை முடிச்சுடறேனுங்க.

கிருஷ்ணன்—அடே! அவன் எப்படி போனல் என்னடா? அவனே கொண்டாந்தையடா?

முனி—என்னுங்க சாமி! உங்களுக்கு மூளே கலங்கிட்டது. ஸ்ரீனிவாசனே ஒழிச்சுட்டா, அந்த கோகிலா வந்துடுவான்னு சொன்னத்துக்கு, சரி என்றைங்க. இப்போ என்னுங்க இப்படி சொல்லறைங்கோ.

கிருஷ்:—கோகிலா எங்கடா இருக்கிறா ?

முனி—தெரியாதுங்க. தேடிப் பிடிச்சாந்துடறேன்.

(போகிறான், வழியில் இரத்தினம் அவனை சந்திக்கிறான்)

இரத்தினம்—(தனக்குள்) இவன் அல்லவா கோகிலாவை துன்புறுத்தியவன். இன்னும் என்ன செய்ய காத்திருக்கிறானோ, சந்தடியின்றி சென்று பார்ப்போம். (பின் தொடர்கிறான்)

(முனியன் தன் கூட்டத்துடன் போய் சேருகிறான். அதைப் பார்த்து இரத்தினம் திரும்புகிறான். (தொடரும்)

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷுமணாஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

எம். வி. ராமச்சந்திரன்,
162, அம்மாபேட்டை மெயின் ரோட், சேலம்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

பகற் கொள்ளை

[என்னம் எழுதியது]

இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜெமீன்தார் வீட்டில் இரண்டு லக்ஷம் ரூபாய்கள் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்ததுடன் ஜெமீன்தாரின் ஏக புத்திரன் ரெங்காராமையும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று மிட்டாபூர் ஜனங்கள் எல்லாம் பேசிக்கொண் டிருந்தார்கள்.

மிட்டாபூர் ஜெமீன்தார் வீட்டுவாசலில் ஏகஜனக்கூட்டம். போலீஸ் ஜவான்கள் 5, 6 பேர் ஜனங்களை கூட்டம் போடாதபடி கலைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

போலீஸ் சூப்ரெண்டு மிஸ்டர் கொக்குத்துரை இடத்தைப் பார்வை யிட்டுவிட்டு விசாரணை நடத்திக்கொண் டிருக்கிறார். சூப்ரெண்ட் துரை ஜெமீன்தாரைப் பார்த்து 'சார் நான் எத்தனையோ கொள்ளைக் கேசுகளையும், கொலைக்கேசுகளையும் கண்டு பிடித்திருக்கிறேன்; தங்கள் குமாரனையும் பணத்தையும் தங்களுக்கு ஒரு வாரத்துக்குள் கண்டுபிடித்துக் கொடுக்கிறேன்; கவலைவேண்டாம். தாங்கள் கொள்ளை நடக்கும் சமயம் எங்கே இருந்தீர்கள்? எத்தனைபேர் வந்தார்கள்? வேலையாட்கள் எத்தனைபேர் இருந்தார்கள்? என்று விவரமாகச் சொல்லுங்கள்' என்றார்.

ஜெமீன்தார்:—நாளைக்காலமே பத்திரப் பதிவு ஆபீசில் இரண்டு லக்ஷம் ரூபாய்கள் கட்டுவதன் நிமித்தம் இன்று மத்தியானம் ஒரு மணிக்கு சிட்டி பாங்கியில் பதினாயிரம் ரூபாய் கரன்சி நோட்டுக்கள் இருபது வாங்கிவந்து இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டியிருந்தேன். சுமார் 3 மணியிருக்கும். என் குமாரன் $1\frac{1}{2}$ வயதுள்ள ரெங்காராம் இதோ இந்த மெத்தையில் தூங்கிக்கொண்டிருந்தான். வழக்கம்போல் கரன்சி நோட்டுக்களின் நம்பரை குறிப்பதற்காக இரும்புப் பெட்டியைத் திறந்து கரன்சி நோட்டுக் கட்டை கையில் எடுத்தேன். மாடியில் வெள்ளிப் பாத்திரங்கள் தடதடவென்று விழும் சத்தமும், என்வேலையாட்கள் 'விட்டுவிடாதே, பிடி, பிடி' என்று போட்ட சத்தமும், என் மனைவி 'ஐயோ! பாவிப் பசங்களா! விட்டு விடாதீர்கள்' என்று போட்ட சத்தமும் கேட்டது. ஏதோ அபா

யம் ஏற்பட்டுவிட்டது என்று நினைத்து கான்சி நோட்டுக்கட்டை அப்படியே கீழேபோட்டுவிட்டு மாடிக்கு ஓடினேன். மாடியில் விசேஷ சம்பவம் நிகழவில்லை எனத் தெரிந்துகொண்டு 2, 3 நிமிஷத்தில் கீழேவந்து கான்சி நோட்டுக்கட்டை தேடினேன், காணோம். என் அருமைப் புத்திரன் ரெங்காராமையும் காணோம். ஐயா, துரை அவர்களே! என் பணம் போனதைப் பற்றி கவலையில்லை. இன்னும் ஒரு லக்ஷம்வரை பணம் செலவு ஆனாலும் சரி; என் குழந்தை ரெங்காராமை கண்டுபிடித்து என்னிடம் சேர்த்தால் போதும்.

கொக்குத்துரை ஜெமீன்தார் மனைவி அம்புஜம்மாளைப் பார்த்து 'மாடியில் சத்தம் உண்டாக காரணம் என்ன?' என்றார்.

அம்புஜம்:-தெற்கு பக்கம் இருந்த வெள்ளிப் பாத்திரக் கண்ணாடி பீரோவை கிழக்கு பக்கம் வைக்கும்படி வேலைக்காரர்களுக்குச் சொன்னேன். தடிப்பயல்கள் என் வார்த்தையையும் கேளாமல் பாத்திரங்களுடன் பீரோவை தூக்கினார்கள். பீரோ அப்படியே சாய்ந்தது. பாத்திரங்கள் கண்ணாடியையும் உடைத்துக்கொண்டு கீழே விழுந்து பழுதடைந்தன. நான் பார்க்கச் சகியாமல் ஐயோ பாவிகளா, (பீரோவை) விடாதேயுங்கள், பிடியுங்கள் என்று சத்தம் போட்டேன்.' வேலைக்காரர்கள் ஒருவருக்கொருவர் எச்சரிக்கையாக 'விட்டு விடாதே பிடி பிடி' என்று சத்தம் போட்டார்கள்.

கொக்குத்துரை:—(ஜமீன்தாரைப் பார்த்து) நீங்கள் மாடிக்குப் போகும்போது வெளிக்கதவின் உள்தாழ்ப்பாள் போடப்பட்டிருந்ததா?

ஜெமீன்தார்:—அதற்கு 2 நிமிஷத்திற்கு முன் வேலைக்காரன் கண்ணனிடம் தபாலில் போட்டுவரும்படி ஒரு லெட்டர் கொடுத்தனுப்பினேன். அவன் கதவை தாழ் போடாமல் சாத்திவிட்டுப் போனான்.

கொக்குத்துரை:-வேலைக்காரன் கண்ணனை கூப்பிடுங்கள். ஜெமீந்தார் கண்ணனை கூப்பிட்டார்; கண்ணன் இல்லை. கொக்குத்துரை ஏதோ யோசித்தார். அவர் முகம் மலர்ந்தது. அவர் ஏதோ துப்பு கண்டுபிடித்துவிட்டதாக அவர் முகம் சொல்லிற்று.

கொக்குத்துரை:—(மீண்டும் ஜமீன்தாரைப் பார்த்து) எந்தத் தபால் பெட்டியில் தபால் போடச் சென்றான்? போய் வர எவ்வளவு நேரம் செல்லும்?

ஜெமீன்தார்:—மேலத்தெரு தபால் பெட்டியில் போடுவது வழக்கம். போய் வர 5 நிமிஷம் பிடிக்கும்.

கொக்குத்துரை-(கண்ணனின் அங்க அடையாளங்கள் பூராவும் குறித்துக்கொண்டு) அமெரிக்காவில் தேர்ந்த கொள்ளைக்காரர்களைப்

போல் கண்ணனும் ஒன்றும் அறியாதவன்போல பாசாங்கு செய்து கொண்டு இங்கே வரலாம். வந்தால் அவனை உடனே போலீஸ் ஸ்டேசனுக்கு கொண்டு வாருங்கள். இரண்டு போலீஸ் வீரர்களை இங்கே நிறுத்திவைத்துவிட்டுப் போகிறேன்' என்று இரு போலீசாரை நிறுத்திவிட்டு மற்றையோர்களுடன் போலீஸ்டேசனுக்கு சென்றுவிட்டார். மணியும் ஆறு அடித்துவிட்டது. கண்ணன் வரவில்லை. ஜெமீன்தார் தன் மோட்டாரில் ஏறி போலீஸ்டேசன் போய்ச் சேர்ந்தார். கொக்குத்துரை ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்



ஜெமீன்தாரைக் கண்டதும் ஒரு நாற்காலியில் உட்காரும்படிச் சொன்னார்.

இருபோலீசார் ஒருவனை, கையை பின்பக்கம், கட்டி, தள்ளிக் கொண்டு வந்தார்கள். அவனைப் பார்த்ததும் ஜெமீன்தார் ஆச்சரியம் அடைந்தார்.

போலீசார்:—(சூப்ரெண்ட் கொக்குத்துரையைப் பார்த்து) சார், இவன் ரயில்வேஸ்டேஷன் பீட்பாயிண்டுக்கு சமீபம் ஜலபாதை கழித்தான். அடே! பப்ளிக்ரோட்டில் நியூசன்ஸ் செய்யாதே போ என்றேன். 'போடா கையைகாட்டும் வேலையை நீ பாருடா. இங்கே ஒன்னுக்கு இருந்தா உனக்கு என்னடா! நாயே!' என்று திட்டினான். அதனால் அவனை சார்ஜ்செய்தேன். யாரையாவது ஜாமீன் கொடுக்கும்படி செய், விட்டு விடுகிறேன் என்றேன். என்னடா இது பெரிய கொலைக்கேசாக்கும், ஜாமீன் கொடுப்பதற்கு. நாலணா காசு வேணுமுனா எங்க எஜமான் பங்களாவுக்கு வாடா என்று சொல்லிவிட்டு வேகமாக நடக்க ஆரம்பித்துவிட்டான். ஸ்டேசனுக்கு கூப்பிட்டேன். வரமுடியாது; அவசர வேலையாகப் போறேன் என்று ஓட ஆரம்பித்தான். 541 ஐயும் கூட அழைத்துக்கொண்டு இவனை இங்கே கொண்டுவந்தேன்.

கொக்குத்துரை:—'சரி; 821 நீ பீட்பாயிண்டுக்குப் போ.' (என்று சொல்லிவிட்டு) கைதியைப் பார்த்து 'நீ ஜலபாதை கழித்தது உண்மை தானு?' என்ருர்.

கைதி:—ஆமாங்கோ தொரையே! (ஜெமீன்தாரைச் சுட்டிக் காட்டி) எஜமான ஒரு கடுதாசி கொடுத்தாங்கோ. அதை தபாலிலே போட்டு வரும்போது இப்படி புடிச்சி எங்கையை கட்டி கொண்டாந் துட்டாங்கோ. கையிலே காசு இல்லேங்கோ.

கொக்குத்துரை:—ஜெமீன்தார்வாள்! இவன்தானே கண்ணன்

ஜெமீன்தார்:—ஆம். இவனிடம்தான் கொள்ளை நடப்பதற்கு முன் தபால் கொடுத்தனுப்பினேன். நான் அவனுக்கு ஜாமீன் கொடுக்கிறேன் விட்டு விடுங்கள் யோக்கியன்.

கொக்குத்துரை:—ரூபாய் இரண்டு லட்சத்தையும், $1\frac{1}{2}$ வயது குழந் தையையும் திருடிக்கொண்டுபோன திருட்டுப் பயல் எதோ தெய்வா தீனமாகப் பிடி பட்டான் என்று நான் சந்தோஷப்படுகிறேன். தாங்கள் அவனை விடுதலை செய்யும்படி சொல்லுகிறீர்களே! (கண் ணனைப் பார்த்து, குழந்தையையும் பணத்தையும் எங்கே ஒளித்து வைத்திருக்கிருய்?

கண்ணன்:—சாமி தொரையே! நானு ஒன்னுக்குப் போனே னுங்கோ. அங்கே கொழுந்தையும் இல்லே; பணமும் இல்லே.

கொக்குத்துரை:—541, இவனை லாக்கப் ரூமுக்கு கொண்டு போய் உண்மை சொல்லும்வரை போலீஸ் மரியாதை நடத்து.

541 கெ. கான்ஸ்டேபில் கண்ணனை லாக்கப் ரூமிற்குக் கொண்டு போய் அவனது கைகள் இரண்டையும் பின்புறம் கட்டி, குழந்தையும் பணமும் எங்கே என்று கேட்டு அடிகொடுத்தான். 541 க்கு ஒன் னுக்குப் போனதுக்கு கண்ணன் காலணு கொடுக்காத கோபமும் சேர்ந்துகொண்டதால் பலமாக அடித்தான். கன்னன் தெரி யாதுங்கோ என்று 30, 40 அடி வாங்கும்வரை சாதித்தான்; போலீஸ் புலி விடுவதாகத் தெரியவில்லே. 'சாமி அடிக்காதிங்கோ கொழந்தை யையும் பணத்தையும் காட்டுறேன்' என்ருன். போலீஸ்புலி 'அடே! அப்பவே காலணு காசை எறிந்துவிட்டு போயிருந்தா இந்த அடி கிடைத்திருக்குமா' என்று மெதுவாகச் சொல்லிவிட்டு, ரூம் ரெண்ட் கொக்குத்துரையிடம் வந்து 'சார் குழந்தையையும் பணத் தையும் பந்தோபஸ்தாக வைத்திருக்கிருனும். காட்டுவதாகச் சொல்லு கிருன்' என்ருன்.

போலீஸ்டேசன் வாசலில் ஒரு ரிக்ஷா வந்து நின்றது. அதி லிருந்து ஒரு ஸ்திரியும் ஒரு குழந்தையும் இறங்கி ஸ்டேசனுக்குள் வந்

தார்கள். குழந்தை 'அப்பா' என்று சத்தம் போட்டுக்கொண்டு ஜெமீன்தாரிடம் ஓடினது; ஜெமீன்தார் மடியில் தூக்கிவைத்துக் கொண்டார். 'அம்புஜா! பணம் அகப்பட்டதா' என்று தன் மனைவியை கேட்டார் ஜெமீன்தார்.

அம்புஜா:—பணமும் வீட்டிற்குள்ளிருந்தது, பையனும் நமது வீட்டுக்குள்ளேயே இருந்தான்.

கொக்குத்துரை:—என்ன பணமும் வீட்டிலிருந்தது; பையனும் வீட்டுக்குள் இருந்தானு?

அம்புஜா:—ஆம். அறையில் குழந்தை அழும் சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தேன். படுதாத் துணியை உடல்பூராவும் சுற்றிக்



கொண்டு துணிக்குள் இருந்துகொண்டு குழந்தை அழுதுகொண்டிருந்தான். குழந்தையை தூக்கினேம்; படுதாத்துணியை சுட்டிக் காண்பித்துகொண்டு 'ரொட்டி ரொட்டி' என்று அழுதான். துணியை உதறினேம். அதிலிருந்து கான்சி நோட்டுக்கட்டு விழுந்தது.

கொக்குத்துரை:—பெரிய ஜெமீன்தார் மாடிக்கு ஓடினர். சின்ன ஜெமீன்தார் அதே சமயம் தூக்கம் விழித்து கான்சி நோட்டுக்கட்டை 'ரொட்டி' என்று நினைத்து கையில் பிடித்துக்கொண்டு பக்கத்து அறைக்குப் போனர்; துணி காலில் சுற்றிக்கொண்டது. துணியில் விழுந்து புரண்டார். உடல் பூராவும் துணி சுற்றிக்கொண்டது. அப்படியே தூங்கிவிட்டார். இப்பொழுது இரவு 7 மணிக்கு விழித்து அழுதார். விஷயம் இவ்வளவுதான்.

மறுநாள் வெள்ளிக்கிழமை வேலைக்காரன் கண்ணனும் அவன் மனைவி ராக்காயும் மாரியம்மாளுக்கு நூறு தேங்காய் உடைத்தார்களாம். அது ரெங்காராம் அகப்பட்டதற்காகவா? அல்லது கண்ணன் விடுதலை அடைந்ததற்காகவா என்று தெரியவில்லை. நமது கண்ணன் ஜெமீன்தார் வீட்டு நாட்டாண்மைக்காரராக இருக்கிறான்.

ஆற்றில் தவறி விழுந்துவிட்ட ஒருவன் ஐயோ! என் அருமையான 'கை' போகிறதே! என் அருமையான 'கை' போகிறதே! என்று கூச்சலிட்டான்.

அவ்வழியே சென்ற ஒருவர் அவனை கரையில் இழுத்துப் போட்டு 'அருமையான 'கை' என்றாயே என்ன விசேஷம்' என்றார்.

ஐயா! என் பாட்டனருக்கு கண் தெரியாது. நான் அவரை அழைத்துப் போய் பிச்சை வாங்குவேன். அவர் என் கையை அருமையான கை என்பார். ஆகையால் அம்மாதிரி சொன்னேன், என்றான்.
—நாகூர் கே காசிநாதன்

கீழ்கண்ட ஊர்களுக்கு நமது 'தமிழரசு'க்கு

ஏஜண்டுகள் தேவை

செங்கற்பட்டு	ஆரணி
திருவண்ணாமலை	ஸ்ரீ வில்லிபுத்தூர்
பழனி	செங்கோட்டை
திருப்பதி	ஆறுமுகநேரி
கோட்டையூர்	திருச்செங்கோடு
கானாடுகாத்தான்	அம்பா சமுத்திரம்
ராமனாதபுரம்	தென்காசி
சிவகங்கை	பள்ளத்தூர்
ஸ்ரீ வைகுண்டம்	சக்கிந்திராபாத்

தாராபுரம் தேவகோட்டை சிதம்பரம்

பெரிய வீட்டுப் பேச்சு வாய் விட்டால் போச்சு

[சி, டி. வேலு]

மாலை ஐந்துமணி யிருக்கும். கும்பகோணம் கடலங்குடித் தெரு முனிஸிபல் பெண்பாடசாலையிலிருந்து கூட்டங் கூட்டமாக 5 வயதுக்கு மேல் 16, 17 வயதுக்குட்பட்ட அநேகம் வெளிக் பெண்கள் கையில் புத்தகங்களுடன் கிளம்பி வந்து கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் உல்லாசமாகப் பாடிக்கொண்டும், தத்தித் தத்திக் குதித்துக் கொண்டும், பாட விஷயமாகப் பேசிக்கொண்டும், சென்றுகொண் டிருந்தனர். அவர்களில் ஒரு பெண்மட்டும் நவநாகரீகமுறைப்படி கண்களில் கண்ணாடி, காதில் வெள்ளைக் கல், பாடி ரவிக்கை, புதுச்சேரி ஸில்க் கவுன், காலுக்கு பேபி ஸிலிப்பர், முதலியவைகள் அணிந்து தலை மயிரை சுருள் வகுடு எடுத்து பாதிவரை ஜடை பின்னி, பாதியை பின்னாமல் தொங்கவிட்டிருந்தாள். அவள் யாரையோ எதிர்பார்த்த வண்ணமாய் ஒய்யாரமாகநடந்து போய்க் கொண்டிருந்தாள். அவள் கூடவந்த மற்றப் பெண்களெல்லாம் முன்னதாகப் போய் விட்டார்கள். மேற்கூறிய அம்புஜாக்ஷிமட்டும் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே ராமஸ்வாமி கோவில் தெற்கு மடவிளாகம் திரும்பும் சமயம் சைகில் மணி சப்தம் கேட்டது; திரும்பிப் பார்த்தாள். ஓர் அழகிய வாலிபன் வேகமாக ஸைக்கிளில் வந்து ஒரு கடிதத்தை அவள் மேல் படும்படி வீசி எறிந்துவிட்டுச் சென்றான். அம்புஜாவும் புன்சிரிப்புடன் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று சுற்றிப் பார்த்துக்கொண்டாள். எவரும் பார்க்கவில்லை. துரிதமாக ஆழ்வார் நம்பித் தெருவிலுள்ள மாடி வீட்டிற்குச் சென்று தனக்கென விடப்பட்டிருந்த மாடியிலுள்ள அறைக்குச் சென்று கையிலிருந்த புத்தகங்களை மேஜைமீது வீசி எறிந்துவிட்டு சோபாவில் உட்கார்ந்து கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். ஆனந்தம் கொண்டாள். தட்சணமே ஒரு லெட்டர் பேப்பரில் சுருக்கமாக நான்கேவரியில் பதில் எழுதி வைத்துவிட்டு பள்ளி உடைகளைக் களைந்துவிட்டு ஊதா காரச்சி சேலை இடுப்பில் கட்டிக்

கொண்டு தலையின் பின்னலை பூராவும் பிரித்துவிட்டு பர்மா (பிச்சடா) கொண்டை போட்டு ஸில்க் டேப் சொருகிக் கொண்டு பதிலெழுதிய லெட்டரையும் கையில் எடுத்துக்கொண்டு கீழிறங்கி வந்தாள்.

அதற்குள் அம்புஜாவின் தாயார் லக்ஷ்மிஅம்மாளும் நவராத்திரி வேடிக்கை பார்க்கப் போவதற்கு மகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இருவரும் உல்லாசமாக நடந்து சென்று ராமஸ்வாமி கோவில் கும்பேஸ்வரர் கோவில், சோமேஸ்வரர் கோவில், முதலியவைகளைப் பார்த்துவிட்டு, நாகேஸ்வரர், அபிமுக்தீஸ்வரர் முதலிய கோயில்களைத் தரிசிக்கச் சென்று கொண்டிருந்தார்கள் அவர்களுடன் வேறு 5, 6, பெண்மணிகளும் சென்றுகொண் டிருந்தார்கள்.

நவராத்திரி ஆரம்பித்து 7 நாளாகி விட்டபடியால் வெளியூர்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்து ஒவ்வொரு கோவிலிலும் கூட்டம் கூட்டமாகப் பார்த்துக்கொண்டும், ரஸ்தாவில் நடமாடிக் கொண்டும் இருந்தனர். அதிலும் டைமண்டு சினிமாவில் 'வள்ளி திருமணம்' என்னும் பேசும் படம் முதன்முறையாக வரவழைத்திருந்தமையால் டிக்கெட் வாங்குவதற்காக ஏராளமான ஜனங்கள் கூடுவதும் டிக்கட் அகப்படாமல் தயங்கி நிற்பதுமாக இருந்தனர்.

நமது அம்புஜாக்ஷி முதலியவர்கள் அந்த இடத்தருகில் வரும்போது ஜனநெருக்கம் அதிகமாக இருந்தமையால் தனித்தனியாக முன்னும் பின்னுமாக நடக்கும்படியாகிவிட்டது. அந்த நிலமையிலும் அம்புஜா தான் காதலித்துவரும் வாலிபனை கவனித்துக்கொண்டே வந்தாள். அவள் எதிர்பார்த்தபடியே அவ்வாலிபனும் எதிர்ப்பட்டான். அம்புஜா தாயாரைக்கூட கவனியாது அவன் கையில் லெட்டரைச் சேர்த்துவிட்டு இரண்டு மூன்று வார்த்தைகளும் பேசிவிட்டு, நாகேஸ்வரர் கோவிலுக்குச் சென்றாள். அவள் தாயாரும் மகளைக் காணாது கோபுர வாசலில் கோபக்குறியுடன் காத்துக்கொண்டிருந்தாள். மகளைப்பார்த்ததும் சந்தோஷத்துடன், கும்பலில் இப்படி அலக்ஷியமாக வரலாமா என்று கண்டித்துவிட்டு, நாகேஸ்வரரையும் மற்றக் கோயில்களையும் பார்த்துவிட்டு வீடு சென்றனர். இவ்விதமாக பல தடவைகளில் அம்புஜாவும் அவ்வாலிபனும் சந்தித்துப் பேசிக் கொண்டு வந்தனர்.

இனி நமது அம்புஜத்தின் குடும்பத்தைச் சற்று கவனிப்போம். அவள் குடும்பத்தார் பரம்பரையாக ஏராளமான பணக்காரர்கள். அவ்வூர் சகல வைஷ்ணவ கோவில்களின் டிரஸ்டி அவளுடைய தகப்பனர் பிரதிவாதி பயங்கர எதிராஜ சடகோபராமானுஜாச்சாரியாரே. அவருக்கு ஆண் சந்ததியே கிடையாது. அம்புஜா என்ற ஒரே பெண் தான். ஐயங்கார்வாளுக்கு அவாள் ஜாதியினர்களுக்குள்ளேயே அதிக மதிப்பு இருந்துகொண்டிருந்தும் ஆண்பிள்ளை யில்லையே என்ற

கவலையினுல் அவர் அம்புஜத்தை அவ்வளவாய் கவனிப்பதில்லை. ஆனுல் அவர் பத்தினி லக்ஷ்மி அம்மாளால் அம்புஜம் நவீன நாகரீக முறையில் செல்வமாக வளர்க்கப்பட்டு வந்தாள்.

தவிர, லக்ஷ்மி அம்மாளுக்கு மட்டும் அம்புஜாவை தனது தம்பி ஸ்ரீனிவாசனுக்குக் கலியாணம் செய்துவைத்து விட்டால் சொத்துக்கள் பூராவும் தம்பிக்கே சேரும் என்ற எண்ணத்தைக்கொண்டு ஐயங்காரிடம் 'அம்புஜாவுக்கோ வயது 13க்கு மேலாகி விட்டது. இனி கலியாணம் செய்துவிட வேண்டும். திடீரென்று புஷ்பவதியாகி விட்டால் நமது உறவின்முறையார்கள் கேலி செய்வார்கள். ஆகையால் அடுத்த தை மாதத்திலேயே முகூர்த்தத்தை நடத்திவிட வேணும். மாப்பிள்ளைதான் ஸ்ரீனிவாசன் இருக்கிருனே' என்று நாள் தவருமல் வம்பு செய்து வந்தாள்.

ஐயங்காருக்கோ மைத்துனன் ஸ்ரீனிவாசனுக்குப் பெண்ணை மணம் செய்விக்க கொஞ்சங்கூட இஷ்டமேயில்லை. அவன் 5 வகுப்புக் கூட சரியாகப் படித்து முடிக்கவில்லை. வயிற்றுச் சோற்றுக்குக்கூட சம்பாதிக்க வழியறியான். சதா சோம்பேறிகளுடன் சேர்ந்து கொண்டு ஊதாரியாகத் திரிவான். ஜாதிக்கேற்ற ஆசாரம் ஒழுக்கம் எதுவும் அறியான். ஏதோ தமக்கை லக்ஷ்மி அம்மாளின் சஹாயத்தால் வெள்ளை வேஷ்டியும், ஸில்க் ஷர்ட்டும், ரிஸ்டு வாட்சும், காதில் வெள்ளைக் கல் கடுக்கனும் அணிந்து கொண்டிருப்பதும் தவிர, அம்புஜா வீட்டில் இருக்கும்போது வருவதும், அவளுடன் இரண்டொரு வார்த்தை பேசுவதும், தமக்கை போடும் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு வெளியே போய் விடுதுமாக இருந்தான். ஐயங்கார்வாள் வீட்டில் இருக்கிருர் என்ருல், உள்ளேயே நுழைய மாட்டான்.

அம்புஜாவோ சிறியவளாக யிருந்தும் அவள் மனப் போக்கின் படி தாயார் தகப்பனுர் வளர்த்து விட்டபடியால் நாகரீக முறைப்படி 'ஜாதியாவது குலமாவது. மனதுக்கிசைந்த வாலிபனை (கோபால சாமியை) மணந்தால் மணப்பது. இல்லாவிட்டால் உயிர் துறப்பது, என்று முடிவு செய்திருந்தாள்.

கோபாலசாமி என்பவன் காலேஜில் F. A. வகுப்பில் வாசித்துக் கொண்டிருக்கும் அழகிய வாலிபன், கவரைத் தெருவில் ஏராளமான சொத்துடைய தனவந்தரின் புதல்வன். தாய் தந்தையர்களில்லை. பூராச் சொத்துக்கும் அவனே வாரீசாகையால் தன் இஷ்டப்படி செலவு செய்வதும், ஷோக்காகத் திரிவதுமாக இருந்ததுடன் அம்புஜாவிடம் சிறுவயது முதலே சினேகமுறையில் பழகிவந்தான். அது வரவர காதலாக மாறிவிட்டது.

*　　　*　　　*

நமது தமிழ் நாட்டில் ஒரு பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடி மணம் செய்விப்பதில், பெண்ணின் தாயாரோ தகப்பனுரோ அவர்கள் மனப்போக்கின்படியும் சௌகரியப்படியுமுள்ள மாப் பிள்ளையைத்தான் தெரிந்தெடுப்பதென்பதும், பெண்ணை அதுவிஷ யமாக ஒரு வார்த்தைகூட கேட்டுச் செய்கிறதில்லை என்பதுமே தொன்றுதொட்டுவரும் வழக்கமாக இருக்கிறது. அந்தக் கெட்ட வழக்கத்தினுல் அனேக குடும்பங்களில் கணக்கற்ற இளங் கைம் பெண்களும், அனேக குடும்பங்களில் கலியாணம் முடிந்த அன்று தொட்டு சதிபதிகளுள் கலகங்களும் அகால மரணங்களும் சம்ப வித்துக் கொண்டு வருகிறதென்பதும் உலகமறிந்த விஷயமே.

அதற்கிணங்க நமது ஐயங்காரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உப் பிலியப்பர் கோயில் பெரியமரை வீராகவ சீனிவாச தாத்தாச்சாரியார் குமாரன் ரெகுநாதனுக்கும் அம்புஜாவுக்கும் தைமீ 33வ பானுவாரம் தசமி திதி உத்திராட நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் திருமணம் குதூகலமாக நடந்தேறியது. லக்ஷ்மி அம்மாளுக்கு அம்புஜாவை சீனிவாசனுக்கு மணம் செய்விக்க முடியவில்லையே என்ற குறை மட் டும் இல்லாமல் போகவில்லை. அம்புஜாவும் மணம்நடந்த ஐந்து நாளிலும் எதோ பொம்மைபோல் ஆட்டப்பட்டு வந்தாளே தவிர, அவள் மனம் கோபால்ஸாமியையே நினைத்துக் கொண்டிருந்தது. சீனிவாசனும் ஐயங்கார்மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள சமயம் பார்த்துக்கொண்டே வந்தான். ஐயங்கார்மட்டும் தம்பெண்ணுக்கு சரியான வரன் தேடிவிட்டதாக நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டார்.

அம்புஜாவும் சிறு பெண்ணுயிருந்தமையால் புருஷன் வீட்டுக் கழைத்துப் போகப்படாமல் தாயார் வீட்டிலேயே இருந்துவந்தாள். படிப்பையும் நிறுத்திவிட்டாள்.

ஒரு மாதம் சென்றது. ஓர் சுபதினத்தில் அம்புஜா புஷ்பவதி யானுள். ஐயங்கார் ஜோசியரை கொண்டு பார்க்க நக்ஷத்திர பலன் மணமகனுக்கு ஆகாது என்பதை உணர்ந்தார். லக்ஷ்மி அம்மாளுக்கும் தெரிந்து விட்டது. அன்றுமுதல் ஐயங்கார் அம்மாளின் வசை மொழிகளுக்குட்படலாயினர்.

சீனிவாசனும், கோபாலனுக்கும் அம்புஜாவுக்கும் கொஞ்ச நாளாக கடிதப் போக்குவரத்து நடக்கச் சாதகமாக இருந்து வந்தான்.

அடுத்த பங்குனிமீ 11வ சோமவார தினத்தன்று அம்புஜாவுக் கும் ரெகுநாதனுக்கும் சாந்தி முகூர்த்தம் நடந்தது. மணவாளனுடன் உப்பிலியப்பர் கோவில் சென்றுள். ஒரு மாதம் 30 நாள்கூட ஆகவில்லை. ரகுநாதனுக்கு இவ்வுலகின் இன்பம் சலித்து விட்டது.

பெருமாள் திருவடி யடைந்தான். காதலற்ற மணத்தின் பயனாக அம்புஜா 'விதவை' என்னும் திருநாமம் பூண்டாள். பரிதாபம். பழய வழக்கத்தின் கொடுமை.

பிறந்தகத்துக்கு விதவை என்னும் பெயருடன் வந்தாளேயொழிய மாங்கலியத்தைத் தவிர மற்ற ஆபரணங்கள் எதையும் கழற்றவில்லை. நாளாக நாளாக அம்புஜா உருவம் பருத்து கம்பீரத் தோற்றமும் அழகும் வாய்ந்திருந்ததுடன் பார்ப்பவர்கள் தேவமாதோ அல்லது கெந்தர்வப் பெண்ணோ என ஐயுறும்படித் தோன்றினாள். கோபால் சாமியையே நினைந்து நினைந்துருகினாள். சிறு பெண்ணாகையால் தாயார் தகப்பனார்களின் கடுமையான கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு வந்தாள்.

ஒருநாள் காலை சீனிவாசன் மூலம் கோபாலனால் எழுதப்பட்ட ஒரு கடிதம் அவளுக்குக் கிடைத்தது: அதில்,

நேசம் மிகுந்த அம்புஜாவுக்கு,

நீ நேற்று எழுதிய கடிதம் கண்ணுற்றேன். அதில் கண்டபடி சகலமும் தயார் செய்து விட்டேன். இன்றிரவு 11 மணி சுமாருக்கு உங்கள் தெரு வடக்கு மூலையில் ஒரு வெள்ளைக் குதிரை வண்டி வந்து நிற்கும். தூங்கி விடாதே. உன் சாமான்களுடன் வரத் தயாராக இரு. சீனிவாசனையும் தயார் செய்துவிட்டேன். கவலைப்படாதே.

இப்படிக்கு, உனது ஆசை நண்பன்,

கோபால்சாமி.

என்றெழுதியிருந்தது. சந்தோஷமடைந்தாள். அன்று பகல் ஒவ்வொரு விநாடியையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்தாள். இரவு மணி 9 ஆயிற்று. எல்லோரும் சாப்பாடு முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்றனர். அம்புஜாவும் படுக்கைக்குச் செல்வது போல் பாவனை செய்தாள். பின் ஊக்கத்துடன் தனது வசமிருந்த நகைகள் பூராவையும், இரண்டொரு சேலை, ரவிக்கை முதலியவைகளையும் எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டி வைத்துவிட்டு, தாய் தந்தையர் நித்திரையிலாழ்ந்து விட்டார்களா என ஒருமுறை பரிசோதித்து விட்டு, மேன் மாடி முற்றத்திலேறி வடகோடியில் வந்து நின்று கொண்டுவர வேண்டிய வெள்ளைக் குதிரை வண்டியை எதிர்பார்த்து நின்றாள். $10\frac{1}{4}$ மணி போஸ்ட் மெயில் போகும் சப்தம் கேட்டது. முக்கால் மணிதான் பாக்கி யிருக்கிறது. வண்டி வரவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கும் சமயம் வண்டியும் வந்து நின்றது. எலக்ட்ரிக்லைட் கம்பத்தடியில் கோபாலனும், சீனிவாசனும், தோன்றினர். தைரியத்துடன் அறைக்கு வந்து கட்டி வைத்த மூட்டையைக் கையிலெடுத்தாள். தெருக்கதவை சப்தம் கிளம்

பாமல் திறந்து வெளியில் வந்தாள். கதவை வெளிப் பக்கம் தாழிட்டாள். நடக்க முயன்றாள். கால் கூசிற்று. தாய் தந்தையரையும், சினேகிதிகளையும் மனதில் எண்ணினாள். கண் கலங்கிற்று. கோபால்சாமி எதிரே வந்து மூட்டையை வாங்கினான். 'கண்ணே! கவலைப்படாதே. இனி நாம்தான் பாக்கியசாலி. வேகமாக வண்டிக்கு நட, யாராவது பார்த்துவிட்டால் வம்பாக முடியும்' என்று கையைப் பிடித்து அழைத்துச் சென்று வண்டியில் உட்கார வைத்தான். தானும் உட்கார்ந்தான். சீனிவாசன் வண்டியை ஓட்டினான். அம்புஜாவும் கோபால்சாமியின் புஜத்தின்மீது தலையைச் சாய்த்துக் கொண்டாள். குதிரையும் வேகமாக ஓடிக்கொண்டேயிருந்தது.

சுமார் 6 மணி சோத்தில் மாயவரம் ஜங்ஷனில் வண்டி வந்து நின்றது. அம்புஜாவும் கோபால்சாமியும் இறங்கி ரிப்ரெஷ்மெண்ட் அறையில் போய் உட்கார்ந்திருந்தார்கள். சீனிவாசனும் வண்டியையும் குதிரையையும் சொந்தக்காரனிடம் ஒப்புவித்துவிட்டு மதராசுக்கு 3 டிக்கெட்டுகள் வாங்கிவந்தான். 10 நிமிஷத்தில் ரயிலும் வந்தது. மூவரும் மதராஸுக்குப் பிரயாணமாகி விட்டார்கள்.

* * *

விடியற்காலை. ஐயங்கார் காவேரி ஸ்நானத்துக்காக எழுந்து கதவைத் திறந்தார். வெளிப்புறம் தாழிட்டிருந்தது. லெக்ஷ்மி அம்மாளையும் எழுப்பினார். விஷயம் புரியவில்லை. அம்புஜாவைக் கூப்பிட்டார்கள். அம்புஜா வீட்டில் இருந்தாலல்லவா பதில் பேசுவாள்? படுக்கையில் அம்புஜாவைக் காணவில்லை. அலறித் துடித்தார்கள். வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டாள் லெக்ஷ்மி அம்மாள். ஐயங்காரும் யோசித்துப் பார்த்தார். அம்மாளை அடக்கினார். 'வெளியார் அறிந்தால் வெட்கக்கேடு. அம்புஜாவை நான் கண்டு பிடிக்கிறேன். நீ மட்டும் அவள் பாட்டியார் வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொல்லென்று' யுக்தி சொன்னார். அதற்குள் வேலைக்காரியும் தாழ்பாளைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். 'எஞ்சாமி கதவு வெளியில் சங்கிலி போட்டிருக்குது' என்று கேட்டாள். ஐயங்காரும், குழந்தை அம்புஜாவும் ஸ்ரீனிவாசனும் 4-மணிக்குப் போட்மெயிலுக்குப் போனார்கள். ஸ்ரீனிவாசன் மறதியாய் சங்கிலி போட்டு விட்டான் போலிருக்கிற'தென்று சாக்குச் சொல்லிவிட்டு காவேரிக்குப் புறப்பட்டு விட்டார். லக்ஷ்மி அம்மாளும் மகளின் பிரிவாற்றாமையால் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக ஸ்ரீனிவாசனை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். மணி 9 ஆயிற்று அவனும் வரவில்லை. ஐயங்காரும் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு வந்து சேர்ந்தவர் 'அடியே. கவரைத்தெரு ராஜகோபால் நாயுடு மகன் கோபால்ஸாமியைக் கூட நேற்று ராத்திரி முதல் காணவில்லையாம். காரைக்கால் புதுச்சேரி முதலிய ஊர்களுக்குத் தேடிப்போயிருக்கார்களாம்'

என்று சொன்னர். அம்மாளும். 'எவன் எக்கேடு கெட்டாலென்ன! அருமைக் கண்மணி அம்புஜாவை எங்கு கண்டு பிடிப்போம்' என்று ஏங்கினள்' அவளது ஸ்னேகிதிகளும் ஒவ்வொருவராக வழக்கப்படி ஆத்துக்குப் போக வந்தழைத்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடம் அம்புஜா ஓடிவிட்டதைப்பற்றி ரகசியமா யிருக்கட்டும் என்று சொல்லி வந்தாள். வெறும் வாயை மெல்லும் பெண் கூட்டங்களுக்கு இந்த அவலகப்பட்டால் போதுமல்லவா?

நாள் வாரமாகவும் வாரம் மாதங்களாகவும் சென்றன. ஐயங்காருக்கு மனக்கவலே அதிகரித்து வந்தது. ஆனல் வெளிக்குமட்டும் 'பெண் எங்கே' என்ருல் 'பாட்டியார் வீட்டிலிருக் கிருள்' என்று சொல்லிவந்தார். ஒருநாள் காலே போஸ்ட்டுமேன் ஒரு கவரை ஐயங்கார் கையில் கொடுத்துச் சென்ருன். மேல் விலா சத்தின் எழுத்தை கவனித்தார். அம்புஜா எழுத்து என்பதை உணர்ந் தார். அம்மாவைக் கூப்பிட்டுப் பக்கத்தில் நிற்க வைத்துக்கொண்டு வாசித்தார். அதில்,

எனதன்பார்ந்த தந்தையே, மன்னிக்கவும். அபாக்கியவதி அம்புஜா அடிபணிந்த விண்ணப்பம்.

தங்களே விட்டுப் பிரிந்த இவ்வளவு நாளாக கட்டுக்கடங்கா மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என் பிரிவால் தாங்கள் எவ்வளவு துக்கப்படுகிறீர்களோ அறியேன். இன்னமும் அதற்கு இடங்கொடுக்கக் கூடாதென்றே இந்த நிரூபம் வரைய லானேன். நீங்கள் எனது மனதுக்கிசைந்த மணவாளனே மணம் செய்விக்காமல் ஓர் பாழும் கிணற்றில் தள்ளியது மன்னியில் விதவை என்னும் நாமகரணமும் சூட்டி தங்கள் கடுமையான கட்டளேக்கும் கீழ்படிய வைத்திருந்தீர்கள். தங்கள் பழய சாஸ்திரவா முறைக்குக் கட்டுப்பட்டிருந்தால் இக்கால நாகரீகத்துக்கு நேர் விரோதமாகுமென்றே எனது பால்ய ஸ்னேகர் கோபால்சாமி நாயுடு வுடன் இவ்வூரில் வந்து மறுமணம் செய்துகொண்டு காதல் வாழ்க் கையைக் களிப்புடன் நடத்திக்கொண்டு வருகிறேன். ஆகையால் ஆசீர்வாதத்தை எனக்கும் எனது புத்திரனுக்கும் அளிக்குமாறு அன்புடன் கோருகிறேன். அம்மாவையும் அவ்வண்ணமே செய் யும்படி கோருகிறேன். இப்படிக்குத் தங்கள் புத்திரி,

அம்புஜா.

மங்களவில்லா, 1676. பிராட்வே மதருஸ்.

ஒரு விதத்தில் ஆனந்தமடைந்தாரெனினும் குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பென்றும், மானத்தைக் கெடுத்தவள் என்றும் சரமாரியாக வைதார். லக்ஷ்மி அம்மாவுக்குத் தாங்கவில்லே. பெற்ற

வயிறல்லவா? உடனே மதாராஜுக்குப் போக உத்திரவு கேட்டாள். ஐயங்கார் மனம் ஒப்பவில்லை. மறுபடி 2 நாள் சென்று போய்வா உத்திரவிட்டார். அன்று மத்தியான ரயிலுக்கே கிளம்பி விட்டாள்.

*   *   *

லக்ஷ்மி அம்மாள் திரும்பிவந்து மாதம் 3-க்கு மேலாயிற்று. ஐயங்காரும் அம்மாவும் சந்தோஷமாகவே காலம் கடத்தி வருகிறார்கள். மாதா மாதம் லக்ஷ்மி அம்மாள் தம்பிக்காகவும் அம்புஜாவுக்காகவும் ஐயங்காரைக்கொண்டு தவறாமல் 1000 ரூ. இன்ஷியூர் மூலம் அனுப்பி வருகிறாள். உறமுறையார்களுக்கும் ஊர் ஜனங்களுக்கும் இந்தச் சமாசாரம் பூராவும் நிதர்சனமாக தெரிந்திருந் தும் 'பெரிய வீட்டுப் பேச்சு வாய்விட்டால் போச்சு' என்பதற் கிணங்க சத்தம் போட்டுப் பேசிக் கொள்ளாமலிருந்து வருகிறார்கள்.

ராமன்:—பாம்பு கடித்தவுடன் விஷம் மேல் ஏறாமல் இருப்பதற் காகக் கடித்த இடத்தை கத்தியால் நன்றாய் கீறிவிட வேண்டும்.

சோமன்:—ஆமாம். மார்பில் பாம்பு கடித்தாலும் நன்றாய்க் கீறிவிட வேண்டும்.

ராமன்:—தலையில் கடித்தால் ?

சோமன்:—தலையைச் சீவி எறிந்துவிட வேண்டும்.

—ஜி. பி. மணியன்

வக்கீல்:—சட்டம் ரூ 500 க்குக் குறைந்து இடங்கொடுக்கா தப்பா!

கக்ஷிக்காரன்:—அதென்னங்க சாமி! சட்டம் அவ்வளவு நீளங்களா?

—திருவை கே. வைத்தியநாதன்

(புதிதாய் சைக்கில் கற்றுக்கொண்ட நாட்டுபுறத்தான் ரோட்டில் வரும்போது)

நாட்டுபுறத்தான்:—ஐயா! குடையை மடக்கு 'வண்டி மிரளும்'.

குடைபிடித்து செல்பவர்:—வண்டி மிரளும்முன் நீ மிரளு கிறாயே!

—எஸ். எ. சஞ்சீவி

தகப்பனர் மகனை கோபத்துடன், 'டே கண்ணு, அந்த ரோஜா செடிக்கு தண்ணி விடவேணும் தோண்டி எடுத்திட்டுவா !'

கண்ணன் ரோஜா செடியை வேருடன் தோண்டி எடுத்துக் கொண்டுவந்து, 'அப்பா செடி இந்தா; பள்ளிக்கூடத்துக்கு நோமாச்சு சம்பளம் குடு' என்றான்.

—மதர என். ஆர் சாமி



மனைவியே காதலி !

[நான்]

அவன் அப்படியே திகைத்து நின்றான். ஓர் அடி மேல் எடுத்துவைக்க அவன் மனம் துணியவில்லை. அப்படி அவன் உள்ளத்தைக் கவர்ந்தவள் நீலா.

அந்நிலையில் தன்னை எவரேனும் கண்டுவிடப் போகிறார்களோ என்ற பயம் அவனுக்கு உண்டாயிற்று. எனவே நீலாவின் கடைக்கண் பார்வை விழும் இடமாகப் பார்த்து அவன் அமர்ந்தான்.

கடற்காற்று சிலு சிலு வென்று அடித்துக்கொண்டிருந்தது. நாள் முழுதும் வேலைசெய்து களைப்புற்ற மக்களுக்கு அக்காற்று புத்துயிரளித்தது. பாலியப் பருவத்தினர் இருபாலார்கட்கும் அது இன்பத்தைத் தந்தது. துயருற்ற மக்களின் துக்கத்தை அது துரத்தியது. கடற் காற்றுக்கு என்ன சக்தி!

அவன் நீலாவின் முன் தோன்றினான். தக்ஷணமே மதியவனும் வானிலே உதித்தான். அவனது அழகு நீலாவை மயக்கியது. நீலாவின் அழகோ மாநிலத்தை மயக்கிற்று. என்ன போட்டி !

கடலோரத்திலே வீசியது குளிர் காற்று. இவர்களிடையே வீசியது இன்பக் காற்று.

வெண்ணிலாவின் முன்னிலையில் மலர்கள் மலர்கின்றன; மணக்கின்றன. அதே நிலாவின் முன்தான் காதலென்னும் மலர் இவர்களிடையே மலர்ந்தது; மணந்தது; அம்மணந்தான் வீசியது.

* * *

ஓர் திங்கள் கடந்தது. இருவரும் சந்தித்த இடத்திலேயே சந்தித்தனர். மதியையும் மயக்கவல்ல அவளது மதிமுகம் அன்று துக்கக் குறியைக் காட்டிற்று.

நீலா ஒரு பெருமூச்சு விட்டாள். அதிலேயும் துக்கம் கலந்திருந்தது. அக்கோலத்தில் தன் காதற் கிளியைக் காணச் சகியாது அவன் துடித்தான்.

இருவரும் கீழ்வருமாறு சம்பாஷித்தனர்.

'கண்ணே! நீலா, இன்று என்ன ஒரு மாதிரியாய்க் காண்கிறாய். என்மேல் கோபமா?'

'அன்ப! நம் மனமொத்த காதலுக்கு இறுதிக்காலம் நெருங்கி....'

'என்ன? என்ன? இறுதிக் காலமா? நம் காதலுக்கா? நீ சொல்வது ஒன்றும் எனக்கு விளங்க வில்லையே.'

'விளங்க வில்லையா? எனக்கு ஏற்கனவே விவாகமாகி விட்டதாம். எனவே.........'

'விவாகமாகி விட்டதா? உனக்கா? இவ்விஷயங்களை இவ்வளவு நாட்களாக நீ ஏன் என்னிடமிருந்து மறைத்து வைத்திருந்தாய்? ஆ! தெரிந்து கொண்டேன் உன் கபடத்தை. அப்புலவர் சொன்னது முற்றிலும் உண்மையே. யாரை நம்பினாலும் நம்பலாம், சேலை கட்டிய மாதரை........'

'வீணாக என்னைக் குறைகூறுவதில் பயனில்லை. இதுகாறும் உங்களிடம் எதை மறைத்தேன், இதை யெல்லாம் மறைப்பதற்கு? நானே நேற்றுத்தான் இதை அறிந்தேன்.

'என்ன ஆச்சரியம்! உனக்கு மணமானது உனக்கே தெரியாதா?'

'உண்மையாகவே எனக்குத் தெரியாது. எனக்குப் பாலியப் பருவத்திலே மணம் நடந்துவிட்டதாம். என் தந்தை நேற்றுத்தான் சொன்னார்.'

'உனக்குக் கல்யாணம் நடந்தபோது என்ன வயதாம்?'

'ஐந்துகூட சரியாக எனக்கு அப்போது ஆகவில்லையாம். ஏதோ பிரார்த்தனையை நிறைவேற்றும் பொருட்டு அவ்விதம் செய்யப்பட்டதாம்.'

'அப்படியானால் உன் கணவன் யார்? அவர் எங்கிருக்கிறார்?'

மௌனம்.

'அவரைப்பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாதா? அல்லது இவன் தாக்ஷிண்யம் இனி ஏன் நமக்கு என்றோ?'

'ஆ! என்ன வார்த்தை சொன்னீர்கள்! உண்மைக் காதல், வேண்டி நின்றோர் அவ்விதம் நினைப்பரோ?'

'பின்னர் சொல்ல மறுப்பதின் அர்த்தமென்ன?

'என் துயரத்தை என்னவென் றுரைப்பேன்! என்னை மணந்த மணாளர் மன்னுலகை விட்டு விண்ணுலகுக் கேகிவிட்டாராம்.'

'என்ன கொடுமை! நீ ஓர் பால்யவிதவையா? உன் புருஷர் எப்போது இறந்தார்?

'அது எனக்குத் தெரியாது. சொந்த வேலை சம்பந்தமாக என் மாமனார் தன் குடும்பத்துடன் கல்கத்தாவுக்குச் சென்றிருந்த போது அஜாக்கிரதையின் பயனாய் என் மணாளர் உக்ளி நதியில் விழுந்து இறந்துவிட்டாராம். பத்திரிகையின் மூலம் இச்சமாசாரத்தை என் தந்தை அறிந்தாராம்.'

'அவர் இறந்தது உண்மையேயானால், உங்களுக்குக் கடித மூலம் செய்தி எட்டியிருக்காதா?'

'வாராமலிருந்து மிருக்கலாம்.'

'அப்பேர்ப்பட்ட பாதகர்களா அவர்கள்?'

'அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களோ நானறியேன். என் தந்தைக்கும், என் மாமனாருக்கும் கல்யாணமான மறுதினத்தன்றே வரதக்ஷணை சம்பந்தமாக சண்டை ஏற்பட்டுவிட்டதாம். அதிலிருந்து இருகுடும்பத்தாருக்குள் கடிதப் போக்குவரத்து கூடக் கிடையாது. 'எங்கள் பிள்ளைக்குக் கல்யாணம் நடக்கவேயில்லை என்று நாங்கள் பாவித்துக் கொள்கிறோம்' என்றுகூட அவர்கள் அடிக்கடி சொல்கிறார்களாம்.'

'எனக்கு என்னமோ உன் கணவர் இறந்திருக்கமாட்டார் என்றேபடுகிறது. மேலும் பத்திரிகைச் செய்தியை நம்பி இத்தகைய முடிவுக்கு நாம் வரக்கூடாது. ஒரு நாள் ஓர் செய்தியைப் பிரசுரித்து விட்டு அதையே தவறுதலால் ஏற்பட்டுவிட்டது' என்று சொல்லி அதே பத்திரிகை வருந்துவது சகஜம்.'

'உண்மையை ஈசன்தான் அறிவான்.'

'உன் கணவரைப்பற்றியோ, அல்லது அவர் தந்தையைப் பற்றியோ விபரமாய் ஏதேனும் உன்னால் சொல்ல முடியுமா?'

'அவர்களைப்பற்றி அதிகமாக எனக்கு ஒன்றும் தெரியாது. என் கணவர் ராஜகோபாலரின் மகனாம். என்னை அவர் மணந்த போது அவருக்கு வயது ஐந்தாம். இதுவே எனக்குத் தெரிந்தவை!

'நீ சொல்வது வக்கீல் ராஜகோபலரா?'

'ஆம்; என்ன அவ்வளவு ஆச்சரியமாகக் கேட்கிறீர்களே! நீங்கள் அவரை அறிவீர்கள் போலும்.

'ஆம்; அறிவேன். உன் கணவரின் பெயர் கோவிந்தனல்லவா?'

ஆமாம். அது எப்படி உங்களுக்குத் தெரியும்? ஒருவேளை அவரையும் நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள்போ லிருக்கிறது.

'நீ சொல்வது சரியே. கோவிந்தன் என் நெருங்கிய நண்பர்களுள் ஒருவர். அவருக்குக் கலியாணம் ஆகிவிட்டதாக அவரே இன்னும் அறியார் !

'பால்ய மணந்தான் அதற்குக் காரணம் ?'

'நீ சொன்னவைகளிலிருந்து உன் கணவர் இன்னாரென்றும், அவர் உயிரோடிருக்கிறார் என்றும் தெரிந்துகொண்டேன்.'

நீங்கள் சொல்வது ஆச்சரியமாய் இருக்கிறதே ! என் கணவர் உயிரோடிருக்கிறாரா? நீங்கள் சொல்வது உண்மைதானா ! ஆ ! நான் இறுதலைக் கொள்ளி..............'

நீலாவின் வார்த்தைகளைக் கேட்ட அவனுக்கு, முகம் வெளுத்தது. சந்தேகங்கள் பற்பல அவள் மனதிலே எழுப்பியது. தன் தாய் தந்தையர்களிட மிருந்து அநேக உண்மைகளை அறிய ஆவலுற்றவனாய் அவன் நீலாவிடம் விடைபெற்றுக்கொண்டு தன் இல்லத்திற்குச் சென்றான்.

* * *

அது காதலர்களுக்கு 'ஆகி'வந்த இடம்போலும். மறுபடியும் அவர்களிருவரும் அதே இடத்தில் சந்தித்தனர். அவன் முகம் அன்று புன்னகை பூத்திருந்தது.

அன்றே கடைசித்தடவை தன் காதலனைக் காண்பதாக நீலா நினைத்தாள். அத்தினமுதல் நீலாவைப் பிரிந்து ஓர் க்ஷணம்கூட நாமிருக்கக்கூடாது என்று நினைத்தான் கதாநாயகன். மாறுபட்ட என்னங்கள்.

அவளிடம் எதையும் அவன் மறைக்கவில்லை. உண்மையை உள்ளவாறே உரைத்தான். தெரிந்துகொண்டவைகளை தெரிந்துகொண்டவாறே நவின்றார்.

'காதல! நீங்கள்தான் என் கணவரா? என்று கேட்டாள் நீலா!'

'காதலி! நீ தான் என் மனைவி? என்றான் கோவிந்தன்.'

பொய்சொல்லி வாழ்ந்தாரில்லை......

—:o:—

[என். எஸ். ஸ்ரீநிவாஸன்]

'பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை.........' என்ற பழமொழி எனக்கு முதல் வகுப்பிலே, அதாவது பள்ளிக்கூடம் போக ஆரம்பித்த நாள் முதற்கொண்டே, எனக்குத் தெரியும். பள்ளிக்கூடத்தில் நுழையும் பொழுதே வெளிச் சுவரில் இந்தப் பழமொழிதான் எழுதப்பட்டிருந்தது. ஆகவே பாடசாலையில் பிரவேசிக்கும் பொழுதெல்லாம் அதைப் படித்துப் படித்து எனக்கு நெட்டுருவாகிவிட்டது. உபாத்தியாயரும் பாடசாலையில் தினந்தோறும் பொய் சொல்வதால் உண்டாகும் கெடுதல்களைப்பற்றி விரிவாக எடுத்துச் சொல்வார். ஆகவே பொய் சொல்வது மாத்திரம் என்றைக்கும் ஆபத்தைத்தான் விளைவிக்கும். இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் அந்தப் பாழும் 'பொய்' நம்மை யறியாமலேயே வந்துவிடுகிறது. பிறகு அதனால் நேரும் கஷ்டத்தை அனுபவித்துத்தான் ஆகவேண்டியிருக்கிறது.

எனக்கு உண்மையில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் அதிக அபிமானம் உண்டு. நான் பாடசாலையிற் படித்துக் கொண்டிருக்கும்பொழுது கதர்வேஷ்டியும், கதர் குல்லாயும் அணிந்து சென்றதற்காக என்னைப் பாடசாலைக்கு ஒருவாரம் வரக்கூடாதென்று ஹெட்மாஸ்டர் 'ஸஸ்பெண்ட்' செய்திருக்கிறார். ஆகையால் சிறு வயதிலிருந்தே எனக்குக் கதர் வேஷ்டியில் அதிக விருப்பம் உண்டென்பது நன்கு விளங்கிறதன்றோ! இப்பொழுது ஐந்து வருட காலமாகத்தானே நான் மோனதாசுக்கு அடிமை. அதற்கு முன்னால் நான் ஒருவருக்கும் அடங்கி நடக்கவேண்டிய அவசியமில்லையல்லவா? ஆகையால் அப்பொழுது கதரையே உபயோகப் படுத்தி வந்தேன். பாழும் வயிற்றுக்காகத்தானே ஒருவனுக்கு அடிமையாகி நம்முடைய சுதந்திரத்தையெல்லாம் இழந்து அவன் சொற்படி நடந்தாக வேண்டியிருக்கிறது?

மோகனதாஸ் ஓர் அந்நியத்துணி வியாபாரி. அப்படியிருக்க அவருக்குக் கதர் வேஷ்டியில் எப்படி அபிமானம் ஏற்படும்? நான் அவருடைய கடையில் ஓர் குமாஸ்தா. எனக்கு மாதம் 35 ரூபாய் சம்பளம். அவருடைய கடையில் வேலையில் அமர்ந்த நாள் முதற்கொண்டு நான் கதர் கட்டுவதையே விட்டுவிட்டேன். அவருடைய இஷ்டத்திற்கு மாறுதலாய் நடந்துகொண்டால் மறுநாள் வீட்டிற்கு

வந்துவிட வேண்டியதுதான். ஆகவே வேண்டா வெறுப்பாய் சீமைத் துணியையே கட்டி வந்தேன்.

என் மனைவியையாவது கதர்ப்புடவையை உடுத்தச்சொல்ல வேண்டுமென்று எண்ணி ஓர் கதர்ப் புடவையை வாங்கி அவள் கையில் கொடுத்தேன்.

'இதென்ன இது! ஒரு நாளுமில்லாத திருநாள்; இது எதற்கு? எங்காவது தானம் கொடுத்தார்களா என்ன?' என்று கேட்டாள் என் மனைவி.

'தானமா? இல்லை! இல்லை! உனக்காக மூன்று ரூபாய் ரொக்க மாகக்கொடுத்து வாங்கிவந்திருக்கிறேன். எவ்வளவு நன்றாக யிருக் கிறதுபார்?' என்றேன்.

'ஐயோ! இப்படிப்பட்ட பைத்தியம் உண்டா! பாழாய்ப்போக; காந்தியாம் காந்தி; என் எதிரில் மாத்திரம் அந்த ப்ராந்தி வாட்டும்' என்றாள்.

'ஐயோ! வேண்டாம்! வேண்டாம்! உன்னுடைய 'துடப்பக் கட்டை—கிழிந்தமுறம்'—மரியாதைகளெல்லாம் என்னுடனேயே யிருக்கட்டும். அதற்கெல்லாம் நான்தான் ஏற்றவன். அந்த மஹானை—சாந்த மூர்த்தியை—உலகம் போற்றும் உத்தமரை—இனி நீ இம்மாதிரி பழித்தால் உனக்கு நாகம்தான் கிடைக்கும். பெண்டு களுக்கு நல்லதுதான் தெரியாதே. ஒன்றையும் ஆராய்ந்து பார்ப் பதுதான் கிடையாதே' என்றேன்.

'போதும்! போதும்! இந்தப் பைத்தியம் என்றைக்கு மாறப் போகிறதோ! என் தலையெழுத்து இதை யெல்லாம் கட்டிகொண் டழுவதற்கு. அஃதிருக்கட்டும்; இந்தக் கோணியை யார் சுமப்பது?' என்றாள்.

'எட்டுமணங்கு பளுவுள்ள பங்களூர் பட்டுப்புடவைகள் வாங் கிக் கட்டுகிறீர்களே! அதைக் காட்டிலுமா இது பளு?' என்றேன்.

'அதெப்படி வரும். இது மூன்று ரூபாய். பட்டுப்புடவை முன்னூறு ரூபாய்' 'அதிக ரூபாய் கொடுத்து வாங்கினால்தானே கணவனுக்கு 'இன்ஸால்வெண்ட் பாரம்' தேடவேண்டிய அவசியம் ஏற்படும். நல்ல வஸ்துக்களா யிருந்தாலும் விலை குறைவா யிருந் தால் அதன் கௌரவம் குறைவுதான். அதிகமாக நஷ்டமடைந்தால் தான் எதற்கும் கௌரவம். அப்பொழுதுதான் பக்கத்து வீட்டுப் பங்கஜமும், எதிர்வீட்டு சேஷியும், மற்றவர்களும் உன்னைப் பார்த்

துப் பொருமைப் படுவார்கள். ஆகையால் இதன் கௌரவம் வேறு தான்' என்றேன்.

'இவ்வளவு ரூபாய் செலவழித்துப் படித்ததற்கு இவ்வளவு கூடப் பேசத் தெரியாவிட்டால் என்னப் பிரயோசனம்?' என்ருள்.

'பைசாகூடச் செலவில்லாமல் இவ்வளவு பேசக் கற்றுக்கொண் டிருக்கிருயே. அதில் எனக்கு ரொம்பவும் சந்தோஷந்தான்' என்றேன்.

அப்பொழுது அங்கோர் மூலேயில் உட்கார்ந்திருந்த என் தாயார் 'என்னடா அப்பா! என்னமோ இல்லாத பாரதமெல்லாம் படிக் கிருய். இந்த மழைகாலத்தில் இப்படிப்பட்ட கோணிகளே வாங்கிக் கொடுத்தால் அவைகளே நனைத்தால் எவ்விதம் உலரும்? சீமைத் துணிகள் எவ்வளவு மெல்லியனவா யிருக்கின்றன. 'பூ' என்று ஊதினல் காற்றல் பறந்துபோய்விடும். வெள்ளைக்காரனுடைய சாமர்த்திய மென்ருல் அடேயப்பா!.........' என்ருள்.

' ஆமாம் வெள்ளைக்காரனுடைய சாமர்த்தியத்தை நீயா சொல்லவேண்டும்? அவர்கள் ரொம்ப ரொம்ப கெட்டிக்காரர்கள். இல்லாமலா இத்தனை பேர்களையும் ஆட்டிவைக்கிருர்கள்? அவர்கள் தான் நம்முடைய பழைய பழக்க வழக்கங்களே பின்பற்றி நடக்கட்டு மென்று நாம் அவர்களுடைய பழக்க வழக்கங்களே பின்பற்ருமல் இருந்துவிட்டால், இப்படிப்பட்ட கேவல நிலைமை நமக்கு ஏற்படுமா?' என்றேன்.

உனக்குத்தான் புத்திமான்களைப்பற்றிப் புகழ்ந்து பேசினல் பொருமையாயிற்றே. என்னென்னமோ கதை அளக்கிருயே. சீமைத்துணிகளைப்போல் இவர்களுக்கு நூற்று நெய்ய 'வக்குண்டா?' என்ருள்.

'வெள்ளைக்காரர்களுக்குப் பருத்தி என்பது இன்னதென்பதே தெரியாதிருந்த காலத்தில் கிளாஸ்கோ மஸ்லினைக் காட்டிலும் மெல் லியதான துணிகளே நம் நாட்டினர் நெய்துவந்தனர் என்பது உனக் குத் தெரிந்திருந்தால் இவ்விதம் நீ பேசியிருக்கமாட்டாய்.........' என்றேன்.

'அது என்னமோ அப்பா! என்காலத்தில் புதிது புதிதாய் மாறுதல்களைப் பார்த்துக்கொண்டு வருகிறேன். அவைகளில் இது வும் ஒன்று. எனக்கென்னடா அப்பா தெரியும்! நான் எங்கோ ஓர் மூலேயில் விழுந்து கிடக்கிறேன். என் வாழ்வு இன்றைக்கோ நாளைக்கோ' என்ருள்.

என் தாயாருக்கு இப்பொழுது வயது 105 ஆகிறது. உண்மையில் நாங்களெல்லோரும் அவளை எமன் மறந்துவிட்டானென்றே தீர்மானித்து விட்டோம். டாக்டர்கள், குறைந்தது அவள் இன்னும் 20 வருடங்கள் வரையில் இறக்கமாட்டாளென்று சொல்லுகிறார்கள். இவ்வளவு வயதாகியும், பாவம், அவளுக்கு மரணத்தில் எவ்வளவு வெறுப்பு?

'என்னமோ இந்த வேலை யகப்படாத காலத்தில் மாதம் 35 ரூபாய் வருகிறது. அதைப் போக்கிக்கொள்ளத்தான் இந்தச் சுதேசிப் பிரசாரமெல்லாம்' என்றாள் என் மனைவி.

இதைக் கேட்டதுதான். மோகன்தாசைப்பற்றி நினைத்துக் கொண்டதே ஓர் பீதி என் மனதில் தோன்றிவிட்டது. 'அப்பப்பா! இந்தப் பணமில்லாத காலத்தில் அந்த 35 ரூபாய் சம்பளமும் போய் விட்டால் தெருவில் நின்று திண்டாட வேண்டியதுதான்' என்று மனதில் நினைத்துக்கொண்டு என்னுடைய பிரசங்கத்தை அத்துடன் முடித்துக்கொண்டேன். இருப்பினும் மனதிலுள்ள உணர்ச்சியை எவ்விதம் போக்க முடியும்? ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக நமது உணர்ச்சியை வெளிக்குக் காட்டமுடியாது பேடியா யிருக்கவேண்டி யிருக்கிறது. என்னைப்போன்று அனேகர் இவ்விதம் சங்கடப் படுவதை நான் நன்கறிவேன்.

பிறகு நான் சாப்பிட்டுவிட்டுக் கடைக்குச் சென்றேன். என்னை மோகனதாஸ் கூப்பிடுவதாய் ஓர் வேலைக்காரன் வந்து கூப்பிட்டான். என்பாடு அப்பொழுது நடுக்கமாய்ப் போய்விட்டது. வேலைக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்று தீர்மானித்துவிட்டேன். உடனே வெகு நடுக்கத்துடன் ஒரு சலாம் போட்டுவிட்டு அவர் எதிரில்போய் நின்றேன். அவர் என்னை நோக்கி 'என்னுடைய கக்ஷி உமக்குத் தெரியுமல்லவா?' ஏதாவது சத்யாக்கிரஹ இயக்கத்தில் தலையிடுவதானல் இப்பொழுதே நமது கடையைவிட்டு வெளிச் செல்லலாம். அதில் ஏதாவது தலையிட்டுக்கொள்ளப் போகிறீர். இதை எச்சரிப்பதற்காகத்தான் உம்மைக் கூப்பிட்டேன். ஜாக்கிரதை' என்று கடுகடுத்துப் பேசினர்.

'இத்துடன் விட்டானேபடுபாவி!' என்று எனக்குச் சந்தோஷம் அதிகமாய் விட்டது. உடனே அவரை நோக்கி 'தங்கள் உத்திரவுப்படியே' என்று சொல்லிவிட்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டு எனது வேலையைக் கவனிக்க வந்து விட்டேன்.

நான் கடைக்குப்போகும் சமயம் தவிர மீதிவேளைகளில் அதாவது வீட்டிலிருக்கும் பொழுதெல்லாம் கதர்தான் உடுத்துவது வழக்கம். ஓர் நாள் நான் என்னுடைய சிறியதகப்பனர் பெண்ணின் கலி

யாணத்திற்காகக் கும்பகோணம் போகவேண்டியிருந்தது. முதலாளி யிடம் ஐந்து தினங்களுக்கு 'ரஜா' (லீவ்) 'வாங்கிக்கொண்டேன்.' பிறகு அறையில் நல்லதாய் ஓர் கதர் வேஷ்டியும், மேலே அழகிய ஓர் கதர் ஷர்ட்டும், தலையில் ஓர் கதர் குல்லாயும் அணிந்துகொண்டு எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றேன். அப்பொழுது நீங்கள் என்னைப் பார்த்திருந்தால் ஓர் தேசியத் தொண்டன் என்றே சொல்லியிருப்பீர்கள். குல்லாவின்மேல் ஓர் காந்தி 'ப்ரோச்சும்' அணிந்திருந்தேன். ஸ்டேஷனில் வண்டியும் தயாராய் வந்து நின்றிருந்தது. உடனே கும்பகோணத்திற்கோர் இரண்டாம் வகுப்பு டிக்கட் வாங்கிக்கொண்டு இரண்டாம் வகுப்பு ரெயில் வண்டியில் ஏறிக்கொண்டேன். ஸ்டேஷனிலிருந்த எல்லா ஜனங்களுடைய பார்வையும் என்மீதே விழுந்தது. அவர்கள் என்னை ஓர் தீவிர காங்கிரஸ்வாதி என்றே எண்ணிவிட்டார்கள். நான் எங்கோ வெளியூரில் 'சத்தியாக்கிரகப் போர்' செய்யப் போவதாய் அவர்கள் நினைத்ததையும் அறிந்துகொண்டேன். உண்மையில் கதராடை அணிந்துகொண்டாலே அதன் கௌரவம் வேறுதான். அதிலும் ஓர் தொண்டனாகப் போய்விட்டால் அதிலிருக்கும் உற்சாகமும் சுறுசுறுப்பும் வேறெதிலும் கிடையாது. அப்பொழுதுதான் மனதிற்கு ஓர் நிம்மதி ஏற்படுகிறது.

வண்டி புறப்பட ஐந்து நிமிஷங்கள்தா னிருந்தன. அப்பொழுதுதான் இரண்டு தேசியத் தொண்டர்கள் நான் உட்கார்ந்திருந்த வண்டியினுள் 'வந்தேமாதரம்' என்று சொல்லிக்கொண்டே ஏறினார்கள். நானும் உடனே 'மஹாத்மா காந்திக்கு ஜே' என்றேன். வண்டியும் 'கூ'வென்று கத்திக்கொண்டே நகர வாரம்பித்தது. நான் உட்கார்ந்திருந்த வண்டியில் ஏறிய இருவரும் கதராடையே அணிந்திருந்தனர். அவர்களை நான் உண்மையான தேச பக்தர்களென்றே நம்பினேன். உடனே அவர்களில் ஒருவர் என்னை நோக்கி 'ஸார்! தாங்கள் எங்கு செல்லவேண்டும்?' என்றார்.



'கும்பகோணம்' என்றேன்.

'என்ன விசேஷமோ?' என்றார்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்பதுதான் தெரிய வில்லை. எனக்கெப்பொழுதும் ஆடம்பரத்தில் விருப்பம் அதிகம். அதாவது என்னைப்பற்றி 'நான்குபேர்கள்' கௌரவமாக நினைக்க வேண்டும். நான் இப்பொழுது தொண்டன் உடையில் இருக் கிறேன். அவர்களைப் பார்த்தால் அவர்களும் தேசிய இயக்கத்திற் சேர்ந்தவர்களென்றே தோன்றியது. ஆகவே அவர்களைச் சந்தோ ஷிப்பிக்க வேண்டுமென்ற ஆசை எனக்குண்டாய் விட்டது. நான் கலியாணத்திற்காகச் செல்கிறேனென்றால் அது அவர்களைத் திருப்தி செய்விக்காது. ஆகவே ஒரு பெருத்த 'பொய்' சொல்லித்தான் அவர்களைத் திருப்தி செய்விக்க வேண்டுமெனத் தீர்மானித்து விட்டேன். இந்தச் சமயத்தில் உபாத்தியாயர் போதித்த 'பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை...........' என்ற பழமொழி யெல்லாம் கவ னத்திற்கு வருகிறது? அப்படி கவனத்திற்கு வந்தாலும் இவ்வித சந்தர்ப்பத்தில் நாம் அதை 'லக்ஷியம் செய்வோமா?' ஆகவே சிறிது நேரம் மௌனமா யிருந்துவிட்டுப் பிறகு அவரை நோக்கி 'நம்மைப் போன்றவர்களுக்கு என்ன வேலையிருக்கும்? தேசத்திற்குப் பணி செய்துகிடப்பதைத் தவிர தொண்டர்களுக்கு வேறு ஏதாவது வேலையுண்டோ?' என்று கம்பீரமாகவும் மிடுக்காகவும் சொன்னேன்.

அவ்விருவரும் என்னுடைய வார்த்தையைக் கேட்டதே ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துச் சிறிது புன்னகை புரிவ தைக் கண்டேன். உடனே முதலில் பேசியவர் என்னை நோக்கி, 'தாங்கள் ஏதாவது சுதேசிக் கடைகளுக்கெதிரில் சாத்வீக மறியல் செய்யப் போகிறீர்களா? அல்லது மேடையில் ஏறிப் பிரசங்கம் செய்யப் போகிறீர்களா?' என்றார்.

'இரண்டுந்தான்'

'அப்படியா! மிக்க சந்தோஷம். தங்களுக்கு ஏதாவது அழைப் புக் கடிதம் வந்ததோ?'

'ஆகா வந்திருக்கிறது.'

'எங்கே! காட்டுங்கள் பார்க்கலாம்'

சிறிதுநேரம் எனது ஜோபியில் அதைத் தேடுவதாய்ப் பாசாங்கு செய்துவிட்டு 'அடடா! அதை வீட்டிலேயே வைத்துவிட்டு வந்து விட்டேன்' என்றேன்.

'அப்படியா! என்றைக்கு உபந்நியாசம்?'

'நாளைக்கு. தாங்கள் எங்குச் செல்கிறீர்கள்?'

'நாங்களும் அங்குதான் வருகிறோம். ஆனால் எங்களுக்கு நாளைக்கு உபந்நியாசமென்பது தெரியாது.'

'தங்களுக்கு அங்கு வேறு ஏதாவது வேலையுண்டோ?'

'ஒன்றுமில்லை. அது எங்களுடைய சொந்த ஊர். சென்னைக்கு ஏதோ வேலையாய் வந்திருந்தோம். தாங்கள் எத்தனை வருஷ காலமாய் தேசசேவையி லீடுபட்டிருக்கிறீர்கள்?'

'ஐந்து வருஷ காலமாய்'

'எப்பொழுதாவது சர்க்காருக்கு விருந்தாளியாகச் சென்றிருக்கிறீர்களோ?'

'ஆம்! இரண்டு மூன்றுதரம் அவ்விதப் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஒரு வருஷ காலமாய் என்னை எத்தனையோ ஸி. ஐ. டி'க்கள் கவனித்து வருகிறார்கள். போலீஸ் புலிகள் அவைகளினுடைய அதிகாரத்தை யெல்லாம் என்மீது காட்ட விரும்புகின்றன. எனக்குச் சிறை செல்வதில் சந்தோஷந்தான். (இந்த வார்த்தையை எவ்வளவு நடுக்கத்துடனும் கசப்புடனும் சொல்லியிருப்பேனென்பதை நேயர்களே யோசிக்க விட்டுவிட்டேன்) ஆனால் அந்த ஸி. ஐ. டிக்கள் வாயில் மண்ணைப் போடவேண்டும். அவர்களால் என்ன முடியும்? இப்பொழுது என்னைப் பிடிக்க அவர்களால் முடியுமா? வீணிற்குச் சம்பளத்தை வாங்கித் தின்கிறார்கள்.'

'ஆம்! நீங்கள் சொல்வதுண்மைதான். இப்பொழுது ஸி. ஐ. டி. வேலையிலிருப்பவர்கள் அதிகமோசம். அவர்களுக்குத் துப்புக் கண்டு பிடிக்க அடியோடு ஒன்றுமே தெரியாது' என்று அவர் சொல்லி முடித்தார். வண்டியும் கும்பகோணத்தில் வந்து 'லொடக்'கென்று நின்றது.

நான் வண்டியை விட்டுக் கீழிறங்கினேன். அவர்களும் இறங்கினார்கள். உடனே அவர்களில் ஒருவர் வெகு வேகமாய் ஸ்டேஷனுள் ஓடினார். நான் மற்றொருவரைப் பார்த்து 'போய் வருகிறேன் ஸார்! ஏதோ ஏழை மீது தயவு இருக்கவேண்டும். போய் வரட்டுமா?' என்றேன்.

'தங்கள் மீது எங்களுக்கிருக்கும் தயவு வேறு யாருக்குமிராது. ஏன் போகிறீர்கள்? தங்களை விட்டுப் பிரிய எனக்கு அடியோடு மனம் வரவில்லை. சற்று நிதானியுங்கள். ஸ்டேஷனுள் போயிருப்பவரும் வந்து விடட்டும்' என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது ஸ்டேஷனுள் சென்றவர் ஒரு போலீஸ் ஸப்இன்ஸ்பெக்டரையும் மூன்று கான்ஸ்டேபில்களையும் அழைத்துக்கொண்டு எங்களருகில் வந்தார். அப்பொழுது ஸப்இன்ஸ்பெக்டர் என்னுடன் பேசியவரை நோக்கி 'இந்தப் பேர்வழியா ஸார்?' என்று என்னைச் சுட்டிக் காட்டினார்.

அதற்கவர் 'இவர்தான்' என்றார்.

மறுநிமிஷம் என் கைகளுக்கு விலங்குகள் பூட்டப்பட்டன. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பிரமித்துப் போய் விரள விரள விழித்தேன். அப்பொழுது என்னுடன் பேசியவர் என்னை நோக்கி 'என் ஆந்தையைப்போல விழிக்கிறீர்கள். வண்டியில் பேசிவந்த தைரியமெல்லாம் எங்கே? தங்களுக்குச் சிறை செல்வதில் சந்தோஷமென்று சொன்னீர்களல்லவா? தங்களுக்கிருந்த அந்த ஓர் குறையையும் தீர்த்துவிட்டோம். ஸி. ஐ. டிக்களைப்பற்றித் தாங்கள் கெட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தீர்களல்லவா? ஐயா! நாங்கள் ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர்கள். நீங்கள் எங்களை தேச பக்தர்களென்று தப்பெண்ணங்கொண்டு விட்டீர்கள். இது எங்களுடைய மாறுவேஷம். இந்த வேஷத்தில்தானே நீங்கள் ஏமாந்தீர்கள். நேரமாகிறது. வாருங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம். அங்கு போய் எல்லாக் கதைகளையும் பேசிக்கொள்ளலாம்' என்றார்.

என் மனம் அப்பொழுது எவ்வித நிலைமையிலிருந்திருக்குமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நான் ஒருவாறு என் மனதைத் தேற்றிக்கொண்டு, 'ஐயா! நான் சொல்லியதெல்லாம் பொய். நான் ஓர் கலியாணத்திற்குப் போகிறேன். நான் மோகனதாசின் குமாஸ்தா! என்னைத் தயவுசெய்து மன்னியுங்கள்' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டேன். ஆனால் என்னுடைய பிரார்த்தனையெல்லாம் அவர்களுடைய செவியிலேறினதாகத் தெரியவில்லை.

'தூயவசீகரமான கதரை அணிந்துகொண்டு பொய் சொல்லியதால் நேர்ந்த விபரீதமன்றோ இது' அப்பொழுதுதான் 'பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை' என்கிற பழமொழி என் கவனத்திற்கு வந்தது.

செல்வி:—அடியே! இந்தச் சங்கிலி எங்கே வாங்கினே? என் சங்கிலியைப்போல அழகாயிருக்கே!

பேதை:—ஐயோ! பாவமே! அந்தச்சண்டாளன் ஒன் வீட்டிற்கா திருடப்போறான்? —திருவை கே. வைத்தியநாதன்

ஓர் ஊரில் ஒரு கலியாணம் நடந்தது. பெண்ணின் பெயர் வனரோஜா. மணாளனின் பெயர் காந்திராஜன். மணப்பெண்ணுக்கு வலது கையில் நடுவிரல் ஒன்று இல்லை. அவள் அந்தக் கையை மூடிக்கொண்டே யிருந்தாள். கல்யாணம் முடிந்ததும் பாலீ கொண்டுபோய் குளத்தில் விடும் பொழுது மாப்பிள்ளை அவள் கையைப் பார்த்து விட்டான். அப்போது அந்தப் பெண்ணைப் பார்த்து 'உனது நடுவிரல் எங்கே என்று கேட்டான். அப்பெண் அவனைப் பார்த்து அந்த விரலுக்கு ஜுரம் ஜாஸ்தியா யடித்தது. அதை நம் காட்டு வைத்தியர் வீட்டுக்கு அனுப்பி யிருக்கிறேன். ஜுரம் குணமானவுடன் அது வந்துவிடும்' என்றாள். —A. M. R. A. லிங்கம்

உபாத்தியாயர்:—கிருஷ்ணா! இராமர் காட்டிற்குப் போனதினால் யாருக்கு கஷ்டம் ஏற்பட்டது.

கிருஷ்ணன்:—எனக்கு சார்.

உபாத்:—எப்படி ?

கிருஷ்ணன்:—இராமர் காட்டிற்கு போனதினால் இந்த பரீட்சைக்கு இராமாயணத்தை படிக்க நேரிட்டதல்லவா? —ராஜன்

ராமச்சந்திர ஐயர் தன் பெண்ஜாதிமேலுள்ள அன்பினுல் அவளைக் கண்ணு என்று கூப்பிடுவார். கண்ணு ஒரு நாள் உப்புமாவு கிண்டுவதற்கு ஆரம்பித்தாள். வீட்டில் ஜாடியிலுள்ள உப்பெல்லாம் தீர்ந்துவிட்டது.

கண்ணு:—நன்னுயிருக்கே, வீட்டில் உப்பு இல்லாத வேளையில்தான் உப்புமாவு கிண்டவேண்டும். நெய்யில்லாது இருக்கும் பொழுதுதான் அல்வா செய்யவேண்டும். ஒழுங்காக வாங்கி போட்டால் நானு செய்யமாட்டேன் என்கிறேன்.

ஐயர் தன் மகன் குப்புவைப் பார்த்து:—அடே குப்பு! கண்ணுக்கு உப்பு வாங்கிப்போடடா. இல்லாவிடில் அடிப்பேன்.

கண்ணு யார் என்று தெரியாத குப்பு தன் கண்ணில் உண்டானவலியை நீக்குவதற்காகவே அப்பா சொல்லியிருக்கிருர் என்று நினைத்துத் தன் கண்ணில் சிறிது உப்பு வாங்கிப்போட்டான். எரிச்சல் பொறுக்க மாட்டாமல் தன் தகப்பனிடம் நெருங்கி கையால் தன் கண்ணை வெகுவிசைவாக கசக்கஆரம்பித்தான். அப்பொழுது கையிலுள்ள மீதி உப்பு தவறி தகப்பன் கண்ணிலும் விழுந்துவிட்டது. உடனே அவர் தேளோ என்னமோ வென்று கத்தினுர். இந்த சத்தத்தைக் கேட்ட ராமச்சந்திர ஐயர் பெண்டாட்டியாகிய கண்ணு, ஏதோ உப்புமாவு ஆகவில்லை யென்று ஐயர் கத்துகிருர் என்று நினைத்து 'இன்னும் உப்பு வாங்கிக் கொண்டுவந்து போடவில்லை' யென்ருள்.



குப்பு:—நானும் கண்ணுக்குப் போட்டுக் கொண்டேன்; அப்பா கண்ணிலும் கொஞ்சம் தவறி விழுந்துவிட்டது. ஏன் அம்மா போடவில்லை சென்று பொய்சொல்லவேண்டும்?

இதைக்கேட்ட ராமசந்திர ஐயரும் அவர் பெண்டாட்டியும் கொல்லென்று சிரித்தார்கள்.

* *

தாதா:—என்னடா நீ பெரியவனுகியும் காலணு கேட்கிருயே.
பேரன்:—அப்படியானுல் கால்ரூபாய் கொடுங்கள்.

—எஸ். ரங்கசாமி

எஜமான் வேலைக்காரனை ஸ்டேஷனுக்குச் சென்று ஒரு அணா கொடுத்து மெட்ராஸ் மெயில் வாங்கிவரச் சொன்னார்.

வேலைக்காரன்:—என்னங்கோ, மெட்ராஸ்-மெயில்கூடவா ஒரு அணாவுக்கு கொடுக்குறாங்க ? —ஏ. எம். யூஜாப்

தாய்:—மகனே உன்னைக் கஷ்டத்துடன் தூக்கிச் சுமந்து பால் ஊட்டினேனே ; இப்படி திட்டுகிறாயே.

திமிர்பிடித்த பையன்:—வா, வா, உன்னைத் தூக்கி பால் கொடுத்துக் கடனை ஒழித்து விடுகிறேன். —எஸ். ஏ. சஞ்சீவி

உபாத்தியாயர்:—கிட்டு! பறக்கும் ஜந்துக்களில் ஒன்றைச் சொல்லு.

கிட்டு:—ஏரோபிளான் சார்! —கே. ஏ. கலிகராஜலு



கணவன்:—எங்கேடி என் மணிபர்ஸைக் காணும் ?

மனைவி:—வயிரத்தோடு வாங்கிப் போடுவது உண்மையானால் அகப்பட்டு விடும்.

—திருவை.
கே. வைத்தியநாதன்

ஒரு வியாபாரி தன் மகனுக்கு வியாபாரத்தில் வெற்றியடைவதைப்பற்றிக் கூறிக்கொண்டிருந்தார்.

தந்தை:—நீ வியாபாரத்தில் வெற்றியடைய வேண்டுமானால் இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டியது முக்கியம்.

மகன்:—அவை என்ன?

தந்தை:—யோக்கியதையும் புத்திசாலித்தனமும்.

மகன்:—யோக்கியதை என்பதென்ன?

தந்தை:—என்னதான் கஷ்டநஷ்டங்கள் வந்தாலும் வார்த்தைப்படி நடந்துகொள். உன் வாக்குறுதியை மீறாதே.

மகன்:—புத்திசாலித்தனம் என்றால் ?

தந்தை:—ஒருக்காலும் எவருக்கும் வாக்குறுதி கொடுக்காதே.

—பி. எஸ். கோவிந்தசாமி

'நான் பாவியினும் கொடும் பாவி'

[எம். சி. அலமேலு அம்மாள்]

நேசா! எனது வாழ்நாட்களில் நான் விஷமென வெறுப்பது பெண்களைத்தான். உனக்கோ அவர்களே குலதெய்வம். உன்னையும் என்னையும் ஒன்றாகக் கூறினால் சரிவருமா? நீ பெரிய முட்டாளென்று நான் கண்டிப்பாய் சொல்லுவேன். இல்லாவிடில் ஒரு பெண்ணுக்காக எவ்வளவோ துன்பங்களை யெல்லாம் சகித்துப் பொருளையுமிழந்து அவளை விவாகம் செய்துகொண்டு, குடும்பத்தை நிர்வாகம் செய்வதற்கு அருகனாகும் முன்பே, குழந்தைகளுக்கும் குட்டிகளுக்கும் தகப்பனாகி வேலையில்லா திண்டாட்டத்திலகப்பட்டு ஒரு காசுக்கும் வழியின்றி நிற்கிறாய். ஜீவனம் எப்படி நடக்கப் போகிறதோ? என்று ஏங்கித் திண்டாடி தெருவில் நிற்கும் உன்னை, முட்டாளென்று சொல்வதற்கு என்ன தடை? சீசீ! இல்வாழ்க்கை கொடிது கொடிது.

கொடிது கொடிது பிராமணனாய் பிறத்தல்
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது குழந்தை குட்டி துன்பம்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டீர்
அதனினுங் கொடிது வேலையிலாத் திண்டாட்டம்

என்ற விகட அகவல் உனக்குத் தெரிந்திருந்தும் இல்வாழ்க்கையில் நீ மிகவும் ஈடுபட்டதுபோல் இருக்கிறாய். தற்பொழுது என்பாடு நல்ல வேட்டைதான். ஒரு கவலையுமின்றி நிர்விசாரமாய் காலம் கழிக்கின்றேன். வீட்டில் நுழைந்தால் பெண்டாட்டி பிள்ளை என்ற தொந்திரவே கிடையாது. வயதான என் தாயாருடன் பேசிக் காலங் கழிப்பதே எனக்குப் பேரின்பமா யிருக்கிறது. இப்பொழுது உன் குழந்தைகளுக்குத் தின்பண்டமும் விளையாட்டுச் சாமான்களும் வாங்க வேண்டுமென்று என்னையும் கடைக்கு இழுக்கிறாய். நான் வரமாட்டேனென்றால் 'நீ ஒரு நண்பனா' என்று ஏதேதோ கூறி என் மனதைப் புண்படுத்தி விடுவாய். சரி கிளம்பு போகலாம். உன் மனதை வருத்தமடையச் செய்வானேன்' என்று கூறி, ஒருவித நகைப்புடன் என்னையே நோக்கிக் கொண்டிருந்த ராமனாதனை நோக்கிப் புன்னகை கொண்டேன்.

அவன் சற்று நேரம் என்னையே நோக்கிவிட்டு உஸ் என்ற பெருமூச்சுடன் 'அப்பா ராஜம், நீ இதுவும் சொல்லுவாய். இதற்கு

மேலும் சொல்வாய். உன் அகடவிகடத்தையும் குறும்புத் தனத்தையும் எவள் அடக்கப் போகின்ருளோ? இப்படிச் சொல்பவர்கள் தான் கலியாணம் ஆனவுடன் பெட்டிப் பாம்பாக பெண்டாட்டிக்கு அடங்கிக் கிறின கோட்டைத் தாண்டாமல், குரங்காட்டி சொல்வது போல் நடக்கும் குரங்கு மாதிரி, இருப்பார்கள். இரு இரு. உனக்கு ஒரு வழி செய்யாமலா விடப்போகிறேன். நல்ல குட்டியாக ஒருத்தியைப் பார்த்துப் பிடித்துக்கட்டி உன்கொட்டத்தை யடக்காவிடில் என் பெயர் ராமனுதனல்ல. 'பாழேமடக்கொடி யில்லாமனே' என்பது உனக்கு மறந்தா போய்விட்டது. உனக்கு இப்பொழுது வயது 28 ஆகிவிட்டது. வாலிபத்தையே நாம் இழந்துவிட்டோம் என்றுதானே நீ எண்ணிக்கொண்டிருக்கிருய். உன் மனதை மாற்ற என்னுலாகாதா, அதையும் பார்க்கலாம். வாயால் பேசுவது உதவாது. காரியத்தில் காட்டவேண்டும். உண்மையாகக் கூறு. நானும் என் மனைவியும் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதை நீ நன்குணர்வாய். வீட்டிற்குள் நுழைந்தால் புன்னகையும் அன்பும் தவழ்ந்த முகத்தோடு எவ்வளவு அருமையாக உபசரிக்கிருள். என் இரு குழந்தைகளும் தங்கள் மழலைச் சொற்களால் பேசி என் கால்களைக் கட்டும்போது ஆஹா! எவ்வளவு அன்பு! எவ்வளவு ஆனந்தம்!! எவ்வளவுபாசம்!!! அதைச்சொல்ல முடியுமோ. நீ அதை அனுபவித்தால்தான் தெரியும். ஒட்டனுக்குத் தெரியுமா.... நீயும் ஒருநாள் அந்தப் பாக்கியத்தை அனுபவிக்காமலா இருக்கப் போகிருய்? நான் அப்பொழுது அதைப் பார்த்து இடித்திடித்துக் காட்டாமலா இருக்கப்போகிறேன்! அஃதிருக்கட்டும். நீ இப்பொழுது கடைக்கு வருகிருயா மாட்டாயா? நான் சீக்கிரம் போகவேண்டும்' என்று அவன் கூறும்பொழுதே நான் இடைமறித்து, 'ஐயோ நீ எனக்காகக் காத்திருக்க வேண்டாம். இதோ புறப்பட்டு விட்டேன். அம்பாள் கோபித்துக்கொண்டால் ஸ்வாமிபாடு திண்டாட்டமாகிவிடும். அதனுல் மனம் வருந்தும்படி நேரிடும். என்னுல் நீ கஷ்டப்பட வேண்டாமப்பா?' என்று சடக்கென்று எழுந்திருந்து வாசலில் போய் நின்று கொண்டேன்.

பாவம் என் நண்பன் அறைக் கதவைப் பூட்டிக்கொண்டு என்னருகில் வந்துநின்று, 'ராஜம் நீ நல்ல எத்துக்காரன். ஒட்டமாய் ஓடி வீதியில் வந்து நின்று கொண்டாயே, அறைக்கதவை யார் பூட்டுவது. பீரோவிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டு நான் என் செலவுக்கு எடுத்துக்கொண்டு விட்டேன். அது இனிமேல் உன் கைக்கு வந்தாற் போலத்தான்' என்று கண்களைச் சிமிட்டினுன்.

'ஓகோ! நீ ரொம்ப சாமர்த்தியசாலிதான். உனக்கென்றுதான் அந்த ரூபாய் நோட்டை பீரோவின் முன்னணியில் வைத்திருந்தேன். நான் கொடுத்தால்தானென்ன நீயாகவே எடுத்துக் கொண்டால்தா

னென்ன? எப்படியாகிலும் அது உன்னைச் சேர வேண்டியதே. அறையைப் பூட்டிக்கொண்டு வந்துவிட்டாயல்லவா? அதுதான் இப்பொழுது நடக்க வேண்டியது' என்று கூறிக்கொண்டே சற்று முன்னால் நடந்தேன்.

'ஆமாம். நீ நான் கேட்கும்பொழுதெல்லாம் பணத்தைத் தாராளமாகக் கொடுத்து விடுகிறாய். இப்பொழுது அசலே ரூபாய் ஆயிரத்துக்கு மேலாகிறது. வட்டியைபபற்றி என்ன, ஒன்றுமில்லை. இதை உனக்கு நான் எப்படித் திருப்பிக்கொடுக்கப் போகிறேன்? இனிமேல் என் விஷயத்தில் நீ கண்டிப்பாய் நடந்து கொள்ள வேண்டும். நானோ ஒருகாசு சம்பாதிப்பது குதிரைக்கொம்பாயிருக்கிறது. உனக்கென்ன? நீ பெரிய டாக்டரா யிருந்துகொண்டு தண்ணீரைக் கொடுத்தே எல்லோருடைய பணத்தையும் கொள்ளை யிடுகிறாய். பெயரும்புகழும் உன்னை வந்து அடைந்து விட்டது. கேசுகள் இல்லாத நாளில்லை. வருகிற பணமெல்லாம் மிச்சந்தான். நானும் உன்னைப்போல ஒரு டாக்டராக இருந்தால் சொற்பமாவது சம்பாதிக்கலாமென்று எண்ணுகிறேன். அதற்கும் வழியில்லை. ராஜதானிக்கே முதன்மையாக B. A. வில் ஒப்பேறிவிட்டு ஒரு காசுக்கும் வழியின்றிச் சோற்றுக்குத் தாளம் போடுகிறேன். சீ! இதென்ன படிப்பு? ராஜம் நான் என் மனதில் ஒன்று எண்ணியிருக்கிறேன். அதன்படி நடந்தால் என்ன?' என்றான்.

'சரி. உன்னிஷ்டம் யாதோ அதைத் தெரிவி' என்றேன்.

அவன் நகைத்துக்கொண்டே 'எனக்கு ஊரில் கொஞ்சம் நிலங்களிருக்கின்றன. அவைகளில் கொஞ்சம் முன்பு வந்த வெள்ளத்தால் சேதமுற்று மண்மேடிட்டு பாழாய்ப் போய் விட்டன. அவைகளைத் திருத்த முடியாதென எங்களூர் சாஸ்திரியாரும் பண்ணையாரும் சொல்லுகிறார்கள். ஆதலால் மீதியுள்ள சொற்ப நிலங்களை வைத்துக்கொண்டு சொந்தச் சாகுபடி செய்ய உத்தேசிக்கிறேன். குடும்பத்தோடு புறப்பட்டுப் போகவேண்டும். சொந்தப் பயிரில் கிடைப்பதை வைத்துக்கொண்டு நான் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதா? ஆனால் எனக்கு சாகுபடி என்றால் இன்னதென்றே தெரியாது. சோளம், கம்பு, புகையிலை, நிலக்கடலை, நெல் முதலிய தானியங்களை விதைக்கிறார்கள். எந்தெந்தக் காலத்தில் எதெது பயிர் செய்வது என்பது தெரிய வேண்டுமே. அதுவும் தெரியாது. அப்பேர்ப்பட்ட படிப்புப் படித்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் எங்களூர் போய் சாஸ்திரியாரையும் கேட்டுத் தெரிந்துகொண்டு அத்துறையி லிறங்கலாமென்று உத்தேசிக்கிறேன். என் மனைவிக்கும் அது விஷயம் சம்மதமா யிருக்கிறது. இப்பொழும் பட்டணத்திலிருந்துகொண்டு தொட்டதிற்கெல்லாம் காசியிறைக்க

என் கையில் பணமாயிருக்கிறது? உன் மனதிற்கு எப்படித் தோன்றுகிறது?' என்முன்.

'நீ சாகுபடி செய்து குட்டிச் சுவாய்ப் போனய்.' அந்த விஷயம் உனக்கென்னடா தெரியும்? அதற்கும் காசை யிறைத்து விட்டுக் கண்ணைப்பிசைந்து கொண்டு நிற்பாய். தரித்திரம் பிடித்த ஊரில் கைம்மாற்முகக்கூட பணம் கொடுத்து உனக்கு உதவமாட்டார்கள். உன்னை ஏமாற்றிச் சமயம் பார்த்து உன் காசைப் பிடுங்கப் பார்ப்பார்களே யன்றி உனக்கு அனுகூலம் செய்வார் ஒருவருமில்லை. தவிர இப்பொழுது பயிரிட்டு காலக்ஷேபம் செய்தால் கடன்தான் அதிகமாகும். கிராமங்களில் குடியானவர்களும் மிராசுதார்களும் படும் கஷ்டம் தெரியவில்லையா? ஆதலால் வீண் யோசனை யெல்லாம் செய்து அலையாதே' என்று ஒரு போடு போட்டேன்.

'பின் என்னதான் செய்யச் சொல்லுகிருய்' என்று பற்களை ஆத்திரத்தோடு கடித்தான்.

'திரும்பவும் உபத்திரவம் செய்கிருயே. நான் தினமும் சொல்வது உன் செவியில் ஏறவில்லையா? எனக்கு உதவியாக கம்பவுண்டராயிரேன். அந்த விஷயங்களெல்லாம் நீ எளிதில் கற்றுக்கொள்ளலாம். தெரியாததற்கு நான் சொல்லித் தருகிறேன். மாதம் உனக்கு ரூபாய் நாற்பது கொடுத்து விடுகிறேன். பின் ஏன் கவலைப்படுகிருய்? சந்தோஷமாக குழந்தை குட்டிகளுக்கு விளையாட்டுக்சாமான் வாங்கிக் கொடுத்து, அவர்களைக் களிப்படையச் செய். பற்பல யோசியாதே'என்று அவனைத் தேற்றினேன். அவனும் ஒருவிதமாகச் சம்மதித்தான்.

* * *

நாட்கள் பல சென்றன. ஒருநாள் விழுப்புரத்தில் எனது நண்பர் ஒருவர் வீட்டிற்கு ஓர் அலுவலாகச் சென்றிருந்தேன். அவர் அன்றுமாலை 3 மணிக்கு ஓர் பத்திரிகையை கையில் எடுத்துக் கொண்டு நான் இருக்கும் அறைக்குள் நுழைந்தார். அவர் முகத்தில் ஆச்சரியமும் பச்சாத்தாபமும் நிறைந்து இருந்தது. அவர் பத்திரிகையில் ஒரு தலையங்கத்தைக் காட்டி 'ராஜன், இது உங்கள் ஊரில் நடந்த செய்தி. அவர்களை உனக்குத் தெரியுமென்றே எண்ணுகிறேன். இதைப் படித்துப் பார்' என்று பத்திரிகையைக் கையில் கொடுத்தார்.

'என்ன ஐயா, நான் எங்கள் ஊருக்குப்போய்சுமார் பத்து வருடங்களாகின்றன. அவ்வூரில் இன்னின்னர் இருக்கிருர்கள் என்பதுகூட எனக்குத் தெரியாது. இருந்தாலும் என்ன விஷயமென்று பார்க்கிறேன்' என்று அவ்விஷயத்தைப் படித்தேன். அதில் ஓர் இளநங்கை ஓர் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனிடமிருக்க

மனமில்லாமல் எங்கேயோ சொல்லாமல் ஓடிப்போய் விட்டதாகவும், அவளைக் கண்டுபிடித்து அக்கிழவனிடம் சேர்ப்பிப்பவருக்கு ரூபாய் ஐந்நூறு இனும் கொடுப்பதாயும் கண்டிருந்தது. அப்பெண்ணுக்குத் தாயார் இருப்பதாயும் கூறப்பட்டிருந்தது. கிழவனுடைய விலாசமும் தெரியப்படுத்தி யிருந்தது.

நான் என் நண்பரைப் பார்த்து, 'எங்குப் பார்த்தாலும் இந்த இழவுதான் சார். கிழவனுக்கு ஆசையைப் பாருங்களேன். என்ன அநியாயம்! இதையெல்லாம் எனக்கு வாசிப்பதற்கே பிடிப்பதில்லை. சீ, சுத்தமோசம். அப்பெண் நல்ல வேலை செய்தாள். கிழவனுக்கு நன்ருய்வேண்டும். சாகிற பிணக்கிழத்துக்கு பெண்டாட்டிவேறேயா' என்று ஆத்திரத்தோடு கூறினேன். ஆனால் அந்தக் கிழவரை எனக்குச் சற்றுத் தெரியுமேயன்றி அந்தப் பெண் யாரென்று எனக்கு விளங்கவில்லை. அது யாராயிருந்தால் நமக்கென்ன' என்று சும்மா இருந்து விட்டேன்.

என் நண்பர் மாத்திரம் என்னைச் சும்மா விடவில்லை. அவர்கள் யாரென்றும், அப்பெண்ணை நான் பார்த்திருப்பேனென்றும் எப்படியாவது அவளைக் கண்டுபிடித்து கிழவனிடம் சேர்த்து அவர் கொடுக்கும் 500 யும் என்னைப் பெற்றுக் கொள்ளும்படியும் சொல்லி என்னைத் துப்பறியும் இன்ஸ்பெக்டராக ஏற்படுத்தினர்.

நானு அதற்கு அசைகிறவன். 'பெரிய மலையை அசைத்தாலும் என்னை அசைக்க முடியாதையா' என்று கண்டிப்பாய் கூறி விட்டேன்.

* * *

பிறகு நான் அன்று மாலையே என் நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்னைக்குக் கிளம்பினேன். நான் ஏறின வண்டியில் இரண்டொருவரே இருந்தனர். மாலை வேளையும் சிலுசிலுத்த தென்றலும் என் உள்ளத்தைப் பரவசப்படுத்தின. புகைவண்டியும் பும்பும் என்ற பேரிரைச்சலோடு சென்று கொண்டிருந்தது. நான் அந்த ஆனந்தத்திலீடுபட்டு மெய்மறந்திருந்தேன். என் வாயினின்றும் என்னையுமறியாமல் ஏதோ பாட்டுக்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

அந்த இன்பத்தில் நான் மூழ்கியிருக்கையில் வண்டி சடக்கென்று நின்றது. அது என் சிந்தனையைக் கலைத்தது. அது என்ன ஸ்டேஷன் என்பதைக் கவனித்தேன். அப்பொழுது பத்து

வயதுள்ள ஓர் சிறு பையனும் ஓர் கோஷா ஸ்திரீயும் நான் இருக்கும் வண்டியில் ஏறினர். அது சிறிய ஸ்டேஷனாதலால் வண்டியும் உடனே புறப்பட்டுவிட்டது. அந்தப் பையனும் ஸ்திரீயும் நான் உட்கார்ந்திருக்கும் எதிர் பெஞ்சியில் வந்து அமர்ந்தனர். அப்பெண் ஓர் துப்பட்டியால் தன்னை மூடிக்கொண்டிருந்தாள். பார்ப்பதற்குமட்டும் அத் துப்பட்டியில் இரண்டு துவாரங்கள் இருந்தன. தன்னை ஒருவரும் பார்க்கக் கூடாது; ஆனால் தான் மட்டும் எல்லா விஷயங்களையும் கவனிக்க வேண்டும் என்பது போலும் அவள் கருத்து.



நான் அவர்களைப் பாராமல் என் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு எதையோ கவனித்துக் கொண்டிருந்தேன். வண்டியில் ஏறியது முதல் என்னையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்த அவள் சிறிதும் கூச்சமில்லாமல் தான் கோஷா என்பதையும் மறந்து தைரியத்துடன் 'ஐயா, நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்' என்றாள். நான் அதைக் கவனியாதவன் போல சும்மா இருந்தேன். திரும்பவும் அப்பெண், 'சார் உங்களைத்தான் கூப்பிடுகிறேன்' என்றாள்.

இதேதுடா சனியன் மாதிரி நச்சுப்படுத்துகிறாள் என்று நான் நினைத்துக்கொண்டு ஒன்று மறியாதவன் போல அவள் பக்கம் திரும்பி, 'என்னம்மா கேட்கிறாய். நான் சென்னைக்குப் போகிறேன்' என்றேன். அப்பொழுது அவளது அகலக் கருநிறக் கண்கள் என்னையே நோக்கிக் கொண்டிருந்ததை அறிந்தேன்.

அந்தப் பெண் திரும்பவும் என்னை விளித்து 'தாங்கள் எந்த வீதியிலிருக்கிறீர்கள்? நாங்கள் சென்னைக்கு இப்பொழுதுதான் புதிதாகப் போகிறோம். அங்கு என் தமக்கை இருக்கிறாள்' என்றாள்.

இவளது உறவுகளை யெல்லாம் யார் இங்கு கேட்டார்கள். நான் இதுவரையில் யௌவனப் பெண்களிடம் பேசியதேயில்லை. அதுவுந் தவிர, இவள் யாராயிருந்தால் எனக்கென்ன? ஆனால் கேட்கும் கேள்விக்குப் பதில் கூறாமல் இருக்கவும் முடியவில்லையே என்று

மனதில் எண்ணிக்கொண்டு, 'அம்மா நான் சென்னைத் திருவல்லிக் கேணியில் இருக்கிறேன்' என்றேன்.

அவள் தன் சிரத்தை அசைத்தவண்ணம் 'நானும் அவ்விடத்துக் குத்தான் வருகிறேன்' என்று கூறிக்கொண்டே 'தங்களுக்கு என்ன உத்தியோகமோ' என்று நைசாக கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டாள். நானும் சலிப்பில்லாமல் 'நான் ஒரு டாக்டர். என் பெயர் ராஜன். உங்களுக்கு என்னைப்பற்றிய தகவல் போதுமா? இன்னம் ஏதாவது விஷயமிருந்தால் தெரியப்படுத்துங்கள்' என்றேன்.

அவள் சிறிதே வாய்விட்டு நகைத்து, 'என்ன அப்படிப் பேசுகிறீர்கள். சாதாரணமாய் ஒருவருக்கொருவர் யோகக்ஷேமம் விசாரித்து பழக்கம் செய்து கொள்வதில்லையா? நானும் இச்சிறு பையனோடு வருகிறேன். நீங்கள் பெரியவாராயிருப்பதால் எங்களுக்குத் துணையாகவுமிருக்கும். அதற்காக நான் உங்களோடு பேசி பழக்கம் செய்து கொள்ளலாமென்று நினைத்தேனேயன்றி வேறொன்றுமில்லை. இஷ்டமில்லாவிடில் கூறவேண்டாம்' என்றாள்.

அப்பொழுது எக்காரணத்தினாலோ அவள் போர்த்திருந்த துப்பட்டி முகத்தைவிட்டுக் கழுத்தின்மேல் விழுந்தது. அம்முகம் 'ஸ்திரீகளை வெறுக்காதே. அவர்கள் முகத்தைப் பார்த்தாலும் முக்கால் துக்கம் போம்' என்று கூறுவதுபோலிருந்தது. அவளது முகமானது பூரணச் சந்திரனைவிட அதிக அழகாக விளங்கியது. நல்ல சிவந்தமேனி. அந்த இளமை பொருந்திய வசீகரமுள்ள முகம் ஒரே நிமிஷத்தில் என்னைப் பிரமிப்படையும்படிச் செய்துவிட்டது. மறு விநாடியே நான் அவள்மேல் வைத்திருந்த விழியை வெகுபாடுபட்டு மறுபக்கம் திருப்பினேன். அவளும் ஒரு கொடியில் முகத்தைப் போர்த்துக் கொண்டாள்.

என் மனது ஏதோ ஓர்வித சஞ்சலத்தை யடைந்தது. 'ஓ! இதென்ன, மனமே சிதறாதே' என்று கூறிக்கொண்டேன். அடுத்த ஸ்டேஷன் வந்தது. கீழே யிறங்கி வேறு வண்டியில் ஏறலாமென இறங்கினேன். உடனே அப்பெண் 'ஏன் சார். இறங்குகிறீர்கள் எங்களுக்குத் துணை..................என்று இழுத்தாள்.

சற்று யோசித்தேன். மனமும் இடந்தாவில்லை. அவர்கள்மேல் இரக்கம் தோன்றியது. உடனே வண்டியிலேறி அவளைப்பார்த்து 'இல்லை. சும்மா கீழே இறங்கினேன்' என்று ஏதோ உளறினேன்.

திரும்பவும் சற்று நோங்கழித்து என்னை விடாமல், 'உங்களுக்கு விவாகமாகி யிருக்கிறதா?' என்று கேட்டாள்.

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. சிந்தனை ஒருவிதமாக ஓடியது. என் வாய் தானாகவே 'ஆயிருக்கிறது' என்று கூறிற்று. இதைக்கேட்டவுடன் அவள் நிமிர்ந்து உட்கார்ந்து 'சரிதான்' என்று கூறி ஓர் பெருமூச்சு விட்டாள்.

அதற்குள் நான் என் பக்கத்திலிருக்கும் பத்திரிகையை எடுத்து என் முகத்திற்கு நேராகப் பிடித்து வாசிக்கத் தொடங்கினேன். படிப்பிலோ மனம் செல்லவில்லை. அவளோடு வலிய பேசவும் மனம் துணியவில்லை. சிறிது சிறிதாகப் பொழுதும் கழிந்தது. சென்னையைக் கண்டேன்.

எல்லோரும் வண்டியைவிட்டு இறங்கினோம். அந்த யுவதி சற்றுமுற்றும்பார்த்து 'தம்பி நமக்காக ஒருவரும் வரவில்லைபோலிருக்கிறது' என்றாள். அப்பொழுது அவள் பயத்தால் நடுங்கினாள். அவ்வளவு பெரிய பட்டணத்தில் எப்படித் தனியாக போவது என்று விளங்கவில்லை போலும். அச்சிறுபையன் 'அக்கா! நீ பயப்படாதே! இந்நண்பருடைய துணையைக்கொண்டு சென்றுவிடலாம்' என்றான்.

'சரி, சரி, இன்னம் நம்மைப்பிடித்த சனியன் விடவில்லை' யென்று எண்ணிக்கொண்டேன். அச் சிறு வயதினர்களை துணையின்றி விடுவதும் பாவமாகத் தோன்றியது. உடனே நான் அவர்களை நோக்கி 'நீங்கள் ஏன் இப்படித் தனிமையாக வரவேண்டும். சிறுவர்களாகிய நீங்கள் தனிமையாக வருவது பிசகு. இனிமேல் எங்கும் இப்படிச் செல்லாதீர்கள்' என்று கூறினேன்.

'ஆமாம்; என்ன செய்வது' என்றாள் அந்நங்கை. நான் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு வெளியில் வந்தேன். எனக்காக எங்கள் வீட்டுக் கார் வந்து நின்றுகொண்டிருந்தது. அதில் நாங்கள் மூவரும் ஏறிக்கொண்டோம். வண்டியும் அதிசீக்கிரத்தில் சென்று என் வீட்டையடைந்து நின்றது. நான் இறங்கி டிரைவரை நோக்கி, 'இவர்களை இவர்கள் சொல்லுமிடத்தில் கொண்டுபோய் இறக்கிவிட்டுவா' என்று உத்திரவிட்டேன்.

வண்டியிலிருக்கும் அப்பேரழகி, என்னையும் என் வீட்டையும் ஒரு முறை பார்த்துவிட்டு, 'டியர் சார், நான் சென்று வருகிறேன். ஐ தாங்க்யூ வெரிமச்; மறுமுறை உங்களை வந்து காண்கிறேன்' என்று தனது அழகிய பற்கள் சற்றே வெளியில் தெரியும்படி புன்முறுவல் செய்து கூறினாள்.

'ஓ அதற்கென்ன வந்து பார்' என்று என்னையறியாமலே கூறினேன். உடனே வண்டியும் புறப்பட்டது.

*　　*　　*

இது நடந்து ஒருமாதமாயிற்று. நானாவது அப்பெண்மணியாவது அப்புறம் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. வழக்கம்போல நானும் என் நண்பன் ராமனாதனும் கடற்கரைக்குச் சென்று திரும்பி வந்துகொண்டிருந்தோம். அப்பொழுது மணி ஏழு; பூரணச் சந்திரனின் கலையும் மின்சார விளக்கின் ஒளியும் சேர்ந்து தெருவைப் பட்டப் பகலாக்கிக் கொண்டிருந்தன. அப்பொழுது என் கண்கள் தூரத்தில் போய்க்கொண்டிருந்த ஒருவரை நோக்கியது. அவருக்குப் பக்கத்தில் இன்னொரு காக்ஷியைக் கண்டேன். என்னுடன் ரயிலேறிவந்த அந்தச் சிறுபையனும், மின்னிடையாளும் அவரோடு ஏதோ உரையாடிக்கொண்டே சென்றனர். உடனே நான் எனது நண்பனை நோக்கி, 'அதோ பார், அவள் போகிறாள்' என்றேன். சட்டென்று அவனும் பார்த்து, 'என்னடா! அது யார்' அந்தப் பெண்? என்று என்னை ஆச்சரியத்தோடு நோக்கினான். 'நான் உன்னிடம் சொல்லவில்லையா? இவள்தான் அந்தப் பெண். துலுக்க ஜாதியாகிய இவள் நமது ஜாதியாகியனா கருணாகரரோடு பேசிக்கொண்டு போகிறாளே! இவள் ரொம்ப தைரியமுள்ளவளாயிருக்கிறாள்' என்று நான் கூறுகையில் ஓர் மோட்டார் யமன் சிறிது அஜாக்கிரதையாய்ப் போய்க்கொண்டிருந்த அந்தப் பெண்மேல் ஊாய்ந்து கொண்டு ஓடிற்று. அவ்வேகத்தால் மதி மருண்ட அப்பெண், 'ஐயோ, அத்தான்' என்று கூறி கீழே சாய்ந்துவிட்டாள்.



இந்த விபரீதத்தைக் கண்ட நானும் என் நண்பனும் பதறிவிட்டோம். நான் மெய்மறந்து, 'அந்தோ! உனக்கா இக்கதி' என்று வாய்விட்டுக் கூறினேன்.

என் நண்பன் துடியாகத் துடித்து 'ராஜன், என் இப்படி விழிக்கிறாய்? அந்தப் பெண்ணின் கால்களில் ஓடும்பிரவாகம் உன் கண்களுக்குத் தென்படவில்லையா? உனது தைரியம் எங்கே போயிற்று? சீக்கிரம் வா' என்று கூறி என் கைகளைப் பிடித்து இழுத்தான். ஒரு

நிமிஷம் பிரமித்தேன். மறு நிமிஷம் என் தைரியத்தைக் கைக் கொண்டு என் நண்பனேடு அப்பெண் விழுந்துகிடக்கு மிடத்திற்கு விரைந்து சென்றேன்.

ரதிதேவியைப் பழிக்கத் தக்க அழகுவாய்ந்த அம்மின்னிடை நல்லாள் நடுரோட்டில் கீழே கிடப்பது என் மனதுக்குப் பொறுக் கவேயில்லை ஓடோடியும் பக்கலில் சென்று கவனித்தேன். அவள் முழங்காலில் பலத்தகாயம் ஏற்பட்டிருந்தது. கண்களில் நீர் கொட்ட மெய்பதறி நின்ற கருணகாரைப் பார்த்து 'நண்பரே இதென்ன கோலம்' என்றேன். என்னைக் கண்டவுடன் அவர் என்னிடம் ஓடிவந்து எனது கைகளைப் பிடித்துக்கொண்டு 'ராஜன், நீ சமயத்தில் வந்தாய். என்மைத்துனியைக் காப்பது உன் பொறுப்பு. அவள் உயிர் உன் கையில் இருக்கிறது. நீ இது பரியந் தம் ஒரு ஸ்திரீக்காகிலும் சிகிச்சை செய்தது கிடையாது என்பதை நான் அறிவேன். இருந்தபோதிலும் இந்தச் சமயத்தில் நீ கைவிடு வது தகாது. கொஞ்சம் தயவுசெய்' என்ருர்.

நான் ஒன்றும் பதில் கூருமல் செய்யவேண்டியதைச் செய் தேன். அவளது முழங்கால் எலும்பு கொஞ்சம் முறிந்துபோயிருந் தது. அதற்குள் என் நண்பன் என்னிடம்கூட சொல்லாமல் வீடு சென்று காரைக் கொண்டுவந்து விட்டான். அப்பொழுது கருணு கார் என்னைப் பார்த்து 'நீ ஏற்படுத்தியிருக்கும் சொந்த ஆஸ்பத்திரி யிலேயே இவளை சிகிச்சைக்கு விடலா மல்லவா?' என்ருர். அதற் குள் ராமநாதன் 'நோய் தீரும்வரை இவாது கண்பார்வையில் இருந்தால்தான் நல்லது. தற்பொழுது உங்கள் வீட்டிற்கு இவளை எடுத்துப்போவது பிசகு. ஏறுங்கள் வண்டியில்' என்று ஓர் உத் திரவு போட்டான்.

உடனே எல்லோருமாகச் சேர்ந்து அப்பைங்கொடியை வண் டியிலேற்றி நாங்களும் அமர்ந்து செல்லத் தொடங்கினேம்.

* * *

பத்து நாட்கள் சென்றன. ஒருநாள் மாலை மூன்று மணிக்கு, நான், என்னறையில் அமர்ந்து தினசரிப்பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பெண்ணின் கால்கள் நன்ருய் குணமடைந் திருந்தன. அப்பெண்ணருகிலேயே எப்பொழுதும் இருந்து பணி செய்யும் நர்ஸ் என் அறைக்குள் நுழைந்தாள். நான் அவளைக்கண்டு 'என்ன விசேஷம்?' என்றேன். அதற்கு அவள், 'அந்தப்பெண் உங் களை இப்பொழுது பார்க்கவேண்டுமாம்; அவன் கையுடன் அழைத்து வரச் சொன்னுள்' என்ருள்.

நான் திடுக்கிட்டேன்; என்னிடம் அவள் எதைக்கூறப் போகி ருள் என நினைத்துக்கொண்டே அவளுடன் சென்றேன். அவள்